# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-1 ஜனவரி-2024 ஜமாத்துல்ஆகிர் - ரஜப், 1445




# காந்திஜி கொலை

அன்று முதல்... இன்று வரை...

## மறைக்கப்படும் உண்மைகள்?

# இஸ்ரேல் எனும் கொள்கை இனி இல்லை!

- அணி அணியாய் இஸ்லாத்தை ஏற்கும் பெண்கள்!
- 2023 உலக நிகழ்வுகள் ஒரு பார்வை!

بسم الله الرحمن الرحيم

(நபியே! அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும், உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்; (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்கமாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ளமாட்டோம் எனக் கூறும், (முஃமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால்; ‘‘நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!‘‘ என்று நீங்கள் கூறிவிடுங்கள்.(அல்குர்ஆன் : 3:64)


**கவர் ஸ்டோரி** காந்திஜி கொலை அன்று முதல்...இன்று வரை... மறைக்கப்படும் உண்மைகள் – 34

**இஸ்ரேல் எனும் கொள்கை இனி இல்லை! ஹமாஸின் சாதனைகள் – 04**

**பாலஸ்தீன மீட்பு போரில் ஊடகங்கள் – பார்வையும்.. போக்கும்.. கிளர்ந்தெழுந்த செய்தியாளர்கள் – 12**


**தொடர்கள்**


பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - விரிவாக்கப்பட்ட புதிய தொடர்..............20

பாலஸ்தீன மீட்பு போர் - ஒரே நாளில் இஸ்லாத்தை ஏற்ற 30 ஆஸ்திரேலிய பெண்கள் - மகளிர் மன்றம்..............30

பாலஸ்தீன பெண்களுக்கு பால் சுரப்பதே நின்றுவிட்டது..............32

மருத்துவம் - குளிர் கால பிரச்சனைகளை எதிர்கொள்வது எப்படி?..............48

சிலுவைப்போர் 2.0 - மேலைநாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்..............50

இந்தியாவில் முஸ்லிம்கள் - இஸ்லாமிய நாகரிகத்தை கட்டிக்காத்த இந்திய முஸ்லிம்கள்..............53

டெல்லி கலவரம் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - தொடர்..............62

பாலஸ்தீன குழுந்தைகளுக்கு அஞ்சலி செலுத்துவது குற்றமாம்!..............18

ஒரு பாலஸ்தீன இளைஞர் உலக மக்களுக்கு எழுதிய கடிதம்!..............30

2023 உலக நிகழ்வுகள் - ஒரு பார்வை?..............26

கொண்டாட்டங்கள் இல்லை - கடுமையான அச்சம் பயம், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கிருஸ்துமஸ்..............38

தூத்துக்குடி மாவட்டம் வெள்ள நிவாரணப் பணிகள் பக்கம் - 59



ஜனவரி – 2024 / ஜமாத்துல் ஆகிர் – ரஜப் 1445

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா – உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

சிறப்பு கட்டுரை 01




# இஸ்ரேல் எனும் கொள்கை இனி இல்லை! ஹமாஸின் சாதனைகள்

100 நாட்களாக நடந்து கொண்டிருக்க கூடிய இந்த யுத்தத்தை, இஸ்லாமிய போராளிக் குழுக்களான ஹமாஸுக்கும் - இஸ்ரேல், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் இவற்றுக்கிடையே நடந்து கொண்டிருக்கக் கூடிய போரை மீளாய்வுக்கு உட்படுத்துவது நல்லது எனக் கருதுகிறோம்.

இதில் ஹமாஸ் சாதித்தது என்ன? என்பதையும் நிச்சயமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஹமாஸ் எதிர்நோக்கிய இஸ்ரேல் என்ற எதிரி, ஓர் வளர்ந்த பொருளாதாரத்தை கொண்டது. மிக விசாலமான உலக அங்காடியைக் கொண்டது.

இராணுவ தளவாடங்கள் அதனுடைய உற்பத்திகளுள் ஒன்று என்றால் மிகையாகாது. அதேபோல் தங்களிடம் தான் உயர்ந்த தொழில்நுட்பங்கள்

இருக்கின்றன என்று காட்டிக் கொண்டிருந் தார்கள். இதுதான் அவர்களுடைய பலம் என்று நேற்று வரையிலும் நினைத்துக் கொண்டிருந்தோம். அடுத்தது எதிரி களிடமிருந்து வருகின்ற தாக்குதல்களை தடுப்பது மற்றும் எதிரிகளைத் தாக்குகின்ற மிக உயர்ந்த தொழில் நுட்பங்களைக் கொண்ட ஆயுதங்களை எல்லாம் கொண்ட ஒரே நாடு இஸ்ரேல், மற்ற நாடுகள் எல்லாம் தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனில், இஸ்ரேலிடம் என்ன விலை தந்தும் அவைகளை வாங்க வேண்டும் என்ற நிலையை இஸ்ரேல் பெற்றிருந்தது. ஆனால் இவை யெல்லாம் இப்பொழுது ஒன்றுமில்லையென ஆகியிருக்கின்றது.

இஸ்ரேலியினுடைய பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. அமெரிக்காவினுடைய டாலர்கள் இல்லை என்றால் இஸ்ரேல் இனி வாழ முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்ற நிலையை உருவாக்கி இருக்கிறார்கள் இஸ்லாமிய போராளிக் குழுக்கள்.

இஸ்ரேலினுடைய "அயன்டோம்" உட்பட பல ஆயுதங்களை இனி உலக அரங்கில் அவர்களால் விற்க முடியாது! ஏனென்றால் சாதாரணமாக தாழ்ந்து பறக்கின்ற ஏவுகணை களையே அவர்களால் தடுக்க முடியாது என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது.

இன்னும் அவர்களின் "அயன்டோம்", இஸ்ரேலையே திருப்பித் தாக்கும் என்ற நிலையை வெளிச்சம் போட்டு காட்டி விட்டார்கள். அதனை செயலிழக்கச் செய்யும் வழி முறையை கண்டுபிடித்து விட்டோம் என்பதை காட்டிவிட்டார்கள் ஹமாஸ் சகோதரர்கள்!

இப்பொழுது தொழில்நுட்பத்திலும் போராளிகள் குழுக்கள் தான் உயர்ந்து நிற்கிறார்கள். அவர்கள் நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டே, அதிலும் நிலத்திற்குக் கீழே வாழ்ந்து கொண்டே தங்களை பலப்படுத்திக் கொள்ள முடியும் என்று காட்டியுள்ளார்கள்.

ஆறு முறை காஸாவை பிடிக்கச் சென்ற இஸ்ரேல், ஆறாவது முறையும் சாதிக்க முடிய வில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது.

**“ என்ன விலை தந்தும், எங்களுடைய குழந்தை களே எங்களுக்கு முன்னால் இறந்தாலும், எங்களை காப்பாற்ற வேண்டிய ஆடவர்கள் எங்களுக்கு முன்னே இறந்தாலும் நாங்கள் இந்த காஸாவை விட்டு வெளியேற மாட்டோம் என்று பாடு படுகின்ற குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் தான் மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள்! ”**

## ஹமாஸ் சாதித்தது என்ன?

ஹமாஸ் உடைய சாதனை என்னவென்றால், எந்த இலட்சியங்களுக்காக அக்டோபர் ஏழு உருவாக்கப்பட்டதோ, அதில் என்னவெல்லாம் இருக்கின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அல் அக்ஸா பள்ளிவாசல் என்ற முஸ்லிம் களின் முதல் கிப்லாவை, இன்னும் முஸ்லிம்களுக்கு புனிதமான மூன்று இடங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற பைத்துல் முகத்தஸ் ஆகியவற்றை யூத மயமாக்குதலும், வரலாற்றை திரிப்பதையும் இவர்கள் திடீரென செய்ததால் தான் திடீர் தாக்குதலை நாங்கள் நடத்தினோம் என்று போராளி குழுக்கள் கூறினார்கள். இப்பொழுது அதனை முழுமையாக தடுத்தும் விட்டார்கள்.

இதில் வெறுமனே ஹமாஸை அல்லது போராளிக் குழுக்களை மட்டும் பாராட்டினால் போதாது. காரணம் கிழக்கு ஜெருசலத்தில் உள்ள மக்கள் நித்தமும் ஒரு விலையைத் தந்து பள்ளிவாசலில் நுழைந்து தொழுகையை நடத்தி, இன்னும் கூறினால் தொழுகையை நிலைநாட்டி அவர்கள் அதனை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் எதிர்த்து போராட வேண்டும் என்று அவர்களிடம் நிலவுகின்ற எண்ணமும், மனநிலையும் தான்!



இவையெல்லாம் தான் அதாவது, உலக அரங்கில் முஸ்லிம்களுடைய மிகப்பெரிய பிரச்சனையாகிய அல் அக்ஸா பள்ளிவாசலை காப்பாற்றுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற கண்ணியத்தை இந்த போராளிக் குழுக்களுக்கு பெற்றுத் தந்திருக்கிறது.

இரண்டாவது இலட்சியம், இஸ்ரேலுடைய பல்வேறு சிறைச்சாலைகளிலும், சித்திரவதை களுக்கும்,கொடுமைகளுக்கு ஆளாகி இறந்து கொண்டிருக்கின்ற சகோதரர்களை காப்பாற்ற வேண்டும் என்ற மிகப்பெரிய எண்ணம். அதில் அவர்கள் வெற்றி பெற்றார்களா? எனில், இல்லை. காரணம் ஒரு பகுதியைத்தான் இவர்கள் மீட்டிருக்கிறார்கள். இவர்கள் போரினைத் தொடங்கும் போது 5200 கைதிகள் இருந்தார்கள் இப்பொழுது பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் இருக்கிறார்கள்.

கண்ணை மூடிக்கொண்டு கடந்த 80 நாட்களாக பல அப்பாவிகளை கைது செய்து இருக்கிறார்கள் இஸ்ரேலிய ராணுவத்தினர். மாணவர்களை, பெண்களை, குழந்தைகளை கைது செய்திருக்கிறார்கள். பூரண வெற்றிக்குப் பின்பே சிறைவாசிகளை மீட்க முடியும் என்பது தெரிகிறது.

அடுத்ததாக தங்களுக்கென்று முழு சுதந்திரமுள்ள “ஒரு மாநிலம் வேண்டும் அல்லது ஒரு நிலப்பரப்பு வேண்டும்” என்ற கோரிக்கை. அந்தக் கோரிக்கையை வென்றிருக்கிறார்கள் என்று நாம் சொல்ல முடியாவிட்டாலும், அந்தக் கோரிக்கை யையும் தாண்டி அதைவிட விசாலமான ஒரு கோரிக்கையை இன்றைய உலக நாடுகள் வைக்கின்றன.

அது “ஒரே பாலஸ்தீனம்! அதில் எல்லோருக்கும் சம உரிமை!” என்ற பேச்சு எழுந்து விட்டது.

ஸ்பெயின் போன்ற நாடுகள் “பாலஸ்தீனத்திற்கு ஒரு தனிநாடும், அதற்கு ராமெல்லா தலைநகரம்” என்றும் அறிவிக்கவே செய்துவிட்டார்கள். அந்தளவிற்கு எல்லா உரிமையும் பெற்ற ஒரு நிலப்பரப்பை பெறுவதில் ஓரளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும். ஆனால் முழுமையான வெற்றி யுத்தத்தின் முடிவில் தான் தெரியும்.

### பாலஸ்தீன போரும் - உலக மக்களும்

இனி அவர்கள் சாதித்திருக்கின்ற ஒரு பெரிய வேலை, உலக மக்களை எல்லாம் தங்கள் பக்கம் அரவணைத்துக் கொண்டார்கள். இன்று உலகில் அவர்களுக்காக போராடாத மக்களே இல்லை! இன்று வரையிலும் உயிரிழந்திருக்கின்ற 24,285 பாலஸ்தீன மக்கள் தங்களுடைய உயிர்களைத் தந்து வெற்றி களைப் பெற்றிருக்கிறார்கள்.

ஒன்று அறிவிக்கப்பட்ட எதிரிகளான இஸ்ரவேலர்கள் கைகளில் இறப்பதால் உடனேயே சுவர்க்கத்தின் நுழைவுச்சீட்டுக் கிடைத்து சுவர்க்கத்திற்கு உள்ளால் பிரவேசித்து விடுகிறார்கள், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

இரண்டாவது மிகப்பெரிய வெற்றி, இன்று உலகில் 800 கோடி மக்களும் இவர்களின் பக்கத்தில் இருக்கிறார்கள். சில குறிப்பிட்ட அதிகார வர்க்கத்தில் இருக்கின்ற ஆட்சியாளர் களைத் தவிர.

இவர்களுக்காக துஆ செய்யாத பள்ளி வாசல்கள் இல்லை. அவர்களுக்காக போராடாத மக்கள் இல்லை.

“இதில் நாம் கூற வேண்டிய விஷயம் என்ன வென்றால், உண்மையான யூத சகோதரர் களும், கிறிஸ்தவ சகோதரர்களும் கூட இவர் களின் பக்கத்தில் இருக்கிறார்கள்.”

எந்த அளவிற்கென்றால் கிறிஸ்துமஸ் மற்றும் புது வருட பிறப்பையும் சோக நாட்களாக கொண்டாடி அதை குறிப்பாக நாங்கள் பாலஸ்தீன மக்களோடு இருக்கிறோம் என்று கூறுகின்ற அளவிற்கு ஒரு பெரிய வெற்றியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அந்த 24,285 பேரும் தங்கள் உயிரைத் தந்ததன் மூலம் பாலஸ்தீனத்தில் நடப்பது இஸ்ரேலினுடைய கொடுமைகளும், அத்து மீறல்களும், இனப்படுகொலைகளும் தானே தவிர முஸ்லிம்களின் தீவிரவாதம் அல்ல, போராளிகளின் தீவிரவாதம் அல்ல என்பது இன்று நிலை நிறுத்தப்பட்ட உண்மையாகி உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் எந்த தீர்மானத்திலும் அவர்களை தீவிரவாதிகள் என்று சொல்லவில்லை, ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மற்றும் இந்த உலகின் ஒரு பெரிய அமைப்பின் பொதுச் செயலாளர் அவர்கள் கூறியிருக்கிறார், “ஓர் வீண் விஷயத்திற்காக இவர்கள் சண்டையிவில்லை,





56 வருடங்களின் மூச்சுத் திணறும் ஆக்கிரமிப்பிற்கு எதிராகத் தான் அவர்கள் சண்டையிடுகிறார்கள்" என்று அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி இருக்கிறார்.

இந்தப் போராளிக் குழுக்கள் ஏகப்பட்ட உயிர்களையும் தந்து, தங்களையும் ஷஹீதாக்கிக் கொண்டு, தங்கள் மக்களில் பெரும்பாலானவரையும் அல்லாஹ்விடத்தில் அனுப்பி வெற்றிகளை குவித்திருக்கிறார்கள்.

### இஸ்ரவேலர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள்

எட்டு முகாம்களில் இஸ்ரவேலர்களை எதிர்த்துப் போராடுகிறார்கள். தொழில் நுட்பங்களில் இஸ்ரவேலர்களை பைத்திய மாக்கி இருக்கிறார்கள். இஸ்ரேலின் பாதி இடங்களில் மின்சாரமே இல்லை, கலங்கிப் போய் என்ன நடக்கும் என்று ஏங்கி இருந்திருக் கிறார்கள்.

அடுத்தது இந்த உலகத்தில் யூதர்கள் ஒரு நிம்மதியற்ற வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்றால் அது வந்தேறிகள் அதிகமாக குடியேறிய, இஸ்ரேல் தானே தவிர உலகத்தில் வாழ்கின்ற எந்த யூதனுக்கும் அந்த பிரச்சனை இல்லை என்று யூத ரப்பிகளும், உண்மையாகவே வேதங்களைத் தெரிந்தவர்களும் சொல்லக்கூடிய அளவிற்கு உலகமெங்கும் நிம்மதியாக வாழ்கிறார்கள் இஸ்ரேலை தவிர. இது ஒன்றே யூதர்களுக்கு போதுமான படிப்பினையாக இருக்கும், நிம்மதியான வாழ்க்கையை அவர்கள் நாடுவதாக இருந்தால், ஈரான் போன்ற நாடுகளுக்கு இவர்கள் இடம்பெயர்ந்து விடுவதே சிறந்ததாக இருக்குமே தவிர இஸ்ரேலில் இல்லை.

இதற்கெல்லாம் மேலாக கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்னவென்றால், இஸ்ரேலில் வந்து குடியேறி, நாம் பொன்னான வாழ்க்கையை வாழலாம், நாம் நினைத்த வற்றையெல்லாம் செய்யலாம் என்ற எண்ணம் யூதர்களிடமிருந்து முற்றாக அகன்றுவிட்டது. இப்போது அவர்கள் எப்படி நாம் வெளியே செல்லலாம் என்பதைப் பற்றி ஆலோசித்து, ஓடியும் விட்டார்கள்.

காஸாவில் இருந்து எவ்வளவு மக்கள் இடம் பெயர்ந்தார்கள் என்பதையும், காஸாவில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதையும் கணக்கிட்டுப் பார்த்தால் இஸ்ரேலை விட்டு வெளியேறிய மக்களின் எண்ணிக்கை

அதிகமாக இருக்கும். ஆகவே "The Idea of Israel" என்பது நொறுங்கிவிட்டது.

இதில் இன்னொரு மிகப்பெரிய வெற்றி என்னவென்றால், *Zionism* மற்றும் *Judaism* ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டை இந்த உலகம் புரிந்து கொள்கின்ற அளவிற்கு, போராளிக் குழுக்கள் போரினை முன்னெடுத்துச் சென்று இருக்கிறார்கள்.

பைடனே வந்து "நான் ஒரு யூதனாக இல்லை" என்று சொல்ல வேண்டிய நிலை வந்தது. ஆகவே யூதர்களுக்கு ஒரு நாடு அல்ல அது, ஜியோனிஸ்டுகள் என்ற கொலை வெறியர்களின், மனிதப் பிணங்களைத் தின்னும் கழுகுகளின் நாட்டுக்காகத்தான் அவர்கள் உழைத்தார்கள்.

இதனிடையே முழுமையாக இப்பொழுது நம்மையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற, ஒரு பெரிய செய்தி முஸ்லிம் நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக் கின்ற இணக்கம். பிணைகள் அறுக்கப்பட்டு ஈரானும் எகிப்தும் பேசுகின்ற ஓர் நிலை. காஸாவைப் பற்றி வருத்தப்படுகின்ற ஒரு நிலை.

அதுபோல ஹவ்தீஸ், அவர்களை ஆட்சி செய்து கொண்டிருந்தவர்களுக்கும் இடையே இருந்த சண்டை, சிரியாவிலே ISIL என்றெல்லாம் அமெரிக்கா குழப்பங்களை வைத்திருந்ததை இப்பொழுது யார்... யார்... எது... எது... என்பது தெளிவாகி அமெரிக்காவிற்கு எதிராக அந்த மக்கள் கிளர்ந்து எழுகின்ற நிலையையும், அமெரிக்கா எந்த அளவிற்கு அரபு நாடுகளை ஆக்கிரமித்து வைத்திருந்தது என்ற நிலையும் உலக மக்களுக்கு தெரிந்திருக்கிறது. இது போராளிகளினுடைய மிகப்பெரிய சாதனை!

இதுவரையிலும் அனைவரும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் எனில், நாமே சரியில்லை நம்மவர்களும் சரியில்லை என்று விரக்தி மட்டுமே உலக முஸ்லிம்களிடம் நிலைத் திருக்கும் என்ற நிலையை மாற்றி, எல்லோருக்குமே பெரிய சைத்தான் அமெரிக்காவும் அதற்குப் பக்கத்துணையாக நிற்கின்ற இஸ்ரேலும் தான் என்பதை தெளிவு படுத்தி விட்டார்கள். ஆகவே திரும்பும் திசை யெல்லாம் வெற்றி பெற்றது மட்டுமல்ல, இவ்வளவு நாளும் காஸா மக்கள் அகதிகள் முகாம்களில் வாழ்ந்தார்கள், இப்பொழுது இஸ்ரேலிலேயே யூதர்கள் அல்லது வந்தேறிகள் அகதிகள் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.



## 100 நாட்களாக எப்படி?



இதற்கெல்லாம் மேல் நமக்கு மிகவும் அதிசயமாகத் தெரிவது என்னவென்றால், எங்கிருந்து இவர்கள் 100 நாட்களாக உணவு பொருட்களைப் பெற்று சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்? காஸாவினுடைய தண்ணீர், நிலத்தடி நீர் குடிப்பதற்கு தகுந்த தண்ணீர் கிடையாது. எப்படி இவர்கள், அங்கு அழைத்துச் செல்லப் பட்டவர்களை உயிரோடு வைத்திருக் கிறார்கள்? அதுவும் மிகவும் நல்ல நிலையில் வைத்துள்ளார்கள் என்பது ஒரு ஆச்சரிய மாகவே இருக்கிறது.

வந்தவர்கள் சொன்ன தகவல்களை பார்க்கும்பொழுது, அவர்களால் விடுவிக்கப் பட்டவர்கள் சொன்ன தகவல்களை கேட்கும் போது அவர்கள் எந்த அளவிற்கு நிலத்திற்கு கீழ், ஆறடுக்கு, ஏழடுக்கு என்று பெரிய தொழில்நுட்பங்களையெல்லாம் கட்டமைத்து, உலகத்தில் வளர்ந்துவிட்ட நாடுகள் என்றெல்லாம் சொல்லக்கூடிய அமெரிக்காவிடமிருந்தும், ஐரோப்பிய நாடு களிடமிருந்தும், அவைகள் எங்கே இருக்கின்றன என்பதை கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு தங்களால் செய்ய முடியும் என்பதை எல்லோரும் காட்டியிருக்கிறார்கள்.

சகோதரர்களே, இந்த அரபு ஒற்றுமைக்கு அடுத்தார் போல் இஸ்ரேலினுடைய இராணுவ வீரர்களைச் சொல்கிறார்கள். போர் நிறுத்தத்திற்கு முன்பும் போரினை இவர்கள் தான் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருந் தார்கள், நெதன்யாஹூ அந்த ஏழு நாள் போர் நிறுத்தத்தின் போது, அழைத்துச் செல்லப் பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்கும் போதே, "நீங்கள் எங்களை காலை வாரி விட்டீர்கள், நீங்கள் தந்த அழுத்தங் களால் தான் போரை நிறுத்தினேன்" என்றார்.

ஆனால் யஹியா சின்வர் தான் போரை ஆரம்பித்தார் அவர்தான் நடத்துகிறார், அவர்தான் நிறுத்துகிறார், அவர்தான் ஆரம்பிக்கவும் செய்கிறார் எங்கள் கையில் எதுவும் இல்லை. இதை இப்பொழுது ஒரு இஸ்ரேலியா ராணுவ வீரரும், தளபதியும் சொல்லி இருக்கிறார்கள்.

தந்த விலை நம்மைப் பொறுத்த வரையிலும் அதிகம். ஆனால் சாதித்தது அதைவிட பன்மடங்கு அதிகம். நீங்கள் வெறும் பிணக் குவியல்களை மட்டும் வைத்துக் கொண்டு கணக்குகளை பார்க்கக்கூடாது. இதை ஒரு ஆய்வாளர் அழகாகக் கூறுவார், "லெபனானிலே ஒரு முஜாஹித் இறந்தபோது





ஒரு லட்சம் பேர் கூடி ஜனாஸா தொழுகை நடத்தி இருக்கிறார்கள், ஆனால் இஸ்ரேலில் ஒரு இராணுவ வீரன் இறந்தபோது மூன்று பேர் தான் அடக்கம் செய்யச் சென்றிருக்கிறார்கள். இது இரண்டையும் போட்டுவிட்டு அந்த ஊடகவியலாளர் கூறுகிறார், அவர்கள் கும்பலாக சென்றால் மரணித்து விடுவோமே என்று அஞ்சாமல் இலட்சக்கணக்கில் குழுமி இறந்தவர்களை அடக்கம் செய்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் மரியாதையையும் கண்ணியத்தையும் கொடுக்கிறார்கள். ஆனால் இஸ்ரேலிலோ எங்கே நாம் ஒன்றாக சென்றால் அழித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் மூன்று பேர் மட்டுமே ஒரு பிணத்தை அடக்கி இருக்கிறார்கள்."

இதில் நாம் மிகவும் பாராட்ட வேண்டியது என்ன விலை தந்தும், எங்களுடைய குழந்தைகளே எங்களுக்கு முன்னால் இறந்தாலும், எங்களை காப்பாற்ற வேண்டிய ஆடவர்கள் எங்களுக்கு முன்னே இறந்தாலும் நாங்கள் இந்த காஸாவை விட்டு வெளியேற மாட்டோம் என்று பாடுபடுகின்ற குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் தான் மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களால் தான் பாலஸ்தீனத்தில் முஸ்லிம்கள் என்ற அடையாளம் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆக இஸ்ரேல் தனக்கிருந்த அனைத்து பலத்தோடும், அமெரிக்காவினுடைய உதவியுடனும் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது என்பதை இந்த உலகத்திற்கு சொல்லி இருக்கிறார்கள் இந்த போராளி குழுக்கள்.


உலகின் மிகப்பெரிய இனப்படுகொலையின் தலைவன் அமெரிக்காவின் ஆட்சியாளர்கள் தான். அது யாராக இருக்கட்டும் பைடன், புஷ், கிளின்டன் அல்லது புஷ் 1 என யாராக இருக்கட்டும் அவர்கள் தான் என்பதை இந்த அறிந்து கொண்டிருக்கிறது.

அல்ஹம்துலில்லாஹ்.....!

**MGM**


# தாலிபானின் பிடியில்

விலை 90/-




- யுவான்னி ரிட்லி மேலை நாடெங்கும் பிரபல்யமான ஓர் பெண் பத்திரிகையாளர். அவர், பிரிட்டன் நாட்டிலிருந்து வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். 2001 செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவின் இரண்டு பெரிய கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. அவற்றை தகர்த்தவர்கள் ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள் என அமெரிக்கா அறிவித்தது. அதனால் ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டது.
- இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் உள்ளே புகுந்து அங்கு நடப்பனவற்றை அறிந்து கட்டுரைகளை எழுதி தனது பெருமையை உயர்த்தி கொள்ள முன்வந்தார் யுவான்னி ரிட்லி. முறையான அனுமதி இல்லாமல் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தார். ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்து கொண்டிருந்த தாலிபான்களிடம் சிக்கிக் கொண்டார்.

இந்நிகழ்வு அவரது மொத்த வாழ்க்கையையும் புரட்டிப் போட்டது......!

**தமிழில் : மு.குலாம் முஹம்மது**

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887




# பாலஸ்தீன மீட்புப் போரில்

## ஊடகங்கள் – பார்வையும், போக்கும்!

## கிளர்ந்தெழுந்த செய்தியாளர்கள்

அக்டோபர் 7, 2023லிருந்து நடந்து கொண்டிருக்கக் கூடிய இந்த பாலஸ்தீன போராட்டத்தில் பல்வேறு நாடுகள் கலந்திருக்கின்றன. அதில் பலநூறு செய்தி நிறுவனங்கள் உள்ளிருந்து செய்திகளை சேகரிக்கின்றன. அந்த செய்தி நிறுவனங்களைச் சார்ந்த பல ஊழியர்கள், அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஊழியர்கள் செய்திகளைச் சேகரித்து தங்களுடைய பத்திரிகையினுடைய *"News Room"* என்ற செய்தி அறைக்கு செய்திகளை அனுப்புகிறார்கள். அந்த செய்திறையில் - *News Room*-இல் இருப்பவர்கள் களத்தில் என்னென்ன நடக்கின்றன என்ற செய்திகளை தொகுத்து வெளியிடுவார்கள், அல்லது அப்படியே செய்திகளை வெளியிடுவார்கள்.

அப்படி செய்திகளை மக்களுக்கு தெரிவிக்கும் போது, அந்த செய்திகள் ஒரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என பத்திரிகை துறையில் சொல்வார்கள். அதுதான் *"4FS"*. அதாவது,

*"Free, Fair, without Favour and without Fear"*

*1.* சுதந்திரமாக எந்த கட்டுப்பாடுமில்லாமல் செய்திகளை சேகரிக்க முடிய வேண்டும்.

*2.* நியாயமாக செயல்பட வேண்டும். நடுவு நிலையோடு செயல்பட வேண்டும்.

*3.* ஒரு பக்கச் சார்பு இருக்கக் கூடாது.

சிறப்பு
கட்டுரை
02

*04. யாரைப் பற்றிய அச்சமும் இருக்கக் கூடாது.*

ஆனால் மேலைநாட்டு செய்தி நிறுவனங்கள், ஒன்று, அடிமனதில் இருக்கக் கூடிய இஸ்லாமா ஃபோபியோ, இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பு. இரண்டாவது, இப்பொழுது நடக்கின்ற போரில் இஸ்ரேலை பெரிதாகக் காட்டிட வேண்டும் என்ற எண்ணங்களில் செய்திகளை வெளியிடுகின்றனர். குறிப்பாக இஸ்ரேலை, இஸ்ரேலின் இனப்படு கொலைகளை நியாயப்படுத்த வேண்டும் என்றே செய்திகளை வெளியிடுகின்றன. ஏன் இவ்வாறு செய்திகளை மறைத்தும், திரித்தும் வெளியிடுகிறீர்கள்? என்றால், பல காரணங்களைச் சொல்கிறார்கள். இதில் களத்திலிருந்து செய்தியாளர்கள் தருகின்ற செய்திகளைத் திளீத்தும், மறித்தும் வெளியிடுகின்றார்கள்.

இதிலும் இவ்வாறு கேள்வி எழுப்புபவர்கள் பொதுமக்களோ வேறெவருமோ அல்ல இதே பத்திரிகை நிறுவனங்களைச் சார்ந்த 750 பத்திரிகை யாளர்கள் தான்.இவர்கள் ஓர் பெரிய அறிக்கையை தாங்கள் வேலை செய்கின்ற பத்திரிகைகளிடமும், மக்கள் மன்றத்திலும் வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் கேட்பது, இஸ்ரேலுடைய செய்திகளுக்கு ஒரு கோணத்திலான பார்வையும், பாலஸ்தீன மக்கள், போராளிக் குழுக்கள் இவர்களுக்கு முற்றிலும் வேறு கோணத்திலான பார்வையும் இந்த பத்திரிகைகள் வைத்துக் கொள்கிறன. இதைப் பற்றிக் கேட்டால், "News Room Policy" “செய்தி அறை விதி”, என்று கூறி விடுகிறார்கள். அப்படியெனில் உங்களுடைய Free, Fair, Without Favour and without Fear - உண்மை, நியாயம், பக்க சார்பு இல்லாமை, அச்சமின்மை, எல்லாம் என்ன ஆனது?

உண்மையில் அந்த செய்தி அறையில் இருப்பவர்கள் ஒரு நீதிபதியைப் போல் இருக்க வேண்டும். எந்த பக்கமும் சார்பில்லாமல் உண்மையை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். ஏனெனில் மக்கள் அந்த பத்திரிகைகள் மீது நம்பிக்கை கொண்டு பணம் கொடுத்து வாங்கிப்படிக்கிறார்கள். அதற்கு மேலாக அதை நம்புகின்றார்கள்.

இதிலும் பத்திரிகைகள் எல்லாம் விளம்பரங்கள் மூலமாகவே கோடிக்கணக்கில் சம்பாதித்து விடுகிறார்கள். இந்த பத்திரிகைகள் எல்லாம் தங்களது பத்திரிகைகளை ஒரு இலவச அறிக்கையாகவே மக்களுக்கு கொடுத்துவிடலாம், ஏனென்றால் விளம்பரதாரர்களிடம் இருந்தே இவர்களுக்கு பணம் வந்து குவிகின்றது.

ஒரு பத்திரிகையை தயாரிக்க இவர்களுக்கு ஆகும் செலவு 10 ரூபாய் என்றால், விளம்பரங்கள் வழியாக இவர்கள் அதே பத்திரிகைகளுக்கு பெறுவது 100 ரூபாய்.


பத்திரிகைகளை வாங்கி படிக்கும் போது அதில் உண்மை இருக்க வேண்டும், இவர்கள் பொய் செய்திகளை தரமாட்டார்கள் என்ற நம்பிக்கை பட்டிபவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் இப்பொழுதுள்ள பத்திரிகைகளில் இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் ஒரு மார்ச்சாத்துனேயே செய்திகளை வெளியிடு கின்றன. அதேபோல் இப்போது நடக்கின்ற இஸ்ரேல் - ஹமாஸ் போரினைப் பற்றியும் பொய் செய்திகளே வருகின்றன. செய்தியாளர்கள் தருகின்ற செய்திகள் மறைக்கப்படுகின்றது. திரிக்கப்படுகின்றது.

“பத்திரிகை துறையும் முஸ்லிம்களும்” என்ற தலைப்பில் நாம் ஏற்கனவே, ஊடக ஏகாதிபத்தியம் என்று விரிவாக விளக்கு கின்றோம். (Media Imperialism) என்ற அதாவது இந்த உலகில் ஆயிரம் நிகழ்வுகள் நடக்கின்றன ஆனால் நீங்கள் எதைப் படிக்க வேண்டும் என்பதை இந்த ஆதிக்க அல்லது அதிகாரவர்க்க மேலைநாட்டுச் செய்தி நிறுவனங்கள் முடிவு செய்கின்றனர். உங்களுடைய பொது புத்தியில் வளர்க்கிறார்கள். அதாவது இஸ்ரேல் என்றால் பாதிக்கப்பட்ட நாடு, ஹமாஸ் என்றால் தீவிரவாத இயக்கம், தாலிபான்கள் என்றால் தீவிரவாதிகள் என உங்களது பொது புத்தியில் பதிவு செய்கிறார்கள்.

இதற்கெதிராக இப்போது நடக்கும் யுத்தத்தில் 750 பத்திரிகையாளர்களும், (New York Times, News Times, New York Book Review.... போன்ற பல பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள்.) பெரிய பெரிய பத்திரிகைகளில் பணியாற்றி நேர்மை யானவார்கள் என விருதுகளைப் பெற்றவர்கள் இஸ்ரேலை நிறவெறி பிடித்த நாடு என்று கூறுகிறார்கள்.

காஸாவில் நடப்பது இனப்படுகொலை என்றும் கூறுகிறார்கள். மேலும் இவ்வாறு பத்திரியாளர்கள் கூறவில்லை, இப்படிக் கூறுவது, உலக மனித உரிமை அமைப்புகள் என்கிறார்கள்.

அதாவது இஸ்ரேல் ஒரு நிறவெறி கொள்கையை கொண்ட நாடு, அவர்கள் செய்வது இனப்படுகொலை (Genocide) அல்லது இன சுத்திகரிப்பு (Ethnic Cleansing) இனங்களை இல்லாமல் ஆக்குவது என்று இந்த அமைப்புகள் கூறியுள்ளன. உலகத்தில் உள்ள அனைத்து மனித உரிமை அமைப்புகளும் ஒப்புக்கொண்ட இந்த




சொற்களை, மேலைநாட்டு ஊடகங்களில் பயன்படுத்தும் பொழுது, இந்த வார்த்தைகள் "News Room" பாலிசிக்கு - செய்தி அறை கொள்கைக்கு எதிரானது என்று கூறி விடுகிறார்கள். இன்னும் சில உண்மைகளை தெரியப்படுத்துவதை மறுக்கிறார்கள் என இந்த பத்திரிகையாளர்கள் வேதனையடைகிறார்கள்.

பாலஸ்தீன மக்களின் அவலங்களை பற்றி நாங்கள் ஒரு வரி எழுதினால் கூட, அவர்கள் உடனேயே அதனை செய்தி அறையில் இருப்பவர்கள் நீக்கிவிடுகிறார்கள். ஏன் எனக் கேட்கும் பொழுது அதற்கு வேறு பதில்களை கூறுகிறார்கள், என்னவென்றால் இது எங்கள் பத்திரிகையின் இதர விதிகளோடு ஒத்துப் போகவில்லை - Consistent Editorial Process என்று பொருளே இல்லாமல் பதிலளிக் கிறார்கள்.

மற்றொரு சொல்லாட்சியையும் பயன்படுத்து கிறார்கள் Highly sensitive and Complex - Geo Political Circumstances அதாவது மிகவும் உணர்வுபூர்வமான குளறுபடிகள் நிறைந்த செய்தியாக இருக்கிறது. இந்தச் செய்தி மக்களுடைய உணர்வுகளைத் தட்டி எழுப்புவதாக இருக்கின்றது என்று கூறி விடுகிறார்கள்.

இதிலும் மிகவும் கேவலமான ஒரு காரணம் என்னவென்றால், Against the Survival of our News Agency அதாவது இது மாதிரியான செய்திகள், நமது செய்தி நிறுவனத்தின் வாழ்வாதாரமாக உள்ளது. அதாவது இஸ்ரேல் ஒரு நிறவெறிக் கொள்கை பிடித்த நாடு, இன சுத்திகரிப்பை குரூரமாக செய்து கொண்டிருக்கும் நாடு என்று கூறுவதை இவர்கள் விரும்பவில்லை என்பதே இந்த காரணங்களுக்கான மறைமுக நோக்கமாக தெறிகிறது.

இவற்றையெல்லாம் விட மக்களுக்கு மிக முக்கியமாக நாம் கூற விரும்புவது, ஒரு கட்டத்தில் இந்த பாலஸ்தீனத்தில் இதே போல் மக்களை விரட்டி அடித்தார்கள், இதேபோல் இனப்படு கொலைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். 80 நாட்களில் மட்டும் இவர்கள் செய்த இனப்படுகொலைகளின் எண்ணிக்கை 21,825.

கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 22,000. இதில் 70 சதவிகிதம் பெண்களும், குழந்தைகளும். இதே மாதிரியான தொடர் இனப் படுகொலைகளின் மூலமாகத்தான் இஸ்ரேலே உருவானது.

7,50,000பேர் அந்த நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். உலகமெங்கும் அவர்கள் அகதிகள் முகாம்களில் தான் வாழுகின்றார்கள். அனைத்து இடங்களிலும் இருக்கின்றன. சொந்த ஊர்களில் குடியிருந் தவர்கள், பரம்பரை பரம்பரையாக குடியிருந் தவர்கள், நபிமார்களினுடைய காலங்கள் எல்லாம் நிறைந்த பூர்வீக குடிகள் பூமி அது! அந்த இடத்தில் குடியிருந் தவர்கள் எல்லாம் உலகம் முழுவதும் அகதிகளாக இருக்கின்றார்கள்.

இப்பொழுதுதான் ஏழு லட்சத்து 50 ஆயிரம் பேர் வெளியில் சென்ற செய்தி வெளிவருகிறது. ஏனென்றால் முஸ்லிம்கள் தரப்பில் என்ன நடக்கின்றது, அதாவது இவர்கள் எப்படி எதிர் தாக்குதல் செய்தார்கள் என்பது மட்டுமல்ல, எப்படி இனப்படுகொலைகளுக்கு ஆளானார்கள், எப்படி அகதிகளாக மாற்றப்பட்டார்கள், எப்படி அகதிகள் முகாம்களில் வாழ்கின்றார்கள் என்கின்ற செய்திகளை எல்லாம் மக்களுக்கு சேர்ப்பதற்கான ஊடகங்கள் இல்லை.

இந்த காலகட்டத்தில் தான் டாக்டர் யூசுப் அல் கர்ளாவி அவர்களின் மாணவராக, இன்றைய காலகட்டத்தில் உலக மகா சக்தியாக திகழக் கூடிய கத்தார் உடைய மன்னர் எழுந்தார். முஸ்லிம் தகவல் உலகின் வியீகளைப் புரட்டிப் போட்டவர் தான், முஹம்மது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானி. இவர் மீடியாவைப் பற்றி எடுத்துக் கூறவே அல்ஜஸீரா வந்தது. அல்ஜஸீராவின் வருகையே, “மேலை நாட்டு செய்தி ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு போர் பிறக்கின்றன” என்றுதான் கூறினார்கள்.

அல்ஜஸீரா பாலஸ்தீனில் என்ன நடக்கின்றது என்பதை அரபு மொழியில் கூறியவுடன், அப்போதிருந்த ஜார்ஜ் புஷ், இனி உண்மை செய்திகளைத் தெரிந்து கொண்டு அரபு நாடுகள் எல்லாம் நமக்கு எதிராக திரும்பி விடும் என்று கூறினார். அவர் அஞ்சியதைப் போல் இன்று பெரும்பாலான அரபு நாடுகள் மட்டுமில்லாமல், உலகமே அமெரிக்காவுக்கு எதிராக திரும்பி விட்டது.

உடனே பிபிசி உட்பட அனைத்து சேனல்களும் இறங்கி, அரபு மொழியில் சேனல்களை ஆரம்பித்து பொய்களை ஒழுங்காக கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அல்ஜசீரா வளர்ந்தது. இந்த 50 நாட்கள் யுத்தம் தொடங்குவதற்கு முன்பாகவே, 1455 பேர், அல்ஜஸீராவைச் சார்ந்த செய்தி யாளர்கள் ஷஹீதானார்கள், இவர்கள் ஆயுதம் தாங்கி போராடியவர்கள் அல்ல இவர்கள் உலக மெங்கும் செய்திகளை சேகரித்து கொண்டிருக்கும் போது, மொசாத், சிஐஏ போன்ற உளவுத் துறைகளால் கொலை செய்யப்பட்டவர்கள். இவ்வளவு ஷஹீதுகளை சந்தித்துத்தான் ஒரு செய்தி நிறுவனத்தை நடத்த முடிகின்றது.

அல்ஹம்துலில்லாஹ்! இப்பொழுது மிடில் ஈஸ்ட் மானிட்டர் (Middle East Monitor), ஏ.ஏ நியூஸ்(AA News), அல்மனார்(Al Manar) அல்மாயதீன்(Al Mayadeen) இப்படி நிறைய செய்தி நிறுவனங்கள் வந்துவிட்டன. இனி இந்த செய்தி நிறுவனங்களில் இருந்து ஆயிரக்கணக்கான செய்தியாளர்கள், இது போன்ற நியாயமான செய்திகளை வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்! இன்னும் வருவார்கள். உண்மைகளை தைரியமாக வெளியிடுபவர்கள் இவர்கள். இவர்கள் தைரிய மாக வெளியிடவில்லை என்றால் இப்படியான செய்திகள் நம்மை வந்து சேரவே சேராது.

இன்றைக்கும் மேலை நாடுகள், இஸ்ரேல் பெரிய அளவில் பாதிக்கப்பட்டதாகவும், ஹமாஸ் ஒரு தீவிரவாத அமைப்பு என்றும் எழுதிக் கொண்டிருக்கின்றன.

எப்பொழுது பார்த்தாலும் இவர்கள் அக்டோபர் 7ஐ குறிப்பிடும் போது, முதலில் 1400 பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்று பொய் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு சொல்லாட்சிகளை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்றால், நமது நாட்டில் பாபர் மசூதி பிரச்சனை இருக்கும் பொழுது, பாபர் மசூதி வழக்கு என்றிருந்தது, பிறகு பாபர் மசூதியை இராமஜென்ம பூமி வழக்கு என்று எழுத ஆரம்பித்தார்கள். பிறகு இராம ஜென்ம பூமி முன்னர் வந்து பாபர் மசூதி என்பது பின்னால் போனது. இறுதியில் தீர்ப்பு வழங்கும்போது “அயோத்தியா தீர்ப்பு” என்று முடிந்தது.

அதேபோல் தான் இங்கு சொல்லாட்சிகள், காஸாவில் யாராவது இறந்தால், அவர் அவராகவே இறந்துவிட்டார், யாரும் குண்டுகள் போட்டோ, இன சுத்திகரிப்பு செய்தோ அவர்கள் இறக்கவில்லை ஆனால் இஸ்ரேலில் யாராவது இறந்தால் அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். அதுவும் போராளி குழுக்கள் கொலை செய்துவிட்டார்கள் என அழுத்துமாகக் கூறுவது, இப்படி சொல்லாட்சிகள். இதனை எதிர்த்தவர்களை வேலையிலிருந்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

மிகவும் பிரபலமான பத்திரிகை நியூயார்க் டைம்ஸ். அதன் தலை சிறந்த செய்தியாளர் எனப் போற்றப்பட்டவர் ஜாஸ்மின் ஹெடச் என்பவர் நிறைய உண்மையான செய்திகளை சொல்லிவிட்டார் என்பதற்காக அழுத்தங்களை அவருக்கு கொடுத்து பத்திரிகையிலிருந்து விலக்கி



வைத்திருக்கிறார்கள். இதிலும் இவர் நிறைய விருதுகளை பெற்றவர்.

அதாவது உங்களுடைய வேலைகள் பறிக்கப் படும் என்பதாக பயமுறுத்துகிறார்கள், நாங்கள் சொல்வது போல் எழுதுங்கள், நீங்கள் செய்திகளை கொண்டு வாருங்கள், நாங்கள் வெளியிடுகிறோம் என்று கூறுகிறார்கள். ஆகவே பொய்யான செய்தி கள் *(Fake News)* நிறைய வெளிவந்திருக்கின்றன. அல்ஜசீரா, இந்த தாக்குதல்களில் மட்டும் நூற்று இரண்டு (102) பேரை இழந்திருக்கிறது.

குறி வைத்து காஸாவில் கொலை செய்தார்கள், ஒரு பத்திரிகையாளரையும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த 14 பேரையும். இதை பத்திரிகையாளர்கள் எழுதுகிறார்கள், இவர்களெல்லாம் தாக்குதல் களின் போது இடையில் சென்று மாட்டிக் கொள்ளவில்லை. குறி வைத்து இஸ்ரேலிய படைகள் கொலை செய்திருக்கின்றன. நமக்கு வரக்கூடிய செய்திகள் மேலைநாட்டு ஊடகங்கள் நீங்கள் என்ன படிக்க வேண்டும், என்ன சிந்திக்க வேண்டும், எப்படி சிந்திக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதற்கு தகுந்தாற்போல் செய்திகளை திரித்தும், மறித்தும் சொல்லு கின்றார்கள்.

ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் அறுதியான வெற்றியை பெறும் வரைக்கும் அந்த பெயரை சொல்லக்கூட மக்களுக்கு தைரியம் வரவில்லை. அன்றைக்கு தீவிரவாத அமைப்பு, இன்றைக்கு எல்லா உதவிகளையும் செய்து கொண்டிருக்கும் அமைப்பு, உலகத்தில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் கொண்ட நாடு. ஆகவே இந்த ஊடக உலகம், ஒரு பெரிய அடிமைத்தனத்திற்கு உள்ளாகி இருக்கின்றது. அல்ஜஸீரா போன்ற ஊடகங்கள் மட்டுமே நடுவு நிலையோடு நிற்கின்றன.

நாம் அந்த செய்திகளை எல்லாம் வார்த் தெடுத்து, *(Cross Check)* செய்து ஆய்வுக்கு உட்படுத்தி தான் உங்களிடம் தெரிவிக்கிறோம். ஏதாவது உணர்ச்சிகளை தூண்ட வேண்டும் என்பதற்காக, எங்குமே நடக்காதவற்றை நாம் கொண்டு வந்து சேர்ப்பதில்லை!

ஒரு பெரிய சஹாதத்தை சந்தித்துத்தான் அல்ஜஸீரா போன்ற பத்திரிகைகள் செய்திகளை சொல்ல முடிகின்றது. அங்கு வரக் கூடியவர்கள் எல்லோரும் ஷஹீதாக மரணத்தின் வாயிலில்தான் நுழைகின்றோம் என்ற எண்ணத்தோடு, அறிவோடும்தான் வர வேண்டியதிருக்கிறது, ஏனென்றால் உண்மையை கூறப் போகிறோம்!

இந்த மேலைநாட்டு ஊடகங்கள் எல்லாம் மிகப்பெரிய அளவில் பணங்களைச் செலவு செய்துதான் சமூக வலைத்தளங்களில் பொய் களைப் பரப்பி வருகிறன.

இப்பொழுது ஒரு புரட்சி, பிபிசியிலும் வந்திருக்கிறது. பிபிசியை சேர்ந்த எழுத்தாளர்களும், செய்தியாளர்களும் ஒன்று சேர்ந்து ஒரு கடிதத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிடுவது இஸ்ரேலுக்கு சாதகமாகவும், பாலஸ்தீனர்களுக்கு எதிராகவும் ஒரு மாச்சர்ய உணர்வை நீங்கள் (மேலைநாட்டு ஊடகங்கள்) வெளிக்காட்டு கிறீர்கள் என்று.

ஓரளவு செய்திகளை ஒழுங்காக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த பிபிசி-யிலேயே இவ்வாறு நடந்துள்ளது.

மொத்தத்தில் 2000 பத்திரிகையாளர்கள், இந்த மேலைநாட்டு ஊடகங்களை விட்டு வெளியே கொண்டு வருவதற்கு தயாராக இருக்கிறார்கள்.

மாத ஊதியம் பெறும் பத்திரிகையாளர்கள்,




வேலை போய்விடும் என்ற பயத்தால் உண்மையை வெளியிட முடியாமல், அதாவது அங்குள்ள நியூஸ் ரூம் பாலிசிக்கு எதிராக செயல்பட முடியாமல் தங்களை அந்த பத்திரிகைகளுக்கு ஏற்றார் போல் மாற்றிக் கொள்கிறார்கள். உண்மையை பேச முடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இதனிடைய நம்மைப் போன்ற ஊடகங்கள் தான், செய்திகளை இரண்டு பக்கமும் பார்த்து, ஒரு நீதியான அணுகு முறையாக, ஒரு பக்கம் மட்டு மில்லாமல் அனைத்து செய்திகளையும் அலசி ஆராய்ந்து உங்களுக்கு செய்திகளைத் தந்து கொண்டிருக்கிறோம்.

ஹஸன் நஸருல்லாஹ் இதனை அழகாகக் கூறியிருக்கிறார், உங்களுடைய எதிரிகள் இஸ்ரேலும் அமெரிக்காவும் மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் சபையும், ஊடகங்களும் தான். அதாவது மீடியா யுத்தங்களிலும் நீங்கள் வெற்றி பெற வேண்டும். இந்த இஸ்லாமியப் போராளிகள்

குழுக்கள், அந்தப் போரையும் அழகாகவே நடத்தி வருகின்றார்கள். வென்றும் காட்டிவிட்டார்கள்.

அவர்களுக்கு இணைய சேவை இல்லை, மின்சாரம் இல்லை, தண்ணீர் இல்லை, உணவு பேச்சே இல்லை. இருந்தாலும் அவ்வப்போது அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மதிப்பீட்டில் இஸ்ரேலிய, பத்திரிகைகளே எழுதின நெதன்யாஹூவா? அல்லது அபூ உபைதாவா? என்றால் நெதன்யாஹூ கூறும் எந்த வார்த்தைகளையும் மக்கள் நம்பத் தயாராக இல்லை, அபூ உபைதாவினுடைய வார்த்தை களையே நம்புகிறார்கள்.

நெதன்யாஹூ நித்தமும் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் இஸ்ரேலைச் சேர்ந்த எவரும் அதனை பார்ப்பதில்லை, ஆனால் ஹஸன் நஸருல்லா பேசினால் அனைவரும் தொலைக்காட்சியின் முன் அமர்ந்து விடுகிறார்கள் காரணம் நமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய ஒருவர் பேசுகிறார் என்று. ஆகவே "சத்தியம் தான் வெற்றி பெறும்! உண்மைதான் வெற்றி பெறும்!"

இஸ்லாம் கூறுகிறது, "நீங்கள் உண்மையை உண்மைக்காக, நேரடியாக தெளிவாகக் கூறிவிடுங்கள்." அதைக் கூறுகின்ற பத்திரிகைகள் மட்டுமே வாழும்!

இந்த பத்திரிகை துறைகளில் தகிடுதத்தங்கள் நடக்கின்றன என்பதை மனதில் வைத்துக் கொண்டு செய்திகளைப் பாருங்கள் ஏனெனில் இன்று உலகம் முழுவதும் பத்திரிகையாளர்களே பத்திரிகைகளுக்கு எதிராக கிளம்பி இருக்கின்றார்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்! இன்னும் இதுபோன்று பத்திரிகை துறைகளில் பல செய்திகள் இருக்கின்றன, அதனை நாங்கள் உங்களுக்கு உடனுக்குடன் வைகறை வெளிச்சம் youtube தளத்தின் வழியே தெரிவிக்கின்றோம் இன்ஷா அல்லாஹ்!

**MGM**

# அமெரிக்க வெள்ளை மாளிகையின் முன்பு அமெரிக்க முஸ்லிம்கள் நடத்திய நாடகப் பிரச்சாரம்....!



**காட்சி எண் 01**

காஸா இடுபாடுகளுக்கிடையில் தனது கைக்குழந்தையை வைத்துக் கொண்டிருக்கிறார் ஒரு பாலஸ்தீன பெண்மணி. அவரை குறிவைத்து சுட்டுக் கொல்கிறது இஸ்ரேலிய ராணுவம்.



**காட்சி எண் 02**

அந்த பெண்மணி இறந்தவுடன், அவரது குழந்தையை காப்பாற்ற வருகிறார் ஒரு பாலஸ்தீன சகோதரர். அவரையும் குறிவைத்து கொல்கிறது இஸ்ரேலிய ராணுவம்.



**காட்சி எண் 03**

மூன்றாவதாக ஒரு பெண்மணி அந்த குழந்தையை காப்பாற்ற கையில் வெள்ளைக் கொடியுடன் வருகின்றார். அவரையும் சுடுகின்றது இஸ்ரேலிய ராணுவம்.



**காட்சி எண் 04**

**இவற்றையெல்லாம் அழுதுகொண்டே படம் பிடித்துக் கொண்டிருந்த பத்திரிகையாளர் பெண் அந்த குழுந்தையின் அருகில் வருகின்றார். அவரும் கொல்லப்படுகின்றார்.**




**காட்சி எண் 05**

**இப்படி தனது தாயையும், தன்னை காப்பாற்ற வந்த மூன்று சகோதர/சகோதரியையும் இழந்த அந்த குழந்தை அநாதையாக அந்த பிணங்களுக்கு மத்தியில் அழுது கொண்டிருக்கின்றது. அடுத்து அந்த குழந்தையிடம் யார் வருவார் என்று துப்பாக்கியை குறிவைத்து காத்திருக்கின்றது இஸ்ரேலிய ராணுவம். இதுபோன்ற வீரதீர செயல்களைத்தான் காஸாவில் இஸ்ரேலிய ராணுவம் செய்து கொண்டிருக்கின்றது என்பதை நாடகமாக வெள்ளை மாளிகை முன்பு நடித்து காட்டியிருக்கின்றனர் அமெரிக்க முஸ்லிம்கள்.**

***Source : MOM - 28/12/2023***




# பாலஸ்தீன குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்துவது குற்றமாம்

வாசகர் பக்கம்

கடந்த ஒருமாதக் காலமாக காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் இன அழிப்பு போரில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்தியாவில் நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தினத்தன்று, மும்பை ஜுஹூ கடற்கரையில் காசாவில் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு அமைதி வழியில் அஞ்சலி செலுத்திய 13 பேர் மீது வழக்கு பதிந்து கைது செய்துள்ளது மகாராஷ்டிர பாஜக கூட்டணி ஏக்நாத் ஷிண்டே அரசு.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் முஸ்லிம் மாணவர்கள்.

இப்பாசிச நடவடிக்கைக்கு தனது கண்டனங்களை பதிவு செய்துள்ளது மகாராஷ்டிர மாநில மக்கள் சிவில் உரிமை கழகம் (PUCL). இது குறித்து தனது அறிக்கையில், “அஞ்சலி செலுத்தியவர்கள் மீது, தடை உத்தரவை மீறியது உள்ளிட்ட மூன்று பிரிவுகளின்கீழ் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. சமூக வலைத்தளத்தில் “ஒற்றுமை இயக்கம்” (solidarity movement) என்ற பெயரில் அஞ்சலி செலுத்தும் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்திற்காக, ஜுஹூ கடற்கரையில்


Monday, January 1, 2024

INDIA Tomorrow
Journalism of Vision & Optimism

Narendra Modi's new-found bonhomie with Christians draws flak from activists questioning BJP's violence and...

Economy | Education | Politics | World Affairs | Law | Society | Crime | More

TRENDING NOW India-Maldives relations at a low ebb after decision to send back Indian troops amid signs of tilt towards China

Home › Islamophobia › PUCL condemns Mumbai Police for booking protesters against killing of Palestinian children

Islamophobia

PUCL condemns Mumbai Police for booking protesters against killing of Palestinian children

By admin indiatomorrow - November 20, 2023

For representational purposes only.

கூடிய மாணவர்களிடமிருந்து நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாகவே, அவர்கள் வைத்திருந்த கைத்தட்டிகளையும், போஸ்டர்களையும் மும்பை போலிஸ் பிடுங்கி கொண்டது. நிகழ்ச்சி முடிந்த பிறகு போஸ்டர்களை திரும்பப் பெற வந்த மாணவர்களை கைத்தட்டிகள், போஸ்டர்களை வைத்திருக்கும் படி நிற்கச் செய்து புகைப்படங்களை எடுத்துக் கொண்டது மும்பை போலிஸ்.

அதன் பிறகு அஞ்சலி செலுத்தியவர்களை பேருந்து நிலையத்திற்கு அழைத்து செல்வதாக கூறிய போலிஸ், அவர்களை வலுக்கட்டாயமாக கைது செய்து போலிஸ் வாகனத்தில் ஏற்றி ஜுஹூ போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றது. கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்களை எட்டு மணிநேரத்திற்கு மேலாக போலிஸ் நிலையத்தில் வைத்திருந்து அவரிகளிடமிருந்து ஆதார் உள்ளிட்ட தரவுகளையும் புகைப் படங்களையும் எடுத்து விடுவித்தது. கைது செய்து வழக்கு பதியும் அளவிற்கு 11 மாணவர்கள் போர் குற்றத்தில் எதுவும் ஈடுபட வில்லை.

இஸ்ரேலின் போர்-இன வெறியால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு அமைதி வழியில் அஞ்சலி செலுத்தினால் வழக்கு, கைது என பயபீதியை ஏற்படுத்தி ஜனநாயக விரோதமான அடக்கு முறையை செய்துள்ளது பாசிச பாஜகவின் கூட்டணி கட்சியான ஏக்நாத் ஷிண்டே அரசு.

**-ஆதினி**

**நன்றி - வினவு இணையதளம்**





ஷேஷாத்திரி குமார் இப்படிக் கூறகின்றார்: "இந்தியாவில் இன்றளவும் இந்து கலாச்சாரம் என்ற பெயரில் ஒன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கான அத்தனைப் பெருமையும் அலாவுத்தீன் கில்ஜித்குத்தான் செல்ல வேண்டும். அவர் வரலாற்றின் மிகப்பெரிய போர் வீரர், அவர் மாட்சிமை மிக்க ஆட்சி நடத்தியவர். இந்தியாவை மங்கோலியர் களிடமிருந்து காப்பாற்றினார். அதனால் அவர் ஒரு வினோதமான வகையில் இந்து மதத்தைக் காப்பாற்றினார்." (ஆதாரம் : *Why India Sould be greatful to Alavuddin Khiljil by Shashadri Kumar, Radiance : Vews Weekly = 39, December 2017*)

வரலாற்று ஆய்வாளர் *MONISH BORAH* மோனிஷ்போரா அவர்கள் இப்படி கூறகின்றார்; ஆனால் 13–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்துக்கள் பெரும்பாலும் இந்தியாவுக்குள்ளேயே வாழ்ந்து வந்தார்கள். ஆகவே மங்கோலியர்கள் இந்துக்களை ஓர் இனப்படுகொலைக்கு உள்ளாக்கி இருந்தால் இந்துக்கள் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். ஒரு வேளை அவர்கள் முற்றாகத் தடந்தெரியாமல் துடைக்கப்பட்டும் போயிருக்கலாம். இது இந்து மதத்திற்கு மிகப்பெரிய அழிவாக இருந்திருக்கும். (ஆதாரம்: *Alauddin Khilji the Saviour of Hindurism : By Monish Borah)*

**அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்**

**விலை: ரூ.40/-**

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**




# பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு

## யூத தேசிய நிதி – Jewish National Fund

**த**ன்னால் இயன்ற வழிமுறைகளைக் கையாண்டு தங்களுக்கென ஒரு நாடு வேண்டும் என்ற நம்பிக்கையை வளர்த்தபின், நிதி திரட்டும் வழிகளில் தாராளமாக இறங்கினான் ஹெசில்.

நிதியைத் திரட்டுவது அவனுக்கு அத்துணை சிரமமாக இருக்கவில்லை. காரணம் உலகெங்கிலும் யூதர்கள் வட்டித் தொழிலில்தான் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அதில் மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றிட இயலுமோ அப்படியெல்லாம் ஏமாற்றினார்கள். பெருந்தொகையைச் சம்பாதித்தார்கள்.

இவர்கள் வாழ்ந்த இடங்களில் இவர்களை மக்கள் வெறுப்பதற்கு காரணம் இவர்கள் வட்டித் தொழிலில் காட்டிய குரூரமும், அதில் கடைப்பிடித்த குள்ள நரித்தனங்களுந்தான் என்றால் அது மிகையாகாது.

ஷேக்ஸ்பியர்என்ற ஆங்கில மொழியின் ஆசான் தனது நாடகங்கள் ஒன்றில் *(Merchant of Venice) 'Shylock The Jew"* ஷைலாக் என்ற யூதனைப் பற்றி எழுதியவை அன்றும் இன்றும் மக்கள்

மனங்களில் நீங்காத நினைவுகளாக இருந்து வருகின்றன. யூதர்கள் வட்டித்தொழில் நடத்திய குரூரத்தைப் பற்றி அவர் இப்படி எழுதினார்.

ஷேக்ஸ்ஃபியரின் நாடகத்தில் "ஷைலாக் என்ற யூதன்" வட்டிக்குப் பிணையாகக் கேட்பது, கடன் பட்டவனின் (உடலில் ஒரு கிலோ) கறி. வட்டிக்குப்பணம் வாங்கியவனால் கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்திட இயலவில்லை. குரூர யூதன் கடன் வாங்கியவனின் நெஞ்சிலிருந்து ஒரு பவுண்ட் கறியை தோண்டியெடுக்கத் தயாரானான்.

மார்பில் கத்தியை வைத்த உடனேயே கடன் வாங்கியவன் இறந்துவிடுவான் என்பதை கூட கணக்கிலெடுக்காத யூதன் சுத்தியும், கையுமாக நின்றான். ஆனால் மக்கள் சார்பில் நீதிபதிகளாக அமர்ந்தவர்கள் சரியாக ஒரு பவுண்டு இறைச்சியை மட்டுந்தான் எடுக்கவேண்டும். இம்மியளவும் கூடுதலாகவோ குறைவாகவோ எடுக்கக்கூடாது எடுத்தால் யூதனை தண்டிப்போம் என்றார்கள். இதனால் யூதன் பின்வாங்கிவிட்டான்.

இப்படி யூதர்களை குரூர குணத்துடன் வட்டித் தொழில் செய்பவர்கள் என அன்றைய இலக்கியங்கள் இடித்துக் காட்டின.

குரூர குணங்கொண்டவர்கள் மட்டுமல்ல, மார்புக்கறியைக் கொய்ய முற்பட்டால் கடன் பட்டவன் இறந்து போவான் என்பதைக் கூட அறிந்திடாத முட்டாள்கள் யூதர்கள் என அன்றைய ஆங்கில இலக்கியங்கள் சித்தரித்தன. இந்தப் பிரச்சாரம் இலக்கிய வானில் கொடி கட்டிப் பறந்திட வகை செய்தன ஷேக்ஸ்பியரின் வருணனையும் வனப்பான சொல்லாட்சியும்.

மொத்தத்தில் யூதர்கள் கடன்பட்டவர்களின் பணத்தையும் உயிரையும் ஒன்றாய்ப்பிடுங்கி செல்வத்தில் செழித்துக் கிடந்தார்கள். இதனால் அவர்களால் தங்களுக்கென ஒரு நாட்டை விலைக்கு வாங்கிட தேவையானப் பணத்தைத் திரட்டுவதில் எந்தச் சிரமமுமிருக்கவில்லை.

இவர்கள் திரட்டிய நிதியின் பெரும் பகுதி, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்ததுதான். அப்போது ஐரோப்பிய நாடுகள் யூதர்களுக்குத் தந்த நிதிக்கு வரிவிலக்கு (Income Tax Exemption) வழங்கின.

மடைதிறந்த வெள்ளமாய்ப் பணம் வந்து குவிந்தது. ஆனால் அந்தப் பணத்தின் பெரும் பகுதியை ஹெசிலும் அவனது நண்பர்களும் தங்களது இலட்சியத்திற்காகச் செலவு செய்திட இயலவில்லை.

ஆமாம்! தொடக்க நாள்களில் ஹெசில் யூதர் களையே தங்கள் இலட்சியத்தில் இணைத்திட அரும்பாடுபட்டிட வேண்டியது வந்தது. இதற்காக ஒரு பெரும்தொகை செலவானது. தொடக்க நாள்களில் யூதர்களே இந்தத் திட்டத்தையோ இந்த இலட்சியத்தையோ ஏற்றிடவில்லை. மிகையான பொருள் செலவுக்கும் இடைவிடா பிரச்சாரத்திற்கும் பிறகே யூதர்கள் இந்தப் பிரச்சாரத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

யூதர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற பிரச்சாரத்தை யூதர்களிடையே மெத்த சிரமத்தோடு செய்திட வேண்டி யிருந்தது. அதற்காக ஒரு பெருந்தொகையைச் செலவு செய்திட வேண்டியது வந்தது.

இப்படிப் பண பலத்தைப் பயன்படுத்தி ஆட்பலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். காரணம் அவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்த காலங்களில் அவர்களுக்கு நிலங்களை விலைக்கு வாங்கிடும் உரிமையை ஐரோப்பியர்கள் வழங்கிட வில்லை.

யூதர்கள் தங்களுக்கென ஒரு தாய் நாட்டை ஐரோப்பாவில் தான் தந்திடவேண்டும் என்றார்கள். ஆனால் மொத்த ஐரோப்பாவும் யூதர்களின் இந்த வேண்டுகோளை மறுத்து விட்டது. ஐரோப்பா யூதர்களை அப்போது தீண்டத்தகாதவர்களாகவே பார்த்தது.

காரணம் அவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்த காலங்களில் அவர்களுக்கு நிலங்களை விலைக்கு வாங்கிடும் உரிமையை ஐரோப்பியர்கள் வழங்கிடவில்லை. உண்மையைச் சொன்னால் ஐரோப்பியர்கள் என்பதைவிட ஐரோப்பிய கிருஸ்தவர்கள் என்பதே பொருத்தமான சொல்லாட்சி.

ஐரோப்பியர்கள் தங்கள் வேண்டுகோளை மறுக்கவே யூதர்கள் தங்கள் கவனத்தைப் பாலஸ்தீன் பக்கம் திருப்பினார்கள்

தியோடர் ஹெசில் இதற்காக ஓர் குழுவை அமைத்தான் இந்தக் குழு 1897இல் பாலஸ்தீனை சுற்றிப் பார்த்துவிட்டு வந்து அறிக்கை ஒன்றை சமர்பித்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பாலஸ்தீனில்தான் தங்களுக்கென ஒரு நாட்டை நிறுவிட வேண்டும் என முடிவு செய்தார்கள். அதற்கான இடத்தைப் பாலஸ்தீனிலேயே விலைக்கு வாங்கிடுவது எனவும் முடிவு செய்தார்கள்.

பாலஸ்தீன் அப்போது துருக்கிய கலீபாவின்



ஆட்சியின் கீழிருந்தது. சுல்தான் அப்துல்ஹமீத் II (ரஹ்) அவர்கள் தாம் கலீபாவாக வீற்றிருந்தார்கள்.

"உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் விரட்டப்பட்ட யூதர்கள் துருக்கி கலீபாக்களின் ஆளுமிடங்களில் வந்து குழுமினார்கள். இங்கேதான் அவர்கள் மிகவும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு இவர்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள் என்றால் "அவர்கள் கலீபாவின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் தங்களுக்குள் ஒரு தனி ஆட்சியையே நடத்திக் கொண்டிருப்பதுபோல் வாழ்ந்தார்கள்." *(Running a state within the state)* என்று வருணிக்கின்ற அளவுக்கு வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இதை உலகின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் லாரி காலிங்ஸ் டெமினிக் லெப்பேரி ஆகிய இரட்டை எழுத்தாளர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.


"With few exceptions, the Jewish people had dwelt in relative security among the Arabs over the centuries. The golden age of diaspora has come in the Spain of the caliphs and the Ottoman turks had welcomed the Jews, when the doors of much of Europe were closed to them. The ghastly chain of crimes perpetrated on the Jewish people culminating in the Gematoriams of Germany had been inflicted on them by the Christian nations of Europe not those of the Islamic East."

O Jesulam (Page 11) (by Larry Collins and Dominique Lapierre)

இதன் பொருள் :

ஓரிரு விதிவிலக்குகளை விட்டுவிட்டால், பல நூற்றாண்டுகளாக யூதர்கள் அரபுக்களின் (முஸ்லிம்களின்) ஆட்சியின் கீழ்தான் பாதுகாப்பாக வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் உலகமெங்கும் அநாதைகளாக அலைக்கழிந்து கொண்டிருந்த நாள்களின் பொற்காலம், ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் காலத்தில் (கலீபாக்களின் ஆட்சியின் போது) தான் ஏற்பட்டது. துருக்கியில் வீற்றிருந்த கலீபாக்கள் தாம் உலகெங்கும் அலைக்கழிந்து கொண்டிருந்த யூதர்களுக்கு தங்கள் நாட்டின் கதவுகளைத்திறந்து தந்தார்கள். இந்தக் காலக்கட்டத்தில் கிருஸ்தவ ஐரோப்பாவின் வாசல்கள் அனைத்தும் அவர்களுக்கு அடைக்கப்பட்டு கிடந்தன. யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சங்கிலித் தொடராய்த் தொடர்ந்தன. கடுமை நிறைந்த இந்தக் கொடுமைகளின் உச்சம் ஜெர்மனியில் அவர்கள்கூட்டாகக் கொலை செய்யப்பட்டபோது ஏற்பட்டது. யூதர்களுக்கு இழைக்கப்பட்ட அத்தனை கொடுமைகளும் கிருஸ்தவத்தைப் பின்பற்றும் மேற்கு நாடுகளிலிருந்து வந்தவையே! நிச்சயமாக அவை இஸ்லாத்தைப் பின்பற்றிய கிழக்கு நாடுகளிலிருந்து வந்தவை அல்ல".

ஸ்பெயினில் இஸ்லாம் தன் நல்லாட்சியை 800 ஆண்டுகள் நடத்திக் கொண்டிருந்தது. அதுபோது தான் யூதர்கள் நன்றாக வாழ்ந்தார்கள். 1492இல்



ஸ்பெனியிலிருந்து முஸ்லிம்கள் விரட்டடட்டப் பட்டபோது கூட்டுக் கொலைகளுக்கு யூதர்கள் உள்ளாக்கப்பட்டார்கள் கிருஸ்தவர்களால்.

யூதர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்த நாள்களில் அங்குள்ள சேரிகளில் மட்டுந்தான் வாழ்ந்திட அனுமதிக்கப்பட்டார்கள்.

சேரிகள் எனப் பொருள்படும் ஆங்கிலச் சொல் Ghetto 'கெட்டோ' இவர்கள் வாழ்ந்த பகுதிகளைக் குறிப்பிடுவதுதான்.

தமிழ்நாட்டில் அதிகமாகப் புழக்கத்திலிருக்கும் லிப்கோ அகராதி Ghetto என்ற சொல்லுக்கு இப்படிப் பொருள் சொல்கின்றது.

*"A part of the city where jews live"* நகரில் யூதர்கள் வசிக்கும் ஒரு பாகம், சேரி *secluded place of living* தனி இடம், சேரி. மற்றொரு அகராதியான *Universal Delux Dictionary* இப்படிக் கூறுகின்றது *any place in a Town inhabited chiefly by jews.* நகரத்தின் யூதர்கள் பெரும்பான்மையாக வாழுமிடம். வரலாற்றில் வெனிஸ் என்ற நாடுதான் யூதர்களைச் சேரிகளில் வாழவைத்து இந்தச் சொல்லை ஆங்கில அகராதிக்குத் தந்தது.

ஜெர்மனியில் யூத பெண்கள் வாழ்ந்திட வேண்டும் என்றால் அவர்கள் ஒரு அனுமதியை அவசியம் பெற்றாக வேண்டும். அது *'Prostitute's Pass'* விபச்சார அனுமதி சீட்டு. கற்பைக் கண்ணெனப் போற்றும் யூதப்பெண்கள் கூட விபச்சார அனுமதி சீட்டைப் பெற்றுத்தான் வாழ்ந்திட இயலும். அதாவது அவர்களை எப்போது வேண்டுமென்றாலும், யார் வேண்டு மானாலும் விபச்சாரத்திற்கு அழைக்கலாம். அதே போல் யூதர்கள் (ஆண்களும்,பெண்களும்) புற நகரிலிருந்து நகருக்குள் புகுந்திட ஒரு சிறப்பு வரி ஒன்றை செலுத்திட வேண்டும். நகரில் வாகனங்கள் எதிலும் ஏறி அவர்கள் பயணம் செய்யக்கூடாது.

யூத பெண்களுக்குக் கட்டாயமாகத் தரப்பட்ட இந்த அட்டையை விபச்சாரிகளின் மஞ்சள் சீட்டு *(yellow Ticket of the Prostitutes)* என்றழைத்தார்கள்.

*1880*களில் ரஷ்ய சார் *'Tsar'* மன்னர்கள் யூதர்களை கூட்டாகக் கொலை செய்து கொண்டே இருந்தார்கள். ஆங்கில அகராதியில் பிரிதொரு சொல்லை இணைத்தார்கள். அதுதான் *Pogrom* (போக்ரம்) என்ற சொல். இந்தப் போக்ரம் என்ற சொல்லுக்கு அகராதி இப்படிப் பொருள் சொல்கின்றது. *An organised killing and looting of the Jews.* யூதர்களைத் திட்டமிட்டுக் கொள்ளையடித்தலும், கொலை செய்தலும்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து அவர்கள் விரட்டப் பட்டார்கள். ஆனால் அதற்குள் அவர்களிட மிருந்த கடைசி காசு கூடப் பிடுங்கப்பட்டு விட்டது. இப்படி உலகெங்கும் அலைக்கழிக்கப் பட்டவர்களின் கடைசிப் புகலிடமாகத் துருக்கிய கிலாபத் இருந்தது.

துருக்கிய கிலாபத்தில் இவர்கள் எந்த அளவிற்கு சுதந்திரம் பெற்று வாழ்ந்தார்கள் என்றால், கலீபா அப்துல் ஹமீது அவர்களிடமே தங்களுக்கு ஓர்

இடத்தை விலைக்குத் தரும்படி கேட்டிடும் நெஞ்சுரத்தைப் பெற்றார்கள். தண்டித்திருக்க வேண்டும் கலீபா அவர்கள். ஆனாலும் தன்மையாகத் தான் பதில் சொன்னார்கள்.

ஹெசிலின் பிரதிநிதியிடம்,

"ஹெசிலிடம் இது சம்மந்தமாக (அதாவது) பாலஸ்தீனத்தில் ஒரு சிறு பகுதியையேனும் விலைக்கு வாங்கிடுவது சம்மந்தமாக எந்த முயற்சியையும் எடுக்க வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். ஃபாலஸ்தீனத்தில் எள்முனை அளவுக்குக் கூட நான் விட்டுத் தரமாட்டேன். ஃபாலஸ்தீன் என்னுடைய சொந்த சொத்து அல்ல. அது என் சமுதாயத்தின் சொத்து. (அதாவது உலகெங்கும் வாழும் முஸ்லிம்களின் சொத்து). இந்தப் பூமிக்காக என் சமுதாயம் நீண்ட நெடியதொரு காலம் போராடி யிருக்கின்றது. பாலஸ்தீன நிலபரப்பு முழுவதையும் என் சமுதாயம் தன் இரத்தத்தால் பயிரிட்டிருக்கின்றது. யூதர்களாகிய நீங்கள் உங்களிடமிருக்கும் கோடிக்கணக்கான பணத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய ஆட்சியை என்றைக்கேனும் உங்களால் வீழ்த்த முடியும் என்றால் அன்று உங்களுக்கு பாலஸ்தீன் எந்த செலவுமின்றி கிடைத்து விடலாம். ஆனால் அது நிச்சயமாக என் வாழ்நாளில் நடக்காது. என்னுடைய உடலின் ஒரு பகுதியைத் துண்டித்து உங்களுக்குத் தந்துவிடுவது எனக்குக் கடினமானதல்ல. ஆனால் நிச்சயமாகப் பாலஸ்தீனில் ஒரு பகுதியை உங்களுக்குத் தந்திடுவது கடினமானது. அது நிச்சயமாக நடக்காது. முஸ்லிம் சமுதாயம் என்ற என் சமுதாயத்தின் உடல் இந்தப் பாலஸ்தீனப் பகுதி அதை கத்தரித்து உங்களுக்குத் தருவது என் வாழ்நாளில் நடக்காது."

*Source: Al Mujdama, Kuwait 4.8.1970 (Extracted and translated from the Message of Islam to Greet the fifteen Century A.H. p. 62. By Mohamed Al Ghazzali: Misri.)*

யூதர்கள் தங்களுக்கென ஒரு நாடு வேண்டும் என அலைந்து கொண்டிருந்தபோது வெள்ளை கிருஸ்தவ ஐரோப்பா அவர்களுக்கு இடம் தந்திடவில்லை. அவர்களை பாலஸ்தீனை நோக்கி விரட்டிற்று. உண்மையைச் சொன்னால் அவர்களை சில காலம் தங்களிடையே அகதிகளாகக் கூட வாழ்ந்திட அனுமதிக்க வில்லை. சுல்தான் அப்துல்ஹமீது அவர்கள் யூதர்களுக்குத் தனிநாடு ஒன்றை மறுத்தார்கள்.



ஆனால் அவர்கள் தனது உதுமானிய பேரரசின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் குடி அமரலாம், வாழலாம் என வாக்களித் தார்கள். யூதர்கள் நன்றி கொன்றவர்கள். எந்த முஸ்லிம்கள் அலைக்கழிந்து கொண்டிருந்த காலங்களில் அவர்களுக்கு அபயம்தந்து அரவணைத்தார்களோ அந்த முஸ்லிம்களையே சீண்டவும் சீரழிக்கவும் சித்தமானார்கள்.

கலீபா அப்துல் ஹமீத் என்னுடைய உடலை வேண்டுமானால் துண்டித்து தந்திடலாம். ஆனால் பாலஸ்தீனைத் துண்டித்துத் தந்திட இயலாது என்று கூறியது தியோடர் ஹெசிலுடைய நாட்குறிப்பிலும் இடம் பெற்றுள்ளது.

ஹெசில் இத்தோடு தன்னுடைய பேரங்களை நிறுத்திக்கொள்ளவில்லை. தனது பேரங்களை பின் வாசல் வழியாகத் தொடர்ந்தான் அதில் உதுமானிய பேரரசின் கடன்கள் உலகின் எந்தப் பகுதியிலிருந்தாலும் தான் அவற்றை செலுத்திட தயாராக இருப்பதாகச் செய்தி அனுப்பினான். யூதர்களின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட சுல்தான் அவர்கள் அதனை நிராகரித்து விட்டார்கள். தளரவில்லை ஹெசில் வேறொரு வழியைக் கையாண்டான். இஸ்தான்ஃபுல் இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தை நிர்மானித்துத் தருவதாக உறுதிதந்தான். அதையும் சுல்தான் அவர்கள் மறுத்து விட்டார்கள். *(Source: Muslim Arab Perspective)*

விலைக்குக் கிடைக்காத இடத்தை சதிகளின் மூலம் தங்களதாக்கிட முனைந்தார்கள். இன்ஷா அல்லாஹ் தொடரும்......

**MGM**

# இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படைகள் காஸாவில் நடத்தும் படுகொலைகளிலிருந்து தப்பித்த யாஸின் அல் அஸ்ஸார் உலக மக்களுக்கு எழுதிய ஒரு கடிதம்.......

“எங்கள் ஐந்து மாடி வீடு ஆக்கிரமிப்புப் படைகளால் குறிவைக்கப்பட்டு குண்டுவீசித் தாக்கப்பட்டது. நான் என்னுடைய மாமியார் மற்றும் அவர்களது குழந்தைகள் உட்பட என் குடும்பத்துடன் அமர்ந்திருந்தேன். எனது மகள் ஷைமா, மணமகள் மற்றும் அவரது கணவரும் பார்க்க வந்திருந்தனர். சில நிமிடங்களில், ஆக்கிரமிப்புப் படைகள் அனைவரையும் கொன்றது. நான் என் மகள் மரியா மற்றும் எனது மகன்கள் அகமது மற்றும் முகமது ஆகியோருடன் உயிர் பிழைத்தேன்.”

“இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு காஸாவில் தொடங்கியதில் இருந்து, நாங்கள் போரின் அனைத்து நிலைகளிலும் வாழ்ந்து வருகிறோம். எங்கள் அன்புக்குரியவர்களின் இழப்பை நாங்கள் சந்தித்துள்ளோம். முற்றுகை, போர் மற்றும் குண்டுவீச்சுகளை நாங்கள் சகித்துள்ளோம். இஸ்ரேலிய தாக்குதலின் தீவிரத்தால் எங்களால் தூங்க முடியவில்லை.

"நான் என் குடும்பத்தைப் பாதுகாக்க முயற்சித்தேன், ஆனால் ஆக்கிரமிப்புப் படைகளின் தாக்குதல்கள் எங்களைப் பிரித்தது. காசாவில் உள்ள எல்லா அப்பாக்களையும் போல, நான் விரும்பியதெல்லாம் என் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். கடுமையான தாக்குதலுக்கு மத்தியிலும் என்னால் முடிந்த அனைத்தையும் செய்து அவர்களுக்கு உதவினேன். நான் அவர்களை குண்டுவீச்சிலிருந்து பாதுகாக்க முயற்சித்தேன். ஆனால் ஆக்கிரமிப்பின் ஏவுகணைகள் எங்களைப் பிரித்தன. குண்டுவெடிப்பில் நான் இழந்தவை ஏராளம்.

“நான் வீட்டில் உள்ள அனைவருக்கும் மத்தியில் அமர்ந்து காபி பரிமாறிக் கொண்டிருந்தேன். திடீரென்று எங்கள் வீட்டில் வெடிகுண்டு வீசப்பட்டன. வீட்டில் உள்ள அனைவரும் ஷஹாதாவை வாசிக்க ஆரம்பித்தார்கள். குழந்தைகளின் அலறல் சத்தம் காற்றை நிரப்பியது. எங்கும் இருளும் வேதனையும் நிலவியது.

“என் உடல் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிக்கொண்டது. துப்பாக்கி குண்டுகள் மற்றும் தூசியால் மூச்சுத் திணறி, ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நான் இருந்தேன். அக்கம்பக்கத்தினர், சிவில் பாதுகாப்பு மற்றும் ஆம்புலன்ஸ் பணியாளர்களிடம் சத்தமாக கத்தினேன், ஆனால் யாருக்கும் கேட்கவில்லை.

“சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குப் பிறகு என் பக்கத்து வீட்டுக்காரர் என்னை இடிபாடுகளில் பார்த்தார். என் கால்கள் முற்றிலும் புதைந்திருந்தன. என்னை தோண்டி எடுக்க அரை மணி நேரத்திற்கும் மேலாக போராடினர்கள். இறுதியாக நான் குண்டுவெடிப்பு காயத்திலிருந்து வெளியே வந்தேன்.”

“என் மகள் மரியா 24 மணி நேரமும் இடிபாடுகளுக்கு அடியில் இருந்தாள். நான் எனது முழு குடும்பத்தையும் இழந்துவிட்டேன் என்று நினைத்தேன். ஆனால் எனது மகன்கள் முகமது மற்றும் அகமது ஆகியோர் குண்டுவெடிப்புக்கு சில நிமிடங்களுக்கு முன்பு வீட்டிற்கு வெளியே இருந்தனர். சில தேவைகளை வாங்கிக் கொண்டிருந்தனர். எனது 20 வயது மகன் முகமது காயமடைந்த மாமாவுடன் மருத்துவமனையில் தூங்கிக் கொண்டிருந்தான். எனது இரண்டு வயது மகள் மரியா எங்களுடன் வீட்டில் இருந்தபோது, குண்டுவெடிப்பின் கோரத்தை அவள் அனுபவித்தாள். மீட்புக் குழுவினர் 24 மணி நேரத்திற்குப் பிறகு இடிபாடுகளுக்கு அடியில் இருந்து அவளை மீட்டனர்.”

“மரியாவும் எனது உறவினரும் சுமார் 24 மணிநேரம் இடிபாடுகளுக்கு அடியில் இருந்தனர். அவர்கள் பெரிதும் அவதிப்பட்டனர். அவர்கள் விழித்தெழுந்து, மிகுந்த பயத்தில் அலறுவார்கள். சுயநினைவை இழந்துவிடுவார்கள். சுயநினைவு திரும்புவார்கள். மீண்டும் அலறுவார்கள். பின்னர் மீண்டும் சுயநினைவை இழப்பார்கள். பாதுகாப்பு குழுக்கள் அவர்களை அடையும் வரை இது தொடர்ந்தது. அவர்கள் மீட்கப்பட்டனர் மற்றும் இருவரும் குறிப்பிடத்தக்க காயங்களைத் பெற்றிருந்தனர்.”

“எனது மகள் மரியா குண்டுவெடிப்பில் இருந்து தப்பினாலும், அவள் தனது தாய், 11 உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்களை இழந்துள்ளாள். இனி மரியா தன் வாழ்நாள் முழுவதும் தன் தாய் மற்றும் அன்புக்குரியவர்கள் இல்லாமல் அனாதையாகவே வாழ்வாள். 75 ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீனம் ஆக்கிரமிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து நடக்கும் ஆக்கிரமிப்புக் குற்றங்களுக்கு இந்தக் கடிதம் ஒரு சாட்சியாக இருக்கட்டும்.”

"இன்ஷா அல்லாஹ், பாலஸ்தீனத்தை விரைவில் மீட்டெடுத்து விடுவிப்போம்."

***Palestine Chronicle***
***23/12/2023***



# 2023 உலக நிகழ்வுகள் ஒரு பார்வை

உலக நிகழ்வுகளையெல்லாம் ஒரு மீள் பார்வைக்கு உள்ளாக்கி பல கட்டுரைகளும் இடம்பெறத் துவங்கி இருக்கின்றன. பல ஆய்வுகளும் வெளியாகி இருக்கின்றன, நாமும் நமது பாணியில் அந்த ஆய்வு ஒன்றை இங்கு காண்போம்.

**இஸ்ரேல் - பாலஸ்தீன போர்**

இந்த ஆண்டின் இறுதிப் பகுதியானது காஸாவில் நடந்த நிகழ்வுகள் செய்திகளையும், ஊடகங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டன. இதன் மூலம் பல உண்மைகள் உலகிற்கு தெரிய வந்தது. இன்று உலக மக்கள் எல்லாம் ஒரே அணியில் ஒரு கூட்டம் மக்களுக்காக நிற்கிறார்கள் என்றால் அது பாலஸ்தீன மக்களுக்காகத்தான்!

இதனைப் பற்றி “ரம்ஸ் பரோடி” என்ற ஒரு நடுநிலையான எழுத்தாளர் கூறுவது, “காஸா ஓர் முக்கியமான பகுதியாக உலகத்தில் மாறிவிட்டது ஏனென்றால் இந்த காஸா பகுதியில் தொடர்ந்த யுத்தத்தின் விளைவாக, இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டு பல போராளிக் குழுக்கள் எழுந்தன. அவற்றையெல்லாம் ஈரான் ஒழுங்கமைக்கிறது என்பது வெளிப்படையாக உள்ளது. அதற்குப்பின் ரஷ்யாவும்,சீனாவும் இருக்கின்றது என்பது இன்னொரு தகவல்.”

இந்த நிகழ்வுகளுக்கு இடையே, அமெரிக்காவை மையமாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டிருந்த பிம்பம் திசை திரும்பி நேர் எதிரான கோணங்களுக்கு வந்துவிட்டது. அது சீனாவை மையமாகக் கொண்டு ரஷ்யாவுடன் ஓர் உலக மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

உலகப் பார்வை

எல்லாவற்றிற்கும் அமெரிக்காவுக்கு ஓடிக் கொண்டிருந்த மத்திய கிழக்கு நாடுகள் எல்லாம், சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் செல்கின்றதும் ஒரு விஷயமாக மாறிவிட்டது. ஆகவே அமைதியை உருவாக்குவது உலகத்தில் அமெரிக்கா அல்ல என்ற நிலை உருவாகியுள்ளது.

### உலக அரங்கில் அரபு நாடுகள் - BRICS

ஏப்ரல் 6, 2023ல் ஈரானுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையே ஒரு நல்லுறவை



ஏற்படுத்தி ஒப்பந்தத்தை கையெழுத்திட வைத்ததன் மூலம் இந்த உலக மையத்தின், மைய புள்ளிக்கு சீனா வந்து விட்டது. அதன் பிறகு பல மாற்றங்கள், பிரிக்ஸ் (BRICS) என்று ஒரு அமைப்பு -பிரிக்ஸ் என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளினுடைய முதல் எழுத்தை வைத்து தான் பிரிக்ஸ். *(BRICS is an inter governmental organization comprising Brazil, Russia, India, China, South Africa, Egypt, Ethiopia, Iran, Saudi Arabia and the United Arab Emirates)* என்று சொல்கிறார்கள். இந்த பிரிக்ஸ் இப்பொழுது ஐந்து அரபு நாடுகளை சேர்த்துக்கொண்டது, அனைத்தும் வளமான நாடுகள்.

ஜனவரி 1, 2024இல் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா ஆகிய நாடுகளும் இணைகின்றன. ஐரோப்பிய நாடுகளில் பிரேசில் மட்டுமே இதில் உள்ளது. பிறகு ரஷ்யா, இந்தியா, சீனா, தென் அமெரிக்கா என்று செல்கிறது. பிரிக்ஸ் என்பது பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு கட்டியமைக்கப்பட்டது தான். பல பொருளாதார நடவடிக்கைகளை இது மேற் கொள்கிறது, ஒரு பெரிய ஏற்பாட்டை அதில் செய்து கொண்டிருக்கிறது அதில் பிரிக்ஸ் நியூ டெவலப்மெண்ட் பேங்க் (Brics New Development Bank) என்ற ஒன்று வருகிறது.

இதுவரையிலும் உலகத்தில் பொருளாதார நடவடிக்கைகளை ஒரு தாதா- அமெரிக்காவின் கையில் இருந்து கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. அதைத்தான் சர்வதேச நிதி மையம் என்று பேசுவோம். இந்த சர்வதேச நிதி மையம் என்ன செய்து கொண்டிருந்தது என்பதை, நாங்கள் அடிக்கடி கோடிட்டு உங்களுக்கு காண்பித்து இருக்கிறோம். அது *The Clash of Civilization and the remaking of world Order*-இல் சாமுவேல் பி ஹண்டிங்டன் கூறுவது,

“சர்வதேச நிதி மையம் மூலமாக உலகத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தோம், அதே போல் இன்னும் சில நிறுவனங்களையும் வைத்துள்ளோம், உலக பொருளாதாரத்தை எல்லாம் இதன் வழியாகத்தான் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தோம். மேலை நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்திக் கொண்டிருந்தோம். மேலை நாடு களுடைய கொள்கைகளை, பொருளாதார கொள்கைகளை இதர நாடுகள் மீது திணித்துக் கொண்டிருந்தோம்.”

இதற்கு நேர் எதிராக “பிரிக்ஸ் நியூ டெவலப் மெண்ட் பேங்க்,” அது முழுவதுமாக மத்திய கிழக்கு நாடுகள் குறிப்பாக முஸ்லிம் மக்கள் தொகை அதிகமாக கொண்ட நாடுகளால் வனையப்பட்டது. இந்த முஸ்லிம் நாடுகளுக்கு பெரும்பாலும் வேறு நாடுகளிடமிருந்து கடன் வாங்கக் கூடிய பழக்கம் கிடையாது. அவர்கள் பொதுவாக கொடை கொடுக்கும் பழக்கம் உடையவர்கள்.

*Gross Domestic Product* அதாவது ஒவ்வொரு நாட்டிலும் அதனுடைய வளர்ச்சியும் அடுத்தது மக்களுடைய வாங்கும் திறன் இவையெல்லாம் இந்த பிரிக்ஸ் அமைப்பில் இருக்கக்கூடிய நாடுகளிடம் தான் அதிகம் இருக்கிறது.

உலக நாடுகள் எல்லாம் அமெரிக்காவின் அணியில் இருந்து ஒவ்வொன்றாக பிரிந்து வந்து விட்டன. “குழந்தை கொலைக்கு” உதவி செய்யக்கூடிய நாடு என்ற பெயர் அமெரிக்கா விற்கு வந்து விட்டது.

2022 பிப்ரவரியில் உக்ரேனுக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் நிறைய பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்தது. அதில் வெனின்சுலா மிகவும் பாதிக்கப்பட்டது. பிறகு வெனின்சுலாவும், ரஷ்யாவும் எண்ணெய் விற்பனையை மத்திய கிழக்கு நாடுகளில் விற்பதற்கான ஆலோசனையை தொடங்கி விட்டன. இந்தியாவும் ரஷ்ய எண்ணையை வாங்கி நல்ல விலைக்கு விற்றது. இப்படி இவர்களுக் குள்ளால் பரிவர்த்தனைகள் அதிகமாகிறது. அனைத்திற்கும் அமெரிக்காவை எட்டிப்

பார்ப்பது, அமெரிக்காவினுடைய பொருளாதார கொள்கைகளுக்கு அடிமையாவது என்ற நிலை அடிபட்டு இருக்கிறது.

இதன் மூலம் இஸ்லாமிய நாடுகளுக்கிடையே இருந்த பல பிரச்சனைகள் தீர்ந்து விட்டன. அதற்கு முத்தாய்ப்பாக இருந்தது ஏப்ரல் 6ஆம் தேதி சவுதிக்கும், ஈரானுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். இதன் மூலம் அறுநூறு கோடி ரூபாயை காஸாவிற்கு மட்டும் தான் செலவழிப்போம் என்று வாங்கி இருக்கிறார்கள்.

### ஆப்கானிஸ்தானின் வளர்ச்சி!

*2022* முழுவதுமாக ஆப்கானிஸ் தானின் தாலிபான்கள் தங்களது பொருளா தாரத்தை முன்னேற்றிவிட்டார்கள். அவர்கள் தீவிரவாதிகள் அல்ல என்று நமது இந்தியாவில் நிறைய



கட்டுரைகள் வெளிவருகின்றன, தாலிபான்கள் உடைய அண்டை நாட்டு கொள்கைகள் எல்லாம் நன்றாக இருக்கின்றது என்று.

பாகிஸ்தான் எவ்வளவோ முயற்சி செய்தது தாலிபான்களை இந்தியாவிற்கு எதிராக திருப்பலாம் என்று! ஆனால் பாகிஸ்தானை நன்றாக புரிந்து கொண்ட தாலிபான்கள், அதனை செய்யவில்லை. இப்பொழுது உலக அரங்கில் தாலிபான்களின் பொருளாதாரம் ஒரு முக்கிய விஷயமாக காட்டப்படுகிறது.

முஸ்லிம்களுக்குள், "ஈரான் அதனை மையமாகக் கொண்டவர்கள் எல்லாம் ஷியாக்கள், ஹமாஸ் அதனை மையமாகக் கொண்டவர்கள் எல்லாம் சன்னிகள் என்று பேசிக் கொண்டிருந் தார்கள். இவைகள் எல்லாம் மொத்தமாக அடிபட்டு இப்பொழுது அனைவரும் ஒரே அணியில் இருக்கக்கூடியதை ஏற்படுத்தியது பாலஸ்தீன போர். இதை சாதித்தது ஹமாஸ் மற்றும் இதர போராளி குழுக்களும் தான்.

தீவிரவாதம் என்ற பெயர் மறைந்தது மட்டுமல்ல! எதிர் புறத்தில் என்ன நடந்தது என்றால் இஸ்லாமாஃபோபியா என்ற இஸ்லாமிய வெறுப்பு அடி வாங்குகிறது. முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று கட்டமைத்தது, அவர்களை கொலை செய்வதற்குத்தான் என்பதை உலக மக்கள் புரிந்து கொண்டார்கள்.

### அமெரிக்காவின் வீழ்ச்சி

இந்த *2023* ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தகிடுதத்தங்கள் எல்லாம் வெளியாகி இருக்கின்றன.

கிறிஸ்தவ சகோதரர்கள், யூதர்கள் என அனைவருமே ஒரே அணியில் இருக்கிறோம். அனைவரும் சேர்ந்து வாழ முடியும் பாலஸ்தீனில், இஸ்ரேல் என்ற நாடு வேண்டாம் என்று யூத ரப்பீன்களே கூறுகிறார்கள். யூத மதத்தை ஒழுங்காக புரிந்து கொண்ட அனைவரும் கூறுகிறார்கள்.

இந்த ஒற்றுமையை காண்பிக்கும் அளவில், கிஜீஸ்துவர்கள் கிறிஸ்துமஸை கொண்டாட வில்லை. புது வருட பிறப்பையும் கொண்டாட வில்லை. இந்த புதிய உலக உருவாக்கத்தில் *(New World Order)* அமெரிக்காவுடைய தகிடுதத்தங்கள், இஸ்ரேலினுடைய கொடுமைகள் அனைத்தையும் புரிந்து கொண்டு, யாரெல்லாம் கொடுமை யாளர்கள், தீவிரவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தோமோ அவர்கள் தான் உண்மை



யிலேயே மனிதாபிமானமிக்க நல்லவர்கள், மனிதர்கள் என்று உலக மக்கள் கண்டு கொண்டனர். இன்னும் இந்த பொய்யர்கள் மறைத்த பல உண்மைகள் 2024இல் வெளியே வரும் அதையெல்லாம் மக்களுக்கு கொண்டு சேர்ப்போம்.

மொத்த மனித சமுதாயமும் நிம்மதியாக வாழக் கூடிய ஒரு நிலையை உருவாக்குவோம். அதற்கான அமைப்புகள் பலவற்றை ஏற்படுத்தியும் விட்டார்கள்.

**2024-இல்......**

2024ஆம் ஆண்டு புதிய, புதிய திருப்பங்களைக் கொண்ட, புதிய உலக சிந்தனைகளை கொண்ட, நியாயமான மனித உரிமை சிந்தனை கொண்ட வற்றையெல்லாம் வெளியே கொண்டு வர இருக்கின்றது.




பன்னாட்டு நீதிமன்றம் இஸ்ரேலையும், அதற்கு பக்கத்துணையாக இருந்த அமெரிக்காவையும் அதற்குப் பின்னால் இருந்த ஐரோப்பிய நாடு களையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் என்று சொன்னால், இந்த மனித வரலாற்றின் குற்றவாளிகள் யார் என்பது உலகிற்கு தெரியும். யார் யாரெல்லாம் மனிதத்தை வளர்த்தார்கள் என்பதும் உலகிற்கு தெரியவரும். அதன் மூலம் உலக மக்கள் அமைதியாக வாழக்கூடிய நிலையும் ஏற்படும்!

மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகள் நமக்கு காத்திருக்கின்றது என்றாலும், உலகம் முழுவதும் வலதுசாரிகள் அதிகமான ஆதிக்கத்தை மக்கள் மன்றத்திலே பெற்று வந்த ஆண்டாக 2023 இருந்தது. அவர்களுடைய முகத்திரையெல்லாம் கிழித்துக் காட்டி, வலதுசாரிகள் இனி மக்களுடைய ஆதரவை பெற முடியாது என்ற அளவிற்கு இந்த உலக நிகழ்வுகள் மக்களுக்கு பாடம் புகட்டும் என்று எதிர்பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்!

மு.குலாம் முஹம்மது


# இஸ்லாம் ஒன்றே வழி

புத்தம் புதிய மறு பதிப்பு




- ஒவ்வொரு நாடும். ஒவ்வொரு தனி மனிதனும் கிடைப்பதையெல்லாம் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகின்றான். இதுதான் இன்று வல்லரசுகளிடையே காணும் ஊமைச் சண்டைகளுக்குக் காரணம். விவசாயத் துறையில் கண்டெடுத்திருக்கின்ற புதுமையான கண்டுபிடிப்புகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள், பெட்ரோல், கச்சாப் பொருள்கள் இவையெல்லாம் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. மாறாக மனிதனுக்குத் தீமை பயப்பதாகவே இவை மாறியுள்ளன.

- சிறிய நாடுகளெல்லாம் வல்லரசு களின் நயவஞ்சகத்திற்கும், சதிகளுக்கும் உட்பட்டுத் தங்களது மனித உரிமை களையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றன. நாம் மேலே சொன்ன கண்டு பிடிப்புகள் பெரிய நாடுகளில் இடம் பெறுமேயானால் அந்தக் கண்டுபிடிப்புகள் மனித இனத்திற்கும் உலக அமைதிக்கும் ஒரு பெரும் ஆபத்தாகவே முடியும். இந்தக் கண்டுபிடிப்புகளெல்லாம் இந்தப் பெரிய நாடுகவர்களின் ஆயுத பலத்தையும் ஆதிக்க பலத்தையும் அதிகப்படுத்தவே பயன்படுத்தப்படும். இதனால்தான் நமது கல்வியறிவு, விஞ்ஞானம், இயற்கை வளங்கள், திறமைகள் இவையெல்லாம் மனிதனை அழிப்பதற்கும் இமைப்பொழுதில் இந்த உலகத்தையே அழிக்கின்ற விதத்திலும் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறகின்றோம். - நூலிலிருந்து

வேர்கள் வெளியீட்டகம்

மூலம்: அனிசுத்தீன் அஹமது

தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

விலை – ரூ.120/-

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



# பாலஸ்தீன மீட்பு போர்

## ஒரே நாளில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட

# 30 ஆஸ்திரேலிய பெண்கள்

கடந்த மூன்று வாரங்களுக்கு முன் துருக்கி பத்திரிகையான yenisafakenglish இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு வீடியோ பதிவு வெளியாகின்றது. அந்த வீடியோ பதிவு ஆஸ்திரேலியாவிந் மெல்பர்ன் பகுதியில் அமைந்துள்ள Meadow Heights பள்ளி வாசலிலிருந்து வெளியிடப்பட்டது.

அதில் 30 ஆஸ்திரேலிய பெண்கள் ஒரே நேரத்தில் திருக்கலிமாவை மொழிந்து தங்களை இஸ்லாமிய மதத்தில் இணைத்துக் கொள்ளும் காட்சிகள் ஒளிபரப்பாயின. அதன் பின் மூன்று வாரங்கள் கடந்து இன்று வரை இன்ஸ்டாகிராம் மற்றும் பிற சமூகவலைதளப் பக்கங்களில் மிகப்பெரிய பேசும் பொருளாக மாறி விவாதிக்கப்பட்டு வருகின்றது.

**காஸா மக்களின் பாலஸ்தீன மீட்பு போர்தான் காரணமா?**

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த 30 பெண்களும் சொல்லும் ஒரே காரணம், "காஸா மக்களின் உறுதியும், நம்பிக்கையும் தான் எங்களை இஸ்லாத்தையும், திருக்குர்ஆனையும் ஆராய வைத்தது." என்பதுதான்.

மகளிர் மன்றம்

### கிரிஸ்டின் க்ரோனோகோனாக்

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட 30 பெண்களில் ஒருவரான கிரிஸ்டின் க்ரோனோகோனாக் கூறுகையில்,

“காஸா மக்களின் மன உறுதியும், அசைக்க முடியாத நம்பிக்கையும் என்னை இஸ்லாத்தை நோக்கி சிந்திக்க வைத்தது. பின்னர் இஸ்லாத்தில் உள்ள ஓரிறை நம்பிக்கை என்னை மிகவும் கவர்ந்து விட்டது. இப்போது வரை பாலஸ்தீனத்தில் நடக்கும் பிரச்சனைகளால் தினம் தினம் நான் அழுதுக் கொண்டிருக்கின்றேன்” என்கிறார்.

### அப்பி ஹஃபீஸ்

இன்னொரு பெண்ணான அப்பி ஹஃபீஸ் கூறுகையில், “இந்தப் போரில் காஸா மக்களின் உறுதியை நான் கண்டது, எனது வாழ்க்கையின் முக்கிய தருணமாக பார்க்கிறேன். அந்த மக்களின் உறுதிதான் என்னை குர்ஆனை நோக்கி தள்ளியது. அதன் பின் எனக்கு இஸ்லாத்தின் மீது நல்ல மறியாதை ஏற்பட்டது. அமெரிக்காவில் உள்ளவர்கள் காஸா மக்களின் வெற்றிக்காக தினம், தினம் இறைவனிடம் கையேந்துகிறார்கள். நிச்சயமாக காஸா மக்களுக்கு வெற்றியும், சுதந்திரமும் கிடைக்கும்.” என்கிறார்.

### ஜாக்குலின் ரெட்சாக்

காக்குலின் ரெட்சாக் கூறுகையில், “காஸாவில் நடக்கும் சம்பங்கள் என்னை மிகவும் பாதித்தது. அதனைத் தொடர்ந்து நான் இஸ்லாம் குறித்து ஆராய ஆரம்பித்தேன். இப்போது அல்லாஹ்விடம் நெருக்கமாக வந்து விட்டேன்.” என்கிறார்.

### பாலஸ்தீன போராளிகளின் இன்னொரு வெற்றி

அக்டோபர் 7 முதல் தொடர்ந்து வரும் பாலஸ்தீன் - இஸ்ரேல் போரில், பாலஸ்தீன போராளிகளும், அந்த போராளிகளுக்கு எல்லா விதமான ஆதரவுகளையும் அளித்து வரும் பாலஸ்தீன முஸ்லிம்களும் உலக மக்களின் உள்ளங்களை வென்று வருகின்றனர். அதன் வெளிப்பாடாக உலகம் முழுவதிலும் பல பகுதிகளில் இஸ்லாமும், திருக்குர்ஆனும் ஆய்வுக்குள்ளாகின்றது. நிறைய பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு வருகின்றனர். கடந்த மாதம் அமெரிக்காவின் புகழ் பெற்ற பிரபலம் மேகன் ரயிஸ் உட்பட பல அமெரிக்க பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கது. அல்ஹம்துலில்லாஹ்.

***Source: Muslim Mirror***

**- Jasmine Fathima B.Sc, B.Ed, LLB.,**



தனது குழந்தைக்காக பிஸ்கட்டுகளை வாங்க வெளியில் சென்ற இந்த தந்தை, திரும்பி வந்து பார்த்த போது காத்திருந்தது அதிர்ச்சி! இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படையினரால் அவரது மனைவி மற்றும் குழந்தை படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இப்படி ஆண்கள் இல்லாத வீட்டில் பெண்களிடமும், குழந்தைகளிடம் தங்களது வீரத்தை காட்டிக் கொண்டிருக்கின்றனர் இஸ்ரேலிய ராணுவத்தினர்.

***Palestine Chronicle - 28/12/2023***

# பாலஸ்தீன பெண்களுக்கு பால் சுரப்பதே நின்று விட்டது



இட்டத்தட்ட 23 லட்சம் பாலஸ்தீன மக்களை உள்ளடக்கிய காசா பகுதியில் தோராயமாக 50,000 கர்ப்பிணி பெண்கள் உள்ளனர். நாளொன்றுக்கு 150 பிரசவங்கள் அங்கு நடைபெறுகின்றன.

இஸ்ரேல் மின்சாரம் வழங்குவதை நிறுத்திவிட்டதால் செல்ஃபோன் ஒளியைப் பயன்படுத்தி பிரசவம் பார்க்க வேண்டிய நிலைக்கு காசாவில் உள்ள மருத்துவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தெற்கு காசாவில் உள்ள நாசர் மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், தான் செல்ஃபோன் ஒளியைப் பயன்படுத்தி இரண்டு பெண்களுக்கு சிசேரியன் முறையில் பிரசவம் பார்த்ததாகவும், தனது கைகளைக் கழுவக்கூட மருத்துவமனையில் போதுமான நீர் இல்லை என்றும் என்.பி.ஆர் (ழிறிஸி) என்னும் அமெரிக்க சுதந்திர ஊடகத்திற்கு அளித்த நேர்காணலில் கூறினார்.

மின்சாரம் மட்டுமல்ல, தண்ணீர், மருந்துகள், எரிபொருள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதை இஸ்ரேல் நிறுத்திவிட்டது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்கும் பெண்கள், தங்களுக்குப் பால் சுரப்பதற்குக் கூடுதலாக நீர் அருந்த வேண்டிய தேவையுள்ளது. ஆனால், போதுமான குடிநீர் கிடைக்காததால் பல தாய்மார்களுக்குப் பால் சுரப்பதே நின்று போய்விட்டது.

காசாவுக்குத் தேவையான நீரில் 30 விழுக்காட்டை இஸ்ரேல் வழங்கி வந்தது. மீதமுள்ள நீர் தேவை கடல் நீரை சுத்திகரிப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இஸ்ரேல், தான் வழங்கி வந்த நீரை

நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் கடல் நீரை சுத்திகரிப்பதற்குத் தேவையான மின்சாரம் மற்றும் எரிபொருளையும் நிறுத்திவிட்டது. தண்ணீரை மறுத்து நீர் என்பதை ஒரு பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் கையில் எடுத்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம், மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் நீர் கிணறுகள், கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் சுகாதார சேவைகளை இயக்க போதுமான மின்சாரம் இல்லை என்றும், கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகள் தெருக்களில் குவிந்துள்ளதாகவும் அக்டோபர் 12-ஆம் தேதி தெரிவித்தது.



இதனைத் தொடர்ந்து, இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களால் ஆறு நீர் கிணறுகள், மூன்று நீர் உந்து நிலையங்கள், ஒரு நீர்த்தேக்கம் மற்றும் 11 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு சேவை செய்யும் கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை ஆகியவை சேதமடைந்ததாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. இஸ்ரேலின் தாக்குதலால் காசா பகுதி பாலஸ்தீன மக்கள் அதிக உப்புக் கலந்த நீரைக் குடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தண்ணீரை பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துவது இது ஒன்றும் முதல்முறையல்ல. இஸ்ரேலின் இந்த கொடூரத்தை வாட்டர் ஜஸ்டிஸ் (Water Justice) என்ற அமைப்பு தொடர்ந்து ஆவணப்படுத்தியுள்ளது.

மேற்குக் கரையில் (West Bank) உள்ள குடியிருப்புகளில் வாழும் 6,50,000 சட்டவிரோத இஸ்ரேலிய குடியேறிகளுக்கு, அங்குள்ள 30 இலட்சம் பாலஸ்தீனியர்களுக்கு ஒதுக்கப்படுவதை விட ஆறு மடங்கு அதிக தண்ணீர் ஒதுக்கப் படுகிறது. மேற்குக் கரையில் வாழும் இஸ்ரேலிய குடியேறிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 700 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதே வேளையில், பாலஸ்தீன மக்களுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 - 20 லிட்டர் தண்ணீர் மட்டுமே வழங்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையான குறைந்த பட்சம் 100 லிட்டர்/நபர்/நாள் என்ற பரிந்துரையை விட இது மிகவும் குறைவானது.

கோடைக்காலத்தில் சட்டவிரோத யூத குடியேறிகளின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாலஸ்தீனியர்களுக்கான நீர் விநியோகத்தை இஸ்ரேல் 50 விழுக்காடு வரை குறைக்கிறது. மேற்குக் கரையில் கிட்டத்தட்ட 2,00,000 பாலஸ்தீனியர்களுக்கு தண்ணீர் கிடைப் பதில்லை. ஆனால், யூத குடியேறிகளுக்கு தனிப் பட்ட பயன்பாடு, நீச்சல் குளங்கள், ஸ்பாக்கள், பண்ணைகள் மற்றும் பழத்தோட்டங்களுக்கு போதுமான நீர் குழாய்கள் மூலம் வழங்கப் படுகிறது.

நாஜிக்கள் போலந்தை ஆக்கிரமித்தபோது, கெட்டோ மயமாக்கப்பட்ட வார்சா பகுதிக்கு தண்ணீர், மருந்து, மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களைக் கிடைக்காமல் செய்தனர். அதையேதான் இஸ்ரேல் தற்போது காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன மக்களுக்குச் செய்து வருகிறது.

இஸ்ரேலின் வழிமுறைகள் மட்டும் நாஜிக்களை ஒத்திருக்கவில்லை; அவர்களின் சொல்லாட்சியும் கூட நாஜிக்களைப் போலத்தான் உள்ளது. நாஜிக்கள் யூதர்களை விலங்குகள் என்று கூறினார்கள். அதையேதான் இஸ்ரேலிய அரசும் கூறுகிறது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவவ் காலண்ட் “நாங்கள் விலங்குகளுடன் சண்டையிடுகிறோம். அதற்கேற்ப தான் நடந்து கொள்ள இயலும்” என்று கூறியுள்ளார்.

**- பொம்மி**

**(வினவு இணையதளம்)**

கவர் ஸ்டோரி



# காந்திஜி கொலை

## அன்று முதல்...இன்று வரை...

## மறைக்கப்படும் உண்மைகள்

### இந்திய பாசிசத்தின் மறைக்கப்பட்ட வரலாறு

காந்தியை கொலை ஏன்? எப்படி? என்ற நூலிலும், தேசப்பிரிவினைக்கு யார் காரணம் என்ற நூலிலும் ஓர் உண்மையை பல நூறு சாட்சியங்களின் வழி வலியுறுத்தினோம். அது, "இந்துத்துவ பாசிஸ்டுகள், காங்கிரஸ் கட்சிக்குள் நிரம்பவே ஊடுருவி நின்றார்கள்."

காங்கிரஸ் கட்சியைத் தலையாயதாய் நம்பி தொண்டர்கள், அடித்தட்டு மக்கள் இவர்களெல்லாம் இந்தியாவின் விடுதலைக்காக உழைத்தார்கள். சிறை சென்றார்கள், சித்திர வதைகளைச் சந்தித்தார்கள். தியாகங்களை செய்தார்கள். இவற்றில் எதையுமே செய்யாமல் ஆங்கிலேயர்களுக்கு ஆட்காட்டிக் கொண்டிருந்தார்கள் இந்த இந்துத்துவ பாசிஸ்டுகள்.

ஒவ்வொரு முறையும் இந்த அடித்தட்டு மக்களின் தியாகங்களையும், நன்மைகளைத் தவறாமல் தட்டிப் பறித்து அனுபவித்தார்கள். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் அடிவருடி களாகவும், ஆட்காட்டிகளாகவும் தங்களை ஆக்கிக் கொண்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டே இருந்தார்கள். தங்களின் கொலை வெறி கொண்ட இந்துத்துவாவை வளர்த்துக் கொண்டே இருந்தார்கள்.

நாடு விடுதலையடைந்த போது கிடைத்த அனைத்து நன்மைகளையும் அப்பிக் கொண்டார்கள். அள்ளிக் கொண்டார்கள். உண்மையைச் சொன்னால் எல்லா நன்மைகளையும் ஒன்றாகக் கொள்ளை அடித்துக் கொண்டார்கள். அதே நேரத்தில் தங்களது கொலை பாதகங்களையும் மறைத்துக் கொண்டார்கள். காங்கிரஸ்-இன் தலைவர்கள், மோதிலால் நேரு, பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்திஜி, அபுல் கலாம் ஆசாத், முஹம்மத் அலீ ஜின்னா ஆகியோர்கள் திறமையிலும், தியாகத்திலும் இவர்களை விஞ்சி நின்றாலும், இவர்கள் கொள்ளை

அடிப்புகளையும், கீழறுப்பு வேலைகளையும் தடுக்கவியாதவர்களாகவே இருந்தார்கள் என்பதுதான் யதார்த்தம். கிஞ்சிற்றும் வகுப்புவாத சிந்தனை இல்லாத ஜின்னா போன்றவர்களை, வகுப்புவாதத்தின் பக்கம் பிடித்துத் தள்ளுவதில் வெற்றியும் கண்டார்கள்.

### காந்தி கொலையைத் தடுத்திருக்க முடியுமா?

காங்கிரஸ்-ஐ கையில் வைத்துக் கொண்டே தேசத் தந்தை எனப் போற்றப் பெற்ற காந்திஜியை அவர்களால் மிக எளிதாக கொலை செய்ய முடிந்தது. அப்போதைய இந்திய உளவுத் துறையால் மகாத்மா காந்திஜியை காப்பாற்றிட இயலவில்லை. ஆறுமுறை காந்திஜியை கொலை செய்ய இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் முயற்சி செய்தார்கள். அதே சாவர்கரின் குழுதான் பிடி பட்டார்கள். அப்போதும் உளவுத்துறை அதை ஆய்வுக்கு உட்படுத்தவோ, தடுக்க நடவடிக் கையோ எடுக்கவில்லை.

அதைத் தன் கையில் வைத்திருந்த உள்துறை அமைச்சர் - வெளியே காங்கிரஸ் காரராகவும், உள்ளே இந்துத்துவ தீவிரவாதியாகவும் இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் ஆகியோர் காந்திஜியை காப்பாற்றுவதைப் பற்றிக் கவலைப் படவில்லை. கொலை செய்யும் வாய்ப்புகளை இந்துத்துவ வாதிகளுக்கு திறந்தே வைத்திருந் தார்கள். இந்த உண்மைகளெல்லாம் நமக்கு ஒன்றை கோடிட்டு காட்டும். அது, "காந்தியை கொலை செய்ய அனைவரும் துனை நின்றார்கள் என்பதே" அந்த உண்மை. பிற்றை நாட்களில் வண்டி வண்டியாகக் கிடைத்த ஆவணங்கள் இந்த உண்மையை உரக்க முழங்கின.

அன்றைக்கே உளவுத்துறையும், உள்துறை அமைச்சகவும், காவி மயமாகி இருந்தன, என்பதே உண்மை. இன்றைக்கும் அதே நிலையே தொடரு கின்றன என்பதை நான் கண்டு வருகின்றோம்.

### அழிக்கப்பட்ட அத்தாட்சிகள்

ஆனால், அன்று தொகுக்கப்பட்ட ஆவணங்கள் அன்று திரட்டப்பட்ட அத்தாட்சிகள் எல்லாம் இன்று அழிக்கப்பட்டுவிட்டன. இன்றளவும் உலக மறிந்த ஓர் வெகுஜன தலைவர் மகாத்மா காந்திஜி ஆவார்கள். அவர்களைப் பற்றிய ஆவணங்களை அழிக்க முடியும். அதே நேரத்தில் காந்திஜியைக் கொலை செய்த கும்பலைப் புகழ முடியும். அவர்கள் தாம் தேசப்பக்தர்கள் என பாராட்டிட முடியும். என்ற நிலை இன்று உருவாக்கப் பட்டுள்ளது.

காந்தி கொலையைப் பற்றிய ஆவணங்களை அழித்ததை, வீரமங்கை, டீஸ்டா செட்டல்வாட் அவர்கள், தான் தொகுத்து வெளியிட்ட, காந்தி ஜியை பற்றிய ஆவணத் தொகுப்பில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

*All these and other archival documents are to-day under grave threat, of destruction by the present govt, Headed by a Pracharak of the RSS, the present government seeks to insiding by complete a shirkers project put into motion with Gandhiji. Between 5th june and 7th July 2014, i.e. with nine to thirty nine days of assuming power, 11,100 files of the ministry of home affair, were destroyed by the Government."*

*[Page of 8 beyond doubt a dossier on Gandhi's assasination.- Compiled and introduced be Teeda Setalwad]*

"காந்திஜியின் கொலையைப் பற்றி எல்லா ஆவணங்களும் இன்று (2014இல்) மிகப்பெரிய ஆபத்திலிருக்கின்றன. ஆம். அவற்றை முற்றாக அழித்துவிடும் ஆபத்து. ஆர்.எஸ்.எஸ்.இன் முழு நேர ஊழியன் ஒருவன் இந்திய அரசின் தலைவர் ஆகிவிட்டார். அதனால் இந்த ஆவணங்கள் (காந்திஜியின் கொலைப் பற்றிய ஆவணங்கள்) அழிக்கப்படும் அவலம். உண்மையின் இவர்(மோடி) 2014இல் பதவி ஏற்ற அன்றிலிருந்து அவர்கள் முக்கிய ஆவணங்களை அழிப்பதைத் தங்கள் தலையாயக் கடமையாகக் கருதினார்கள். ஜூன் ஐந்தாம் நாளிலிருந்து, ஜூலை ஏழாம் நாளுக்குள் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திலுள்ள 11,100 ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இதில் காந்திஜி கொலையைப் பற்றிய ஆவணங்களும் உண்டு."



இப்படி காந்திஜி பற்றிய ஆவணங்கள் அழிக்கப் படுகின்றன என்பதை அறிந்தவுடன், ஆவன அழிப்புகளுக்கு எதிரான பிரச்சார இயக்கம் ஒன்றை தொடங்கினார்கள். இந்தப் பிரச்சார இயக்கத்தின் முதல் படியாக பேராசிரியர் புருஷோத்தமன் அகர்வால் என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல தகவல்களை ஒன்றிய உள்துறை அமைச்சகத்திடம் கேட்டார். அதற்கு ஆகஸ்டு 27, 2014இல் பதில் வந்தது. உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை. இதனை நாடாளுமன்றத்தின் பார்வைக்குக் கொண்டு சென்றது பிரச்சார இயக்கம்.

### நாடாளுமன்ற விவாதம் - அழிக்கப்பட்ட ஆவணம்

நாடாளுமன்றத்தில் கேள்விக்கனைகளை தொடுத்த பின்பு, அப்போதைய உள்துறை அமைச்சர், ராஜ்நாத் சிங் முன்னாள், ஆர்.எஸ்.எஸ். தொண்டர் வாய் திறந்தார். அதில் மளுப்பலான பதிலே கிடைத்தது. அந்த பதிலில்,

நாங்கள், ஆனால் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட போது, அப்போதைய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இப்படி கூறினார்,

“உள்துறை அமைச்சகத்திலிருந்து 11,100 பதினொன்றாயிரத்து நூறு கோப்புகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தும், உள்துறை அமைச்சகத்தோடு தொடர்புடையவை. ஆனால் அவற்றைப் பற்றிய பதிவுகள் எதுவும் நம்மிடமில்லை” என்றார்.

சாதாரணமாக அவற்றைப் பற்றியக் குறிப்பாக, அவை பத்திரப்படுத்தி வைத்துவிட்டுத் தான், கோப்புகளை அழிப்பார்கள். ஆனால் இந்த அரசு எந்தக் குறிப்பையும் வேண்டுமென்றே வைத்துக் கொள்ளவில்லை. இந்த சந்தடி சாக்கில் காந்திஜி பற்றிய தகவல்களையும் சேர்த்தே அழித்து விட்டார்கள். 2014இல் இவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் செய்த முதல் அழிப்பு வேலை இது தான். (அழிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து ஜனவரி 2023 இதழில் நிறைவாகவே குறிப்பிட்டிருக்கின்றோம். விரிவஞ்சி இங்கே அவற்றை மீண்டும் கூறாமல் விட்டு விடுகின்றோம்.)

### காங்கிரஸ்-இன் இந்துத்துவ முகம்

அடுத்து காங்கிரஸ் கட்சியின் பிரிதொரு கோரமும் இங்கே கவனிக்கப்பட வேண்டும். அது, அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் செய்தவை. அடுத்து இந்துத்துவ வாதிகளிடம், அவர்கள் தொடர்ந்து காட்டி வந்த அனுசரணை.



**21 - நவம்பர் 1966**

காந்திஜியின் கொலைப் பற்றிய விசாரணை ஆணையத்தை அவர்கள், அதாவது காங்கிரஸ் அரசு கொலைக் குற்றவாளி சாவர்கர் 26/02/1966இல் இறந்த பின்பே நியமித்தார்கள்.

J.L.Kapur - ஜெ.எல்.கபூர் கமிஷன் 26-11-1966 - இல் தான் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் காந்திஜி கொலையின் முக்கிய குற்றவாளி எனக் காட்டிய சாவர்கர் அதற்கு 9 மாதங்களுக்கு முன்பு, 26-2-1966லியே இறந்துவிட்டார்.

இதிலும் சாவர்கரை எப்படிக் காப்பாறினார்கள் என்றால், சாவர்கரை காந்தி கொலையோடு இணைக்கும் இரண்டு முக்கிய சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சமர்பிக்கப்படாமலேயே விடப் பட்டது. ஆனால் இந்த சாட்சியங்கள் விசாரணை ஆணையத்திற்கு முன் சமர்பிக்கப்பட்டன. அந்த ஆவணங்கள், தெளிவான சாதியங்கள்,

01. அப்பா இராமசந்திர கஸார். இவர் கொலைகாரரர். சாவர்க்கரின் மெய்க்காப்பாளர். - Appa Ramachandra Kasar - His bodyguard

02. கஜனான் விஷ்னு டாம்லி. சாவர்கரின் செயலாளர். - Gajanan Vishnu Damly - his Secretary

இந்த இரண்டு சாட்சியங்களும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், சாவர்கர் தண்டிக்கப் பட்டிருப்பார். ஏனெனில் சாவர்கரை இறுதியாக காந்திஜி கொலைக் குற்றத்தின் மூளை என நிரூபிக்க ஓர் இணைப்புச் சாட்சியம்தான் தேவைப் பட்டது. அதை இந்த இரண்டு சாட்சியங்களும் ஐயங்களுக்கு அப்பாற் நின்று நிரூபித்திருக்கும். (மூத்த வழக்கறிஞர் A.G.Noorani)

இதில் அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல், காவல்துறை, வழக்கை நடத்திய நீதிமன்றம் இவையெல்லாம் சாவர்கரை காப்பாற்றுவதிலேயெ குறியாக இருந்தன.

எடுத்துக்காட்டாக நாம் மேலே குறிப்பிட்ட அப்பா இராமசந்திர கஸார், கஜனான் விஷ்னு டாம்லி இவர்கள் இரண்டு பேரும் பாம்பே காவல் துறையிண்டரிம் (இப்போது மும்பை) 1948ஆம் ஆண்டிலேயே வாக்குமூலம் தந்திருந்தார்கள். அவை மும்பை காவல்துறையின் மார்ச் 4, 1948 பதிவில் (4-3-1948) இடம் பேற்றிருந்தன.

ஆனால் வேண்டுமென்றே நீதிமன்றத்திடம் மறைக்கப்பட்டிருந்தது. விடுதலைப் போராட்டக் காலக்கட்டங்களில் அவர்கள் தேசத் துரோகச் செயல்களில் தாம் ஈடுபட்டார்கள். இதில் கையும், களவுமாக சிக்கினார்கள் என்றும், இந்திய வரலாறு முழுவதும் அவர்களிடம் ஒரு தாராள மனத்துடனேயே காங்கிரஸ் நடந்த கொண்டது. மட்டுமல்ல, நீதிமன்றங்களும் அன்றே ஒரு சார்போடு தான் நடந்து கொண்டன என்பது தான் வரலாறு கூறும் உணமை. மகாத்மா காந்திஜி கொலை செய்யப்பட்ட பின்னணியில் ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பு 4-02-1948இல் தடை செய்யப்பட்டது. அதனுடைய தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இன்றைய நாட்களைப் போல் அன்றைக்கும் உச்ச நீதிமன்றங்களையே தீர்வாக பெற்றார்கள். ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்புக்கும், காந்திஜி அவர்களின் கொலைக்கும் தொடர்பில்லை, என்றானது. இதில் காந்திஜியை கொலை செய்த நாதுராம் கோட்சே, "தான் 1946இல் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பிலிருந்து வெளியே வந்து விட்டேன்" என்று சொன்னது ஏற்றுக்கொள்ளப் பட்டது. கோட்சேயின் உடன் பிறந்த சகோதரர் கோபால் கோட்சே, "என் தம்பி எப்போதும் ஆர்.எஸ்.எஸ்.இல் தான் இருந்தான்" என்று சொன்ன கூற்றுகளெல்லாம் பின்னுக்கு தள்ளப் பட்டன.

பின்னர், அன்று தடை செய்யப்பட்டு கைது செய்யப்பட்டு, நாக்பூருக்கு வெளியே வந்திடக் கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்ட கோல்வார்கர், பிரதம அமைச்சர் பண்டித நேரு அவர்களுக்கு கடிதங்களை எழுதுகின்றார். அந்த கடிதங்களில் ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்கிட வேண்டும் எனக் கூறுகின்றார்.

முடியாது, கூடாது எனச் சொல்லிட வேண்டிய நேரு, ஆர்.எஸ்.எஸ். மீதான தடையும், இதர விவகாரங்களும் உள்துறை அமைச்சகத்தோடு தொடர்புடையது எனப் பதில் தருகின்றார்.

உடனேயே கோல்வால்கர், "நான் டெல்லி வர வேண்டும். உள்துறை அமைச்சரை சந்திக்க வேண்டும்." எனக் கடிதம் எழுதுகின்றார். அதற்காக நான் நாக்பூருக்கு வெளியே வந்திடக் கூடாது என்ற நிபந்தனைக்கு தற்காலிக விலக்கு



வேண்டும் என்கின்றார். அவர் கேட்ட அனுமதியும், அவர் கேட்ட விலக்கும் வழங்கப் படுகின்றது. உள்துறை அமைச்சர் சர்தார் வல்ல பாய் பட்டேல் அவர்களைச் சந்திக்கின்றார். ஆர்.எஸ்.எஸ். மீதான தடை 11-7-1949இல் நீக்கப் படுகின்றது.

இப்போது சாவர்கர் படம், நாடாளுமன்றத்தில் காந்திஜியின் படத்தோடு தொங்குகின்றது. கொலைகாரன் நாதுராம் கோட்சேயின் ஆட்களின் ஆட்சி டெல்லிப் பட்டிணத்தில்! இதுதான் காங்கிரஸுக்குள் ஒளிந்திருக்கும் உண்மையான இந்துத்துவாவின் ஆழம்.

இந்தியாவின் ஒவ்வொரு துறையிலும் இவர்களின் - இந்துத்துவவாதிகளின் ஆதிக்கம் அதிகம். அன்றும் அதுதான். இன்றும் அதுதான். இனியும் தொடராமல் தடுப்போம் இன்ஷா அல்லாஹ்.

### தடுக்க முடியும் - தீர்வு நம் கையில்

இன்றைய நாட்களில் நம்மைப் போன்றவர்களின் தொடர் முயற்சியால் இந்துத்துவ தீவிரவாதிகளின் உண்மை முகம் உலகெங்கும் அம்பலமாகிவிட்டது. மக்கள் எல்லா வகையிலும் மிகவும் அதிருப்தியாகவே இருக்கின்றார்கள்! இது கடந்த பத்து ஆண்டுகளில் நடந்த முகப்பெரிய நன்மை.

EVM என்ற மின்னணு வாக்கு இயந்திரம் தான், அவர்களை ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றது. இதனை மாற்றிடும் வக்கோ, வகையோ காங்கிரஸ் கட்சிக்கு இல்லை. ஆனால் மனதில் விதைக்கப்பட்டிருக்கும் விஷத்தை பிடுங்கி எறிந்திடும் வகையும், வழியும் இன்னும் நிரம்பவே இருக்கின்றது. இதில் அனைத்து தரப்பாரும் முன்னே நிற்கின்றார்கள். முஸ்லிம்கள் தங்களால் இயன்றதையெல்லாம் செய்தால் இந்திய பாசிசத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிந்திடலாம். இன்ஷா அல்லாஹ்!

இது முஸ்லிம்களையும், கிருஸ்தவர்களையும், தலித் மக்களையும், பழங்குடியினரையும் காப்பாற்றும் செயல் அல்ல. இது இந்தியாவைக் காப்பாற்றும் செயல்.

*- MGM*



# கொண்டாட்டங்கள் இல்லை

## கடுமையான அச்சம்...பயம்...

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கிருஸ்துமஸ்.....!

ஒரு பத்து வருடங்களுக்கு முன்பு தங்களது பள்ளிப்படிப்பை முடித்தவர்களுக்கு நினைவிருக்கும். சமூக அறிவியல் பாடத்தில் “இந்தியா” எனும் நமது நாட்டிற்கு விளக்கும் கற்பிக்கும் போது, “இது மனிதர்கள் வாழும் சரணாலயம்” என்று பாடம் நடத்துவார்கள். அதாவது, பல்வேறு மதம், இனம், மொழி பேசக்கூடியவர்கள் ஒற்றுமையாக வாழும் நாடு இந்தியா என்பதுதான் அதற்கு அர்த்தம்.

ஆனால் 2014 மோடி ஆட்சி கட்டிலில் அமர்ந்து பாசிஸ ஆட்சி தலைதூக்கிய பின் "இந்தியா" என்றாலே, அது, “இந்துத்துவ பாசிஸ்டுகளின் வெறிபிடித்த நாடு. அங்கு இந்து அல்லாத பிற மதத்தவர்களுக்கு, ஏன் இந்துத்துவ சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ளாத இந்துக்களுக்கே பாதுகாப்பில்லாத நாடு” என்ற நிலை உருவாகிவிட்டது.

இந்த நிலையில் 2023 ஆண்டு கிருஸ்துமஸ் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் எப்படி கொண்டாடப்பட்டது என்பது குறித்தும், இந்தியாவில் கிருஸ்தவர்களின் நிலை குறித்தும் *Article 14* இணையதளம் ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது. அதை அப்படியே இங்கே தருகின்றோம்.

### கான்பூர் - உத்திரபிரதேசம்

கிருஸ்துமஸ் நாளான முந்தைய இரவில் தெருக்களில் குழு, குழுவாக சென்று பாடல்கள் பாடிக்கொண்டே வீடு, வீடாக வலம் வருவார்கள். சித்திரங்கள் வரையப்பட்ட பதாகைகள் நமக்கு கதை சொல்லும். குளிர் நிறைந்த அந்த இரவில் அவை பார்ப்பதற்கே அழகாக இருக்கும். ஆனால் 2023 கிருஸ்துமஸ் நாளுக்கு முந்தைய இரவு அமைதியாக இருந்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாக சென்று கொண்டிருந்த கிருஸ்துவ குழுக்கள் வேகமாக 10 மணிக்குள் திரும்பி விடவேண்டும் என்ற நோக்கிலே வேகமாக ஓடிக் கொண்டிருந்தனர்.

கான்பூர் கத்தோலிக்க திருச்சபைகளின் தலைவரான சோட் பாய் நரோன்ஹா கூறுகையில்,

“போலிஸ் கமிஷனர் எங்களுக்கு முழு பாதுகாப்பு வழங்குவதாக உத்திரவாதம் அளித்தார். ஆனால் திருச்சபைகளுக்கு அதில் நம்பிக்கை இல்லை. எனவே கிருஸ்துமஸ் முந்தைய நாள் இரவில் பாடல்களை பாடிக்கொண்டு, தங்கள் சகோதரர்கள் வீடுகளுக்கு செல்லும் வழக்கத்தை கைவிட்டு விட்டோம். 2017க்கு பிந்தைய யோகி ஆதித்யநாத் ஆட்சியில் இந்துத்துவ பாசிஸ கும்பல்கள் கிருஸ்துமஸுக்கு எதிராக கடுமையாக நடந்து கொள்கிறார்கள். கிருஸ்தவர்கள் இந்துக்களை மதம் மாற்றுகின்றனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் தேவாலங்களை தாக்குகின்றனர்.” என்கிறார்.

### 55 வயதான ஜார்ஜ் கூறுகிறார்

கேரளாவை பூர்வீகமாக கொண்ட ஜார்ஜ், முப்பது வருடங்களாக கான்பூரில் வசித்து வருகின்றார். அவர் கூறும் போது,

“பொதுவாக நாங்கள் 20லிருந்து 30 நபர்கள் வரை குழுவாக சென்று இரவு முழுவதும் பாடல்கள் பாடிக்கொண்டு வீடு வீடாக சென்று சந்திப்போம். ஆனால் இப்போது அதெல்லாம் இல்லை. மாலை 6 மணிக்கு தொடங்கி 10 மணிக்குள் முடித்துவிட்டு வேகமாக வீட்டிற்குள் அடங்கிவிடுகின்றோம். நான் பிரச்சனையில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க வேக, வேகமாக வீட்டிற்கு வர வேண்டிய சூழலில் உள்ளோம். ஒரு வெறிச்சோடிய தெருவில் 50 மதவெறியர்களை சந்திப்பதை குறித்த பயம் எப்போதும் எனக்கு இருக்கும். அந்த மதவெறியர்களுக்கு எப்படி கிருஸ்துமஸ் குறித்தும், அதன் மகிமைகள் குறித்தும் புரிய வைக்க முடியும்? காவல்துறை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இது போன்ற நிகழ்வுகளில் அந்த குண்டர்களுக்கு எதிராக வேடிக்கை பார்க்கும் பொம்மை களாகத்தான் காவல்துறை செயல்படுகின்றது.” என்கிறார்.

### 65 வயதான பிரெடிரிக் கூறுகிறார்

65 வயதான பிரெடிரிக், கான்பூர் முனிசிபல் கார்ப்பரேஷனிலிருந்து ஓய்வு பெற்றவர். இப்போது நவாப்காஞ்ச் பகுதியில் வசித்து வருகிறார். அவர் கூறுகையில்,

“ஒவ்வொரு கிருஸ்துமஸ் பண்டிகைக்கும் முந்தைய இரவில், இரண்டு அல்லடு மூன்று குழுக்கள் எங்கள் வீட்டிற்கு வருவார்கள். 12.10க்குள் ஒரு குழுவும், 1 மணிக்கு பிறகு ஒரு குழுவும், 3 மணிக்கு கடைசி குழுவும் பாடல்களை பாடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது திருச்சபையிலிருந்து நிர்ணயக்கப்பட்ட ஒரே ஒரு குழுமட்டும் 11 மணிக்குள் வந்தது. அதன் பின் இரவு முழுவதும் நாங்கள் தூங்கிவிட்டோம். கிருஸ்துமஸ் ஈவ் அன்று தேவாலயங்களுக்குள் எங்களுக்கு எந்த அச்சுருத்தலும் இல்லை. ஆனால் வீடு திரும்பும் போது ஏதாவது பிரச்சனையை எதிர்கொண்டு விடுவோமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளது. மேலும் போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் மக்கள் விரைவாக வீடு திரும்பிவிடுகின்றனர்." என்கிறார்.

### 49 வயதான எச். தாமஸ் கூறுகிறார்

49 வயதான தாமஸ், தனியார் போக்கு வரத்து நிறுவனத்தில் வேலை செய்கின்றார்.

News / Cities / Lucknow / Kanpur: 93 booked for unruly conduct during protest against 'church'

# Kanpur: 93 booked for unruly conduct during protest against 'church'

The protesters claimed a church was being built with a missionary school without proper authorisation and alleged that the district administration were involved in facilitating it. They demanded the building be demolished.

2022இல் அவர் மும்பைக்கு இடம்பெயர்வதற்கு முன் லக்னோவில் வசித்து வந்தார். அவர் கூறுகையில்,

"பொதுவாக கிருஸ்துமஸ் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே, இயேசு(ஆலை) அவர்களின் பிறப்பை காட்சிப்படுத்தும் விதமாக டேபிள்களில் சித்திரங்கள் செய்து வைத்திருப்பார்கள். அதை பார்ப்பதற்கு நானும் என் மருமகனும் அருகில் உள்ள தேவாலயத்திற்கு சென்றோம். அப்போது எங்களுக்கு அச்சமாகவே இருக்கும். திடீரென ஒரு கும்பல் உள்ளே நுழைந்து எங்களையும், தேவாலயத்தையும் தாக்க முற்பட்டால் நாங்கள் என்ன செய்வோம் என்று பயந்து கொண்டே இருப்போம். தேவாலாயத்தை விட்டு வெளியேறிய பிறகுதான் எங்களுக்கு நிம்மதியாக இருக்கும். இப்போது நான் மும்பையில் இருக்கின்றேன். இங்கு ஒரு கிருஸ்தவராக வாழ்வது போல நிம்மதியாக என்னால் லக்னோவில் இருக்க முடியாது." என்கிறார்.

**ஜான் தயாள் கூறுகிறார்**

பத்திரிகையாளரும், அகில இந்திய கத்தோலிக்க திருச்சபை யூனியனின் முன்னாள் தலைவருமான ஜான் தயாள் கூறுகையில்,

"கடந்த பத்து வருடங்களாக இந்த நாட்டில் கிருஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்து வருகின்றது. ஆனால் அது இப்போது வெறுப்பின் உச்சத்தில் வெளிப்படையாகவே திட்டமிட்டு நடத்தப்படுகிறது. என்னால் எனக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்தே சாட்சியளிக்க முடியும். ஆனால் எங்களது புகார்களை எடுத்துக் கொள்வதில்லை. காரணம், அதிகாரத்தில் உள்ளவர்கள் விசில் அடிக்கிறார்கள். அரசு சாரா இந்த குண்டர்கள் நாய்களை போல அதை அப்படியே கேட்கிறார்கள். தேவாலயங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாவதை நான் கண்கூடாக பார்த்திருக்கிறேன். அதன் பின் அந்த தேவாலாயங்களின் பாதிரியார்கள், மதமாற்றம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் படுவார்கள். இப்படியெல்லாம் செய்து விட்டு கிருஸ்துமஸ் நாளை அரசின் நல்லாட்சி தினமாக பிரகடனப் படுத்துவார்கள். " என்கிறார்.

2021ஆம் ஆண்டு இந்துத்துவ பாசிஸ்டுகள், கிருஸ்துமஸ் நாளன்று சாண்டாகிளாஸ் பொம்மைகளை எரித்தனர். மேலும், "சாண்டாகிளாஸ் மர்தாபாத்" என்று கோஷமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Effigies of Santa Claus were burnt in Agra on Friday. (Image: Indiatoday.in)

கடந்த ஜூன் மாதம், 2023இல், படிக்கும் குழந்தைகளை மதமாற்றம் செய்கிறார்கள் என்று கான்பூருக்கு அதுகிலுள்ள, அக்பர்பூரில் அமைந்துள்ள ஒரு கிருஸ்தவ பள்ளியை இந்துத்துவ பாசிஸ கும்பல்கள் தாக்கினார்கள். அப்போது அந்த பள்ளியின் மதில் சுவரையும், பிரார்த்தனை அறையையும் உடைத்தார்கள். இதுகுறித்து அருகிலுள்ள காவல் நிலையத்தில்

News / Cities / Lucknow / In UP's Rampur, pastor among 2 held on conversion charges

# In UP's Rampur, pastor among 2 held on conversion charges

"Except for the pastor, we have not found involvement of any other person in the matter so far. We will also take into account the videos of the incident doing rounds on social media," said Patwai SHO Harendra Yadav.

புகார் அளித்த நிலையில் 93 நபர்கள் மீது வழக்கு பதியப்பட்டது. ஆனால் இன்று வரை யாரையும் கைது செய்யவில்லை காவல்துறை என்கிறது ஆர்டிகிள் 14 இணையதலம்.

### பா.ஜ.க. 20 ஆண்டுகள் ஆட்சியில் உள்ள மத்தியப்பிரதேசத்தில்

மத்திய பிரதேசத்தில் கடந்த 20 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி செய்து வருகின்றது. தலைநகரான போபாலில் டிசம்பர் 10 அன்று ஞாயிற்று கிழமை, லூர்து மாதா தேவாலாயத்தில் கிருஸ்தவர்கள் குழுமினர். அப்போது திடீரென உள்ளே நுழைந்த பாசிஸ குண்டர்கள், தேவாலாயத்தை சேதப்படுத்தி, கிருஸ்தவர்களையும் தாக்கியுள்ளனர். இது குறித்து, போபாலை மையமாக கொண்ட கிருஸ்தவ அமைப்பான ராஷ்டிரிய இசை மகாசங்கத்தின் செய்தி தொடர்பாளர் ரிச்சர்ட் ஜேம்ஸ் கூறுகையில்,

"நாங்கள் இந்துக்களை மதமாற்றம் செய்கின்றோம் என்று அவர்கள் எங்களை தாக்கினார்கள். இங்கு கிருஸ்தவ மதம் ஒன்று புதிய மதம் அல்ல. இங்குள்ள தேவாயாலங்கள் எல்லாம் 200 ஆண்டுகள் பழைமையானவை. டிசம்பர் 10 அன்று 50 - 60 குண்டர்கள் மொத்தமாக தேவாலாயத்திற்குள் நுழைந்து தாக்கியுள்ளனர். பின்னர் காவல்துறை வந்தது. தேவாலாயத்தில் தாக்குதலுக்குள்ளான கிருஸ்தவர்கள் 12 நபர்களை கைது செய்து அவர்கள் மதமாற்றத் தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளது. பின்னர் அவர்களை சிறையில் அடைத்துள்ளது. அப்படி சிறையில் அடைக்கப்பட்டவர்களை ஜாமினில் எடுப்பது கூட சிரமமாக உள்ளது. பெரிய நகரங்களில் கிருஸ்தமஸ் பண்டிகைக்கு எந்த அச்சுருத்தலும் இல்லை. ஆனால், சிறிய நகரங்களில் வாழும் கிருஸ்தவர்கள் அச்சுருத்தப் பட்டுள்ளார்கள்." என்கிறார்.

### இந்துக்களே "சர்ச்"களுக்கு செல்லாதீர்கள்

"2021க்கு முன்பெல்லாம் நிறைய இந்துக்கள் கிருஸ்துமஸ் தினத்தன்று "சர்ச்"க்கு வருவது வழக்கமாக இருந்துள்ளது. ஆனால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இந்துத்துவ பாசிஸ்டு களின் தலைவர்கள், இந்துக்களின் மத்தியில் "தேவாலாயங்களுக்கு செல்லாதீர்கள். அவர்கள் உங்களை மதம் மாற்றிவிடுவார்கள்" என்று பேசி அச்சுருத்துவதின் விளைவால் இந்துக் களால் இப்போது "சர்ச்" களுக்கு வரமுடி வதில்லை." என்று பெயரை வெளியே சொல்ல விரும்பாத ஒருவர் கூறுகிறார்.

இந்தியா முழுவதும் சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு கிருஸ்தவர்கள் வெறுப்பின் காரணமாக தாக்கப்படுவதாக, டெல்லியை மையமாக கொண்ட United Christian Forum என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் சொல்கின்றது.

டிசம்பர் 13, 2023 அன்று வெளிவந்த அந்த ஆய்வில், "2014க்கு பிறகு நமது இந்தியாவில் கிருஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. மேலும் உலகம் முழுவதும் கிருஸ்தவர்களை மோசமாக நடத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 11வது இடத்தில் உள்ளது."

2014ஆண்டு கிருஸ்தவர்கள் மீதான தாக்குதல்களின் எண்ணிக்கை 147ஆக இருந்தது. ஆனால் இப்போது 2023இல் அது 637 ஆக உயர்ந்துள்ளது. இது 373 சதவிகிதம் அதிகரிப்பாகும். **(Source: Aticle 14.com)**

**- அஷ்ரப் அலீ**

# இஸ்லாமிய வழியில் போரும்...!

# இஸ்லாமியப் பெண்களும்...!

*அன்னை ஆயிஷா(ரலி) அறிவிக்கின்றார்கள்:*

“நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அவர்களின் மனைவிமார்கள் ஜிஹாதில் ஈடுபட அனுமதி அளிக்கும்படி கேட்டார்கள். அதற்கவர்கள் ஹஜ் செய்வது (உங்களுக்கு) சிறந்த ஜிஹாத் ஆகும்” என்று கூறினார்கள். (புகாரி)

*அனஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்:*

உஹதுப் போரின் போது மக்கள் நபி(ஸல்) அவர்களை விட்டு விட்டுத் தோல்வியுற்று (பின் வாங்கிச்) சென்றபோது நான் ஆயிஷா பின்த்து அபூபக்கர் (ரலி) அவர்களையும், உம்மு சுலைம்(ரலி) அவர்கள் இருவரும் (தண்ணீர் நிரம்பிய) தோல் பைகளைத் தம் முதுகுகளில் சுமந்து கொண்டு வேக வேகமாக நடந்து சென்று காயமுற்று வீழ்ந்து கிடக்கும் மக்களின் வாய்களில் தண்ணீரை ஊற்றுவதும், பிறகு திரும்பச் சென்று அவற்றை நிரப்பிக் கொண்டு மீண்டும் வந்து மக்களின் வாய்களில் தண்ணீரை ஊற்றுவதுமாக இருந்தார்கள். நான் அவர்களின் கால்களில் அணிந்திருந்த தண்டைகளைப் பார்க்கும் அளவிற்கு வரிந்து கட்டிக் கொண்டு பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். தோல் பைகளைத் தம் முதுகுகளில் சுமந்து வேகமாக நடந்து சென்றார்கள். (புகாரி)

*ருபய்யி பின்த்து முஅவ்வித்(ரலி) கூறினார்கள்:*

பெண்களாகிய நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் (புனிதப் போரில்) இருந்தோம். போரில் காயமுற்றவர்களுக்கு நீர் புகட்டியும், மருந்திட்டும் வந்தோம். கொல்லப்பட்டவர்களை (போர்க்களத்தில் இருந்து) மதீனாவிற்கு எடுத்துச் சென்று கொண்டு இருந்தோம். (புகாரி)

*ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கின்றார்கள்:*

உஹதுப் போரின் போது நபி(ஸல்) அவர்களின் தலைக்கவசம் அவர்களின் தலையில் வைத்தே நொறுக்கப்பட்டு முகம் முழுவதும் இரத்த மயமாய், அவர்களின் நடுப்பல் உடைக்கப்பட்டு விட்ட போது அலி(ரலி) (காயத்தைக் கழுவுவதற்காக) கேடயத்தில் அவ்வப்போது தண்ணீர் கொண்டு வர பாத்திமா(ரலி) காயத்தை கழுவி வந்தார்கள். இரத்தம் தண்ணீரை மிஞ்சி அதிகமாக வழிவதைக் கண்ட பாத்திமா(ரலி) ஒரு பாயை எடுத்து அதை எரித்து (அதன் சாம்பலை) நபி(ஸல்) அவர்களின் காயத்தின் மேல் வைத்து அமுக்கி விட இரத்தம் (வழிவது) நின்று விட்டது.

ஹுனைன் யுத்தத்தின் போது உம்மு ஸுலைம்(ரலி) அவர்கள் பட்டாக்கத்தி ஒன்றை தம்முடன் வைத்து இருந்தார்கள். அதனை அபூதல்ஹா(ரலி) அவர்கள் அண்ணலாரிடம் சென்று முறையிட்டார்கள். உம்மு ஸுலைமிடம் நபியவர்கள் கேட்டார்கள். இதென்ன பட்டாக்கத்தி? “அல்லாஹ்வின் தூதரே இணை வைப்பவர்களில் எவனாவது என்னை நெருங்கி வந்தால் இதனைக் கொண்டு அவனது வயிற்றைக் கிழிப்பதற்காகத்தான் இதை எடுத்துள்ளேன், வேறொன்றும் இல்லை” என்று விளக்கினார்கள். உம்மு ஸுலைம் (ரலி) இதனைக் கூறியதும் நபி (ஸல்) அவர்கள் புன்னகை வெளிப்படுத்தினார்கள்.

பங்கம்

ஹுனைன் யுத்தத்தில் ஒரு கட்டத்தில் நபியவர்களை விட்டு முஸ்லிம் வீரர்கள் ஓடிய நேரத்தில் நபியை பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உம்மு ஸுலைம்(ரலி) அவர்கள் இந்த சூழ்நிலையில் ஆயுதம் தாங்கி நபியை பாதுகாத்து நின்றார்கள்.

உம்மு உமாரா(ரலி ) அவர்கள் இரண்டாவது அகபா உடன்படிக்கையில் நபிகள் நாயகத்திடம் பைஅத் செய்த இரண்டு பெண்களில் முதலாமானவர். உஹது போர்க்களத்தில் இவர்கள் காட்டிய வீரம் நபியவர்கள் இவரை "உஹது போர்க்களத்தின் வீராங்கனை" என எல்லா ஸஹாபாக்களின் முன்னிலையில் பாராட்டினார்கள். உஹதுப் போர்க்களத்தில் ஒரு கட்டத்தில் எதிரிகள் நபியைச் சூழ்ந்த போது நபியைச் சுற்றி வளையமாக நின்று காத்த 13 பேர்களின் முன்னிலையில் நின்ற ஒரே பெண்மணி உம்மு உமாரா(ரலி) அவர்கள். எதிரிகளின் அம்பு நபி(ஸல்) அவர்களின் மீது படாதவாறு கேடயமாக நின்று வாளை சுழற்றி நபியைக் காத்து நின்றார்கள். நபிகள் நாயகத்திடம் செய்த பைஅத்தை நிறைவேற்றியவராக போர் முடியும் வரை பாதுகாப்பாக நின்றார்கள். தன் கணவர், மகன்களையும் அழைத்து அழைத்து பாதுகாப்புக்காக நிறுத்தினார்கள். இந்த போரில் உம்மு உமாரா(ரலி) நபி(ஸல்) அவர்களை பாதுகாப்பதில் கவனமாக இருந்தார்கள். இந்த போரில் உம்மு உமாரா(ரலி) அவர்களின் மகன் காயமடைந்தார்கள். ஆனால் உம்மு உமாரா(ரலி) நபியை பாதுகாப்பதில் கவனமாக இருந்தார்கள். இறுதியில் நபிகள் நாயகம்(ஸல்) உன்னுடைய மகன் காயத்திற்கு நீயே மருந்திட்டுக் கொள் என்று கூறிய போதுதான் தன் மகன் காயமடைந்திருப்பதை உணர்ந்தார்கள். அவருடைய காலில் மருந்து வைத்து கட்டினார்கள். பிறகு எழுந்து சென்று இறுதிவரை போராடு என்று கூறினார்கள்.

இப்னு காமிஆ என்பவன் நபியவர்களை வாளைக் கொண்டு தாக்கினான். நபியவர்கள் இரும்பு தொப்பி அணிந்திருந்தார்கள். அதனுடைய வளையங்கள் முகத்தில் குத்தி இரத்தம் பீறிட்டு ஓடியது உம்மு உமாரா(ரலி) முன்னேறிச் சென்று இப்னு காமிஆவைத் தாக்கினார்கள். அவன் இரண்டு கவசங்கள் அணிந்திருந்தான். ஆதலால் உம்மு உமாராவின் வாள் ஒடிந்து விட்டது. இப்னு காமிஆவின் பதில் தாக்குதலில் உம்மு உமாராவின் தோளில் கடுமையான வெட்டுக்காயம் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் பயந்து போன இப்னு காமிஆ அங்கிருந்து ஓடி விட்டான். தன் இரத்தக் காயத்தோடு மீண்டும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை பாதுகாக்க நின்றார்கள். "இவர்கள் அனைவரையும் நாளை மறுமை நாளில் என்னுடன் இருப்பவர்களாக ஆக்கி வைப்பாயாக" என்று நபி(ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

அஸ்மா(ரலி) அவர்களுக்கு 100 வயது இருக்கும். அவர்களின் பார்வையும் மங்கிப் போய் இருந்தது அவர்களின் மகனாரர் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர்(ரலி) இறையாட்சிக்கு எதிராக நடத்திய யஜீதை எதிர்த்துப் போராடி வந்தார்கள். பிறகு மர்வான் என்பவர் கலீஃபா ஆனார். இருவரையும் மிகத்துணிவுடன் வெற்றிகரமாக எதிர்த்து வந்தார்கள். மர்வானுக்குப் பிறகு அப்துல் மாலிக் ஆட்சிக்கு வந்தார். இவருக்கு ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் என்ற ஆளுநர் இருந்தார். இவர் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர்(ரலி) அவர்கள் பெற்று வந்த செல்வாக்கையும், ஆதரவுகளையும் குலைத்தார். இறுதியில் உயிர்த்தியாகிகளால் வாய்மையான வீரர்கள் ஒரு சிலரே அவர்களுடன் இருந்தார்கள். போரில் தனது இறுதி முடிவை உணர்ந்த அப்துல்லாஹ் இப்னு ஜுபைர்(ரலி) தன் தாயை சந்தித்து போரின் நிலைமையைக் கூறி ஆலோசனை பெற வந்தார்.

அஸ்மா(ரலி) தன் மகனைப் பார்த்து கூறினார்கள்:

“அன்பு மகனே உனக்கு எது நன்மை அளிக்கக் கூடியது என்பதை நீயே நன்கு அறிவாய். நீ சத்தியத்தின் பக்கம்தான் இருக்கின்றாய் என்பதில் உனக்கு உறுதி இருந்தால் நீ நிலைகுலையாதிருக்க வேண்டும். நீ ஆண்மகனைப் போன்று போரிடு. உயிருக்கு அஞ்சி எவ்வித இழிவையும் சுமந்து கொள்ளாதே. வாளேந்தி போரிட்டு கண்ணியமாக மரணிப்பது இழிவுடன் இன்பமாய் வாழ்வதை விட சிறந்ததாகும். நீ வீரனாக மரணமடைந்தால் அப்போது நான் மகிழ்வேன். ஆனால் அழிந்து போகும் இந்த உலகை வணங்கி வழிபடுவாயானால் உன்னை விடவும் கேடு கெட்டவன் யார் இருக்க முடியும்? நீ எது வரையில் வாழ்ந்திடுவாய்? என்றாவது ஒருநாள் மரணம் அடையப் போகிறாய். எனவே நற்பெயருடன் மரணமாகு. அப்பொழுது நான் பெருமைப்படுவேன்”

அப்துல்லாஹ் இப்னு ஜூபைர்(ரலி) அவர்கள் தாயாரின் துணிவான பேச்சைக் கேட்டதும் மனம் நெகிழ்ந்து பண்புடன் கேட்டார்கள். “என் அன்புத் தாயே, ஷாம் தேசத்து மக்கள் என்னைக் கொன்று எனது உடலைப் பலவிதமாக கோரப்படுத்திவிடுவார்களே எனும் அச்சம் எனக்கு உள்ளதே.” “மகனே உன்னுடைய எண்ணம் சரிதான். ஆனால் ஆட்டை அறுத்த பிறகு அதனுடைய தோலை உரிப்பதானாலோ அதன் சதைகளை வெட்டுவதினாலோ அதற்கு எந்த வேதனையும் ஏற்படாது.” அப்துல்லாஹ் இப்னு ஜூபைர்(ரலி) அவர்கள் எதற்காக இவ்வாறு கேட்டார்கள் என்றால் தம்மைக் கொன்று உடலை சிதைத்து விடுவார்கள் என்ற அச்சத்தில் அல்ல. மாறாக வயது முதிர்ந்த தனது தாய் இந்த துக்கத்தை எவ்வாறு தாங்கிக் கொள்வார்கள் என்பதை அறிவதற்காகத்தான். தன் தாயார் திருப்தியுடன் இருப்பதை அறிந்ததும் தன் தாயை கட்டித் தழுவினார்.

அஸ்மா(ரலி) பார்வையை இழந்திருந்தார்கள். தம் அன்பு மகனை ஆரத்தழுவிய போது அவருடைய உடலின் மீது உருக்கு கவசம் இருப்பதை கரங்கள் உணர்த்தின. “மகனே யார் சத்தியத்திற்காக உயிரைத் தியாகம் செய்ய விரும்புகிறார்களோ அவர்கள் கவசம் அணிந்து கொள்வதில்லை. எனவே அதை கழற்றி விடு. ஆடையை இறுக்க கட்டிக்கொண்டு எதிரிகள் மீது தாக்குதல் தொடு” என்று அறிவுறுத்தினார்கள். அப்துல்லாஹ் இப்னு ஜூபைர்(ரலி) அவர்கள் அவ்விதமே செய்தார்கள். வீர மரணத்தை மகிழ்வுடன் ஏற்றார்கள்.

அஸ்மா(ரலி) அவர்கள் “நான் என்னுடைய வீரத்திருமகனின் உடலைப் பெற்று முறையாக குளிப்பாட்டி துணி போர்த்தி அடக்கம் செய்யாதவரை எனக்கு மரணம் வரக்கூடாது” என்று பிரார்த்தனை செய்தார்கள். அவ்வாறே அவர்களின் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிதைக்கப்பட்ட தன் மகனின் உடலைக் கண்டபோது அஸ்மா(ரலி) அவர்களின் நாவு அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்தது. பொறுமையைப் பேணியவர்களாக இருந்தார்கள். மகனார் அடக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் தாயாரும் மக்காவில் மரணமடைந்தார்கள்.

ஸஃபிய்யா(ரலி) அவர்கள் வீரமும், துணிவும் மிக்கவர். இவர்களது குடும்பமே வீரத்திற்கு பெயர் பெற்ற குடும்பம். இவர்களுடைய சகோதரர் இஸ்லாத்திற்காக உயிர் நீத்த ஹம்ஸா(ரலி), இவர்களுடைய மகனார் ஜூபைர்(ரலி), மருமகள் அஸ்மா(ரலி), இவர்களுடைய பேரர் “போர்க்களத்தின் ஜின்” என்று பெயர் பெற்ற அப்துல்லாஹ் இப்னு ஜூபைர்(ரலி) இவர்களுடைய குடும்பமே வீரத்திற்கும், தியாகத்திற்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்கள். குதிரைச் சவாரியிலும், வாள் வீச்சிலும், ஈட்டி எறிவதிலும் நல்ல பயிற்சி பெற்ற ஸஃபிய்யா(ரலி) அவர்கள் போர்க்களத்தில் புகுந்து மிகுதிறன் பெற்ற வீரனைப் போன்று தாக்குதல் தொடுப்பார்கள்.

ஸஃபிய்யா(ரலி) அவர்கள் தன் மகன் ஜூபைர்(ரலி) அவர்களை அதிகக் கண்காணிப்புடன் வளர்த்து வந்தார்கள். அவரை போர்த்திறன் மிக்க மாவீரனாக வளர்க்க வேண்டும். அச்சத்திற்கும். கோழைத் தனத்திற்கும் ஆளாகக் கூடாது என்பதில் லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். அதற்காக கடுமையான வேலைகளை ஜூபைர்(ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். இவர்களுடைய உறவினர்கள் ஸஃபிய்யா(ரலி) பிள்ளையை மிகவும் சிரமப்படுத்துவதாக கண்டித்தார்கள். அதற்கு ஸஃபிய்யா(ரலி) என்னுடைய பிள்ளை

பேரறிஞனாய்த் திகழ வேண்டும். பெரிய படையையும் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கண்டிப்புடன் வளர்க்கிறேன்." என்றார்கள்.

அகழ் யுத்தத்தின்போது அரபுகளும், யூதர்களும் முஸ்லிம்களை இல்லாமல் ஆக்கி விட வேண்டும் என்று ஒன்று திரண்டார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் ஒப்பந்தம் செய்திருந்த பனூகுறைளா யூதர்கள் ஒப்பந்தத்திற்கு மாறாக முஸ்லிம்களுக்கு துரோகம் செய்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்களை பாதுகாக்க ஹஸ்ஸான் இப்னு ஸாபித்(ரலி) அவர்களுக்குச் சொந்தமான ஒரு கோட்டைக்கு பாதுகாப்புக்காக இருக்க ஏற்பாடு செய்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் அனைத்து ஸஹாபாக்களும் போரில் ஈடுபட்டிருந்ததால் அந்த கோட்டைக்கு எந்த பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் ஒரு யூதன் கோட்டையின் நிலவரம் என்னவென்று பார்க்க முயன்றான்.

ஸஃபிய்யா(ரலி) அந்த யூத உளவாளியைப் பார்த்து விட்டார்கள். இங்கு பாதுகாப்பிற்கு ஆட்கள் இல்லை என்பதை அந்த உளவாளி யூதர்களிடம் கூறி விட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்த ஸஃபிய்யா(ரலி) அவர்கள் ஹஸ்ஸான்(ரலி) அவர்களிடம் அந்த யூதனைக் கொன்று விடுமாறு கூறினார்கள். முதுமை மற்றும் முழங்கையில் நரம்பு வெட்டுப்பட்டு இருப்பதால் தன்னால் இயலாது என்று கூறி விட்டார். ஸஃபிய்யா(ரலி) அவர்களே தனியாக சென்று அந்த யூதன் எதிர்பார்க்காத நேரத்தில் அவன் தலையில் அடித்து அவனைப் பிணமாக்கினார்கள். அத்தோடு இல்லாமல் அவன் தலையை வெட்டி கோட்டையின் உச்சியிலிருந்து தூரமாக எறிந்தார்கள்.

துண்டிக்கப்பட்ட தலையைக் கண்ட பனூ குறைளா யூதர்கள் முஸ்லிம்களின் படை அங்குள்ளது என்று எண்ணி கோட்டையைத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டார்கள். இந்த போரில் மருத்துவ சேவையாற்றிய பெண்களுக்கும் போரில் கைப்பற்றப்பட்ட பொருள் களை பகிர்ந்தளித்த நபிகள் நாயகம்(ஸல்) அதில் ஸஃபிய்யா(ரலி) அவர்களுக்கு அதிக பங்கை அளித்து கௌரவித்தார்கள்.

கலீஃபா உமர்(ரலி) ஆட்சி காலத்தில் நடந்த காதிலிய்யா போர். இதில் எதிரிகள் சுமார் 2 லட்சம் பேர் கொண்ட பெரும்படை. முஸ்லிம்களின் படையோ சுமார் நாற்பதாயிரம் பேர்தான் இருந்தார்கள். இந்த முக்கியமான போரில் ஜிஹாதின் மீது ஆர்வம் கொண்ட கன்ஸா(ரலி) அவர்கள் தங்களின் நான்கு இளம் துடிப்புமிக்க மகன்களுடன் வந்திருந்தார்கள். போரின் முதல்நாள் இரவில் அனைத்து வீரர்களும் நாளைய போரைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த போது கன்ஸா(ரலி) தங்கள் நான்கு பிள்ளைகளையும் அழைத்து ஓர் உணர்ச்சி மிகு உரையைக் கூறினார்கள். “என் அன்புச் செல்வங்களே இறைவழியில் ஜிஹாத் செய்வதை விடவும் அதிகமான நன்மையைப் பெற்றுத் தரும் காரியம் வேறொன்றும் இல்லை என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். மேலும் மறுமையின் நிலையான வாழ்க்கை, அழியும் இவ்வுலக வாழ்க்கையை விட எவ்வளவோ சிறந்ததாகும் என்பதையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள்.”

அல்லாஹ் கூறுகின்றான் “இறைநம்பிக்கை கொண்டவர்களே, பொறுமையைக் கைகொள்வீர்களாக, அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக, (சத்தியத்திற்காக தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர் களாக. மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழ்வீர்களாக, இதனால் நீங்கள் வெற்றியாளர் களாய்த் திகழக் கூடும். (ஆல இம்ரான் : 200)

என் அருமைப் புதல்வர்களே, போர் சூடு பிடிக்க ஆரம்பித்து, அதன் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்குவதை நீங்கள் கண்டதும் கிளர்த்தெழுந்து, ஆர்ப்பரித்து எதிரிகளின் அணிகளிடையே ஊடுருவிச் செல்ல வேண்டும். இறைவழியில் பித்துப் பிடித்தவர்களாக வாட்களை சுழற்றி தாக்குதல் தொடுத்திட வேண்டும். அல்லாஹ்விடம் உதவி கோரி

பிரார்த்தனை புரிந்த வண்ணம் இருங்கள். வெற்றி கிடைத்தால் அது நல்லது. ஆனால் மரணமடைந்திட நேர்ந்தால் மறுமையின் சிறப்பிற்குரியவர்களாய் ஆவீர்கள் என்பது அதை விடவும் மிக உயர்வானதாகும்.

மறுநாள் காலை போர் உச்சக் கட்டத்தை அடைந்ததும் அந்த நான்கு பிள்ளைகளும் தாயின் அறிவுரைப்படி வீரத்துடன் எதிரிப் படைகளில் ஊடுருவி தாக்குதல் தொடுத்தனர். வெகுநேரம் வரை அயராமல் போர் புரிந்தனர்.

இறுதியில் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாக்கப்பட்டனர். தன் பிள்ளைகள் போரில் வீர மரணம் அடைந்ததை கேள்விப்பட்ட கன்ஸா(ரலி) அவர்கள் "என்னுடைய பிள்ளைகளுக்கு ஷஹாதத் எனும் உயர்ந்த பதவியை வழங்கிய இறைவனுக்கு நன்றி உரித்தாவதாக, அல்லாஹ்வுடைய அருளின் நிழலில் என்னுடைய பிள்ளைகளை நான் சந்திப்பேன் எனும் நம்பிக்கை அவனுடைய கருணையால் எனக்கு உள்ளது " என்று கூறினார்கள்.

அனஸ்(ரலி) அறிவிக்கின்றார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மில்ஹானின் மகளான உம்மு ஹராம்(ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அங்கு சாய்ந்து அமர்ந்து (உறங்கிக்)கொண்டிருந்து பிறகு (விழித்தெழுந்து) சிரித்தார்கள். உம்மு ஹராம்(ரலி) இறைத்தூதர் அவர்களே ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள் "என் சமுதாயத்தில் சிலர் இறைவழியில் (போரிடுவதற்காக) கடலில் பயணம் செய்வார்கள். அவர்களின் நிலை கட்டில்களில் (சாய்ந்து) வீற்றிருக்கும் அரசர்களைப் போன்றதாகும்" என்று கூறினார்கள். அதற்கு உம்மு ஹராம்(ரலி) "என்னையும் அவர்களில் ஒருத்தியாக ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்" என்று கூறினார்கள். நபி (ஸல்) இவரையும் அவர்களில் ஒருவராக ஆக்குவாயாக என்று பிரார்த்தித்தார்கள். பிறகு மீண்டும் அவ்வாறே உறங்கிக் கொண்டிருந்து விட்டு பிறகு விழித்தெழுந்து சிரித்தார்கள். முன்பு கேட்டதைப் போன்றே ஏன் சிரிக்கிறீர்கள்? என்று நபி(ஸல்) அவர்களிடம் உம்மு ஹராம்(ரலி) கேட்டார்கள். நபி(ஸல்) அவர்களும் முன்பு பதிலளித்ததைப் போன்றே பதிலளித்தார்கள்.

அதைக் கேட்டு உம்மு ஹராம்(ரலி) நபி(ஸல்) அவர்களிடம், "என்னையும் அவர்களில் ஒருத்தியாக ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நீங்கள் கடற்பயணம் செய்து ஜிஹாதிற்கு முதலாவதாகச் செல்பவர்களில் ஒருவராக இருப்பீர்கள். பிற்பாடு செல்பவர்களில் ஒருவராக இருக்க மாட்டீர்கள் என்று கூறினார்கள். பிறகு உம்மு ஹராம்(ரலி) உபாதா இப்னு ஸாமித்(ரலி) அவர்களை மணந்தார்கள். பிறகு தரழா இப்னு அப்தி அமர் என்பவரின் மகளுடன் ஜிஹாதிற்காக கடல் பயணம் சென்றார்கள். அவர்கள் போர் முடிந்து புறப்பட்ட போது தம் வாகனப் பிராணியின் மீது ஏற அது அவர்களை கீழே தள்ளி விட்டது. அவர்கள் அதிலிருந்து விழுந்து இறந்து விட்டார்கள்.

பெண்களுக்கு ஜிஹாத் கடமையில்லை என்றாலும் ஜிஹாத் மீது அவர்கள் கொண்ட நேசம் அவர்களை ஜிஹாதுடைய களத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கு அவர்கள் போராளிகளுக்கு உதவும் விதமாக அம்புகளை எடுத்துக் கொடுப்பது, தண்ணீர் கொடுப்பது, மருத்துவ உதவி செய்வது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வந்தனர். இன்னும் இந்த களத்தில் தான் போராட முடியவில்லை என்றாலும் தன் கணவன், பிள்ளைகள், சகோதரர் களை ஜிஹாதிற்கு அனுப்பி வைத்தனர். அதற்காக தயார்படுத்தி மகிழ்ந்தார்கள். ஜிஹாதில் தன் உறவுகள் ஷஹீதான செய்தியை கேட்டு தனக்கு முன்னதாக தனது உறவுகள் சுவனம் சென்றதை அறிந்து இறைவனுக்கு நன்றி செலுத்தி மகிழ்ந்தார்கள். இன்னும் இக்கட்டான போர்ச் சூழலில் இஸ்லாத்தையும், நபிகள் நாயகத்தையும் காப்பதற்காக நிர்ப்பந்தமான சூழலில் வாளை சுழற்றி வீரத்தை வெளிப்படுத்தியவர்கள் நம் இஸ்லாமிய வீரப் பெண்மணிகள்.

# வாசகர்களின் எண்ணங்கள்

**Vaigarai Velicham Official**
@VAIGARAIVELICHAMOFFICIAL · 22K subscribers · 778 videos
More about this channel >
Join | Customize channel | Manage videos

@princesssweety2493 • 9d ago
🎉உங்களைப் போன்ற உண்மையை கூறக்கூடிய பத்திரிகையாளர்கள் நாட்டிற்கு மிகவும் அவசியம் 🩶 உங்களுடைய பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள் 🎉🎉🎉🎉
12

@shamsudeensa8191 • 8d ago
உங்கள் செய்தியை எதிர்பார்த்து காத்திருந்துவருகிறோம்.காலை மாலைபோடுங்கள்
3

@hameedfarook4160 • 13d ago (edited)
உங்களுடைய தகவல் மிகவும் உண்மையானதாக பார்க்கப்படுகிறது ..
12

@khaderquryshi5898 • 5d ago
Thanks very much for your unbiased reliable updated news and highly appreciated. Good Luck always.
4

@bmz8018 • 5d ago
மனசுக்கு ஆறுதல்தரக்கூடிய உண்மை செய்திகள்.தொடர்ந்து தாருங்கள்.வாழ்த்துக்கள்
15

@hameedfarook4160 • 4d ago
உங்களின் உண்மைச்செய்திகள் மக்களினால் வரவேற்கப்படுகிறது

@khaderquryshi5898 • 4d ago
Thanks very much for your unbiased reliable updated news
4


@serendipity5951 • 4d ago
Thank you, Mr Journalist. You are doing a great job at your age. May God bless you.
2

@rpprabhakaran7827 • 2d ago
அய்யா விஷயங்களை தெளிவாக தெரிவிக்கிறீர்கள் பொறுமையாக சொல்கிறீர்கள்.. நன்றி. விரைவில் பாலஸ்தீன மக்களுக்கு அல்லா அவர்கள் நல்லதொரு தீர்வை வழங்கும் நாளை எதிர் பார்த்துக்கொண்டு இருக்கிறேன் அய்யா வணக்கம்.
18

@yasminbanu4092 • 1d ago
Nice information...ya Allah give grant victory to Palestine.... shower your blesses on Palestine people's
1

@cresbery3304 • 1d ago
Great and very clear explanation. I appreciate for your great effort and anylization.
3

@zuhaib2760 • 5h ago
இந்தியன் தமிழ் you tube செய்திகள் மிகவும் மோசமா இருக்கு பெறுமதியான உங்கள் செய்திகளுக்கு நன்றி
2



# குளிர் கால பிரச்சனைகளை எதிர்கொள்வது எப்படி?

மருத்துவம்

தொடர்

தமிழ்நாட்டில் குளிர் காலம் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஏற்படும். மழை சற்றுக் குறைவாகவும் குளிர் அதிக மாகவும் உள்ள பருவம் இது. இருப்பினும் அனைவரும் விரும்பும் பருவம் இக்காலம்தான். சுட்டு எரிக்கும் வெயிலின் கொடுமையிலிருந்து இளைப்பாற இது ஒரு பொன்னான பருவம். இம்மாதங்களில் சிறுசிறு தொல்லைகளும் நோய்களும் வர வாய்ப்புண்டு, முக்கியமாகக் குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்குச் சில பாதிப்புகள் ஏற்படுவதுண்டு.

**சருமம் சார்ந்த நோய்கள்**

- தோல் மிகவும் வறட்சியாக இருக்கும்.
- அரிப்பு அதிகமாக இருக்கும்.
- எக்சீமா போன்று தோல் தொல்லைகள் அதிகமாகும்.
- தலையில் பொடுகு அதிகரிக்கும்.
- தோலின் கருப்பு நிறம் அதிகரிக்கும்.
- உதடுகளில் வெடிப்பு தோன்றும்.
- முதியோர்களுக்கும், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் மேற்கண்ட தொல்லைகள் அதிகம் வரும்.

**நிவாரணம்**

- தலைக்குத் தவறாமல் தினமும் எண்ணெய் தேய்த்துக்கொள்ள வேண்டும்.
- மிருதுவான சோப்பையே உபயோகிக்க வேண்டும்.
- தலைக்கு அடிக்கடி ஷாம்பூ உபயோகித்தல் அவசியம்.
- தோல் வெடிப்புள்ள இடத்தில் பெட்ரோலியம் ஜெல்லி சார்ந்த களிம்பைத் தடவவும்.
- வாரம் ஒருமுறை எண்ணெய்க் குளியல் தோலுக்கு நல்லது. வறட்சியை நீக்கும்.
- ஈரப்பசை தரும் களிம்பு அல்லது எண்ணெயை உடலில் தடவி வரலாம்.

- ➢ குளிரைக் குறைக்க தேவையான உடைகளை உடுத்தவும்.

**மூட்டுத் தொல்லைகள்**

- ➢ மூட்டுகளில் வலி அதிகரிக்கும்.
- ➢ மூட்டுகளில் இறுக்கம் அதிகரிக்கும்.
- ➢ மூட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் ஒருவிதமான மரத்த உணர்ச்சி தோன்றும்.

**நிவாரணம்**

- ➢ தவறாமல் செய்யும் நடைப்பயிற்சி மிகவும் அவசியம்.
- ➢ இயன்முறைச் சிகிச்சை தேவையானால் செய்ய வேண்டும்.
- ➢ குளிர் காலத்தில் வெளியே செல்ல முடியாதவர்கள் வீட்டிற்குள்ளேயே யோகா பயிற்சியைச் செய்யலாம்.

**வயிறு - குடல் சார்ந்த நோய்கள்**

சுகாதாரமில்லாத உணவு விடுதிகளில் உணவு உண்ணும் போது வயிறு, குடல் சார்ந்த நோய்கள் வர வாய்ப்புண்டு.


உதாரணம்: டிசென்ட்டிரி, அமீபா சார்ந்த பேதி நோய், கிருமிகளினால் பாதிக்கப்பட்ட கெட்டுப்போன உணவால் உண்டாகும் வாந்தி, பேதி, வயிற்று வலி மற்றும் காலரா, டைபாய்டு போன்ற நோய்களும் வர வாய்ப்புண்டு.

பாக்டீரியா போன்ற கிருமிகள் குளிர்ந்த நிலையில் நன்றாக வளரும். ஆகையால் குளிர் காலத்தில் குளிர்ந்த பானங்கள் மற்றும் ஐஸ்க்ரீம் போன்ற உணவுகளினாலும் உடல் நலம் பாதிக்கப்படலாம். மேற்கண்ட காரணங்களால் வயிற்று வலி, வாந்தி மற்றும் பேதி சார்ந்த தொல்லைகள் வரலாம்.

**நிவாரணம்**

- முடிந்தளவிற்கு வீட்டிலேயே உணவை உண்ண வேண்டும்.
- வெளியில் சாப்பிடும் போது, தெருவோர உணவகங்களில் உணவு சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.
- குளிர்ந்த பானங்கள், ஐஸ்க்ரீம் போன்றவற்றை அறவே தவிர்க்க வேண்டும்.
- கொதிக்க வைத்து, ஆற வைத்த தண்ணீரையே வீட்டிலேயும் வெளியிலும் குடிக்க வேண்டும்.
- வெளியே செல்லும் போது சூடான தண்ணீர் நிரப்பிய பாட்டிலை அவசியம் எடுத்துச் செல்லவும்.

**நன்றி: முதுமை எனும் பூங்காற்று**





முஸ்லிம்கள் தான் கஷ்மீரிலிருந்து பண்டிட்டுகளை விரட்டியடித்தார்கள் என்ற ஒரு பொய் பிரச்சாரத்தை நீண்ட நாட்களாகவே பாசிஸ்டுகள் பரப்பி வருகின்றனர். அதுகுறித்த உண்மை வரலாற்றை அறிய நமது ஆசிரியர் அவர்களின் தொகுப்பில் வெளிவந்த நூலான "கஷ்மீரின் பாதி விதவைகள்" எனும் நூலை வாங்கிப் படியுங்கள். நூலைப் பெறுவதற்கான தொடர்பு எண் - 8148129887.

## ✍ CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு- ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.



எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் நிரம்பவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் இஸ்லாத்திற்கு எதிரான சதிகளை அறிந்திடலாம். அவற்றை முறியடிக்க, ஆக்கபூர்வமான செயல் திட்டங்களைத் தீட்டலாம்.

**✍ தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# ஜான் பெப்ஃபர் கூறகின்றார்.....!

இன்றைய நாட்களில் இஸ்லாத்திற்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் வெறுப்பை வளர்க்க நினைக்கும் மேலை நாட்டவர்கள், அன்றைய சிலுவைப் போர்களின் போது சொன்ன பொய்களை அப்படியே பரப்புகின்றார்கள். எனினும் அந்தப் பொய்களுக்கு முடிந்தவரை நவீன வடிவங்களைத் தருகின்றார்கள்.


வரலாற்றின் மத்திய காலகட்டங்களில் ஒரு வழக்கமிருந்தது அது இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் என்ற நம்பிக்கையில் இருந்து முஸ்லிம்களை திசை திருப்புவது. முஸ்லிமல்லாதவர்களின் உள்ளத்தில் முஹம்மத்-ஐ மலிவாகக் காட்டுவது. இதற்காக முஹம்மத்-இன் வாழ்க்கை வரலாற்றை திரித்தும், சிதைத்தும் எழுதுவது.(S79)



எடுத்துக்காட்டாக ROBERT SPENSER இராபர்ட் ஸ்பென்சர் என்றொரு எழுத்தாளர். இவர் ஓர் நிறுவனத்தை வைத்துக் கொண்டார், அந்த நிறுவனத்தின் பெயர் "ஜிஹாத் -கண்காணிப்பு" (Jihad Watch). இவர் ஓர் நூலை எழுதுகின்றார், அதன் பெயர் "The Truth About Muhammed : The Founder Of The World Most Intolerant Religion" பொருள்: "முஹம்மத்-ஐ பற்றிய உண்மைகள், இந்த உலகின் அறவே சகிப்புத்தன்மையற்ற மதத்தை நிறுவியவர்". இதில் சிலுவைப்போர்(1) ஒன்றில் சொன்ன எல்லா புனைந்துரைகளுக்கும் புது வடிவம் தந்தார். மெருகூட்டி மக்களைக் கவர்ந்திழுத்தார்.



JOHN FEFFER




இத்தோடு நில்லாமல் முஸ்லிம்களை ஆத்திரப்பட வைத்திடும் அளவில் அவர்கள் மீது அவதூறுகளை அள்ளிக் கொட்டுவது. ஆத்திரமடையும் முஸ்லிம்கள், வன்முறையில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்ப்பது. ஆத்திரம் அடைந்தவுடன் அவர்கள் சகிப்புத்தன்மை அற்றவர்கள் எனப் பரப்புவது.

(கர்தோபாவில்) ஸ்பெயின் நாட்டின் தலைநகரில் ஒன்பதாம் நூற்றாண்டில் இதைத்தான் செய்தார்கள். அப்போது மஸ்ஜிதுகளிலும், தொழுகை நேரங்களிலும் பொது

இடங்களிலும் வைத்து முஹம்மத் (ஸல்) அவர்களை இழித்தும், பழித்தும் கோஷம் போடுவது. இதனை செவி மடுக்கும் முஸ்லிம்கள் கிளர்ந்தெழுவார்கள். அதைக் கொண்டு அவர்கள் வன்முறையாளர்கள், சகிப்புத்தன்மை அற்றவர்கள் என குறை கூறுவது. முடிந்தால் அவர்களின் உயிரைக் குடிப்பது.

இன்றைய நாட்களில் முஸ்லிம்களை ஆத்திரப்படுத்திட நாம் கையாளும் வழிமுறை திருக்குர்ஆன் பிரதிகளை எரிப்பது. இதனால் முஸ்லிம்கள் பயங்கரமாக வேதனையடைவார்கள். வேதனையின் வெளிப்பாட்டால், வன்முறையில் ஈடுபடுவார்கள் என்பதை தெரிந்து வேண்டுமென்றே இதனை செய்கின்றோம். கேட்டால் இது எங்கள் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இவற்றோடு சம்பந்தப்பட்டது எனக் கூறி விடுவது.

இன்றைக்கும் நாம், முஸ்லிம்களை வன்முறையாளர்கள், துரோகிகள் இஸ்லாம் மட்டுமே தலைத்தோங்க வேண்டுமென்று இரகசியத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுபவர்கள் என்றெல்லாம் தான் பிரச்சாரம் செய்து வருகின்றோம். ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இதையே செய்து வந்தோம்.

முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் யாராவது ஏதேனும் தவறு செய்தால் அதை மொத்த முஸ்லிம்களோடும், இஸ்லாத்தோடும், அதன் அடிப்படைகளோடும் முடிச்சுப்போட்டு முழுமூச்சாய் பிரச்சாரம் செய்து விடுவோம். அதன் வழி பல சொல்லாட்சிகளைப் புனைந்து விடுவோம். அதனை முஸ்லிம்களின் மறு பெயராக மாற்றி விடுவோம். (எடுத்துக்காட்டு : தீவிரவாதம்)

தீவிரவாதி - தீவிரவாதம் என்றாலே அது முஸ்லிம்களைத் தான் குறிக்கும் என்பது போல். இதன் மூலம் மேலை நாடுகள் தங்கள் தீவிரவாதத்தை நியாயப்படுத்தி விடுகின்றன. பலியானவர்களே பழியைச் சுமக்க வேண்டும். இப்போது நாங்கள் இன்னும் பல உத்திகளைக் கையாளுகின்றோம். அதனை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்

தொடரும்


**ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின்**
**தியாக வரலாறு**

**விலை 120/-**




முஜாஹிதீன் என்றழைக்கப்படும் இவர்கள் யார்? எல்லாம் வல்ல இறைவனைத் தவிர வேறு யாருக்கும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, அடிபணியத் தேவையில்லை என்ற இஸ்லாமியத் தத்துவத்தை முன்னிறுத்தி தங்கள் வாழ்வின் அனைத்து சுகங்களையும் தியாகம் செய்து, தமது தாய்நாட்டை ஆக்கிரமித்த அந்நிய நாட்டவடை எதிர்த்து வீறுகொண்டெழுந்தவர்கள் தாம் இந்த முஜாஹித்கள்.



ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து ஆட்சி நடத்தலாம்; கம்யூனிஸத்தை அந்நாட்டு மக்களிடம் திணித்து விடலாம் என்ற எண்ணத்தில் தனது ராணுவத்தை அனுப்பு அட்டூழியம் செய்த ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் எண்ணத்தையே தூள்தூளாக்கிய அந்த விடுதலைப் போராளிகளின் வீர வரலாறு தான் இந்த நூல்.

இதுபோன்ற நூல்களை சகோதர சமுதாயத்தவர்களுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம், தேவைப்பட்டால் வாங்கித் தருவதன் மூலம் வாசகர்களும் உண்மையை ஊரறியத்தரும் முயற்சியில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்....!

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்


**மு.குலாம் முஹம்மது M.A.,**

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# இந்தியாவில் முஸ்லிம்கள்

மூலம்: அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)

# இஸ்லாமிய நாகரிகத்தை கட்டிக் காத்த இந்திய முஸ்லிம்கள்



தொடர் – 20

நிச்சயமாக முஸ்லிம்கள் இந்திய மரபோடு கலந்திருந்தாலும், இந்தியாவின் இயல்பான சூழல் அதன் சமூகம், நாகரீகத்தின் தாக்கத்தை பெற்றவர்களாக இருந்தாலும் தங்களது தனித்துவத்தை பாதுகாத்து மிகச்சிறந்த சமூகமாக விளங்குகிறார்கள்.

இதனையே குஸ்டாவ் லு பான் அவர்கள், "இந்திய நாகரிகம்" என்ற தனது நூலில் பின் வருமாறு புகழ்ந்து கூறுகிறார்,

> "இந்திய முஸ்லிம் சமூகம் தனது ஒழுக்கம், அணுகுமுறை, வாழ்வியல் மற்றும் பழக்க வழக்கங்களின் மூலம் தொடர்ந்து ஒரு சிறந்த சமூகமாக விளங்குகிறது. இந்தச் சிறப்பியல்புகளே இந்தியாவின் வெவ்வேறு பகுதியில் வாழும் அனைத்து முஸ்லிம்களை தனித்து காண்பிக்க கூடிய அடையாளமாகவும் மாறியுள்ளது."

> "கிழக்கில் உள்ள முஸ்லிம் சகோதரனை மேற்கில் உள்ள முஸ்லிம் சகோதரனோடு இணைக்கும் சங்கமாக இவையே

விளங்குகின்றன. தனக்கருகே வாழும், தனது மொழி பேசும் ஹிந்து சகோதரனை விட எங்கோ வாழும் முஸ்லிம் சகோதரனோடு இந்த விஷயங்களில் அவன் ஒன்றிப் போகிறான்."

"ஒரு மனிதன் தொலைதூர நாட்டிலிருந்து வந்து இந்திய சமூகத்துடன் கலந்து வாழும் போது, இந்திய நாட்டில் மிகச் சிறந்த இரு பெரும் சமூகங்கள், மிகச் சிறந்த இருபெரும் நாகரிகங்கள் உள்ளது. ஆனால் இந்த இரு சமூகங்களும் அதனது வாழ்வியல், கலாச்சாரம், ஒழுக்கம் என அனைத்திலும் தனித்து வத்தையும் ,வேறுபாட்டையும் கொண்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்வார்."

"நீங்கள் விருந்தாளியாக இருந்தால், ஒரு முஸ்லிம் சகோதரன் உங்களது நண்பனாக இருந்தால் உங்களுக்கும் அவருக்கும் மத்தியில் முன் அறிமுகமோ, தோழமையோ இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஏனென்றால் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரனாவான். வெளியூர் வாசியான முஸ்லிம் சகோதரன் உள்ளூர்வாசி முஸ்லிம் சகோதரனின் விருந்தாளியாவான். ஒரு முஸ்லிம் வீட்டிற்கு விருந்தாளியாக சென்றால் - இந்திய விருந்தோம்பலுக்கு முற்றிலும் மாற்றமாக மிகப்பெரிய உணவு மேஜையில் பெரிய உணவு பாத்திரங்கள், பெரிய சஹன்கள், பெரிய ரொட்டிகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வார். விருந்தாளி போதுமளவு உண்டு இன்னும் மீதம் இருக்குமளவு நிறைய உணவு இருக்கும்."

"விருந்தாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து உண்பார்கள். (அவர்கள் விரும்பினால் ஒரே சஹனில் அனைவரும் உண்பார்கள்). விசால மான உள்ளம், விசாலமான இல்லம், விசாலமான உணவு மேஜை. இஸ்லாமிய நாகரிகத்தோடு தனது தொடர்பை துண்டித்து, இந்தியாவின் பழமையான சமூகத்தோடு கரைந்திராத அனைத்து முஸ்லிம் களிடத்திலும், இந்த அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்ள இயலும்."

"ஒரு முஸ்லிமின் இயல்பான குணமே அவன் எங்கு உணவருந்தினாலும் அது ரயிலிலோ அல்லது காத்திருப்பு அறையிலோ அவன் உணவருந்த நாடினால் உடனே உணவருந்த உன்னையும் அழைப்பான் .உன்னை வற்புறுத்துவான்."

"இவ்வாறு இரு வேறுபட்ட நாகரிகமும் இந்தியாவில் ஒன்றுக்கொன்று அருகிலேயே வாழ்ந்தது. இயல்பிலேயே வேறுபட்ட இரு நாகரிகங்களும் ஒரே இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தது.

"இஸ்லாமிய நாகரீகத்துடைய நேர்த்தி, முஸ்லிம்களுக்கே உரித்தான விசாலமான உள்ளம், மனித நேயம் ஆகியவை இந்தியாவிற்கு வருகை புரிந்த அண்டை நாட்டுக்காரர்கள், சுற்றுலா பயணிகளது கவனத்தை ஈர்த்தது."

"தயாளத்தன்மை, விசாலமான பார்வை, மனிதநேயம் மற்றும் அனைத்து விஷயங் களிலும் நேர்த்தி, சுத்தம் ஆகியவற்றை முஸ்லிம்களிடையே விதைத்த இந்த இஸ்லாத்தை, அதன் நாகரிகத்தின் ஆன்மாவை அறிவதற்கு அறிவார்ந்த ஆளுமைகளை தூண்டியது. இன்னும் அவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றதற்கும் இதுவே காரணமாகும்."

அல்லாமா முஹம்மத் இக்பால்(ரஹ்) அவர்கள் தனது ஆங்கிலேய நண்பர்களிடம் பகிர்ந்து கொண்ட இரண்டு நிகழ்வுகளை இங்கே பதிவு செய்கிறோம்.

மிஸ்டர் டேவிட் ஓப்ஸன், ஆங்கிலேய பத்திரிக்கையாளர், லாஹுரிலிந்து வெளியாகும் பிரபல்யமான முஸ்லிம் ஔட்லுக் *(Muslim Outlook)* என்னும் ஆங்கில பத்திரிக்கையின் பத்திரிகையாளர். இவர் இஸ்லாத்தை ஏற்ற வரலாற்றை பின்வருமாறு விவரிக்கிறார்:

"நான் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்தேன். மும்பையில் தங்கினேன். எனது நண்பர்கள் அரசியல் கட்சிகளில் இருக்கிறார்கள். மதம் சார்ந்த வட்டாரத்தில் எனக்கு எந்த தோழமையும் இல்லை. நானும் அரசியல்



கட்சிகளில் பங்கெடுக்க துவங்கினேன். அங்கே சில முஸ்லிம்களை சந்தித்தேன். அடிக்கடி அவர்களை சந்திக்கும் சூழல் ஏற்பட்டது. ஒருமுறை முஸ்லிம் சகோதரன் ஒருவர் மதிய உணவிற்காக என்னை அழைத்தார். இஸ்லாமிய வழமைப்படி உணவு விரிப்பு விரிக்கப்பட்டது.

இஸ்லாமியர்கள் பெரும்பாலும் உண்ணக் கூடிய உணவுகள் வைக்கப்பட்டிருந்தது. இஸ்லாமியர்களது நாகரிகமிகுந்த நடைமுறை மற்றும் மிருதுவான பண்பு என்னை ஆச்சரியப் படுத்தியது. நான் எனது உள்ளத்தில் கூறிக் கொண்டேன்:

“நிச்சயமாக இந்த மக்கள் உயர்ந்த நாகரிகம், பூரண ஒழுக்க மாண்புகள், மிருதுவான பண்பு களை கொண்டவர்களாக இருக்கிறார்கள். உன்னதமான மார்க்கத்தை கொண்டவர் களிடத்தில் தான் இத்தகைய உன்னதமான ஒழுக்கங்கள் இருக்கும்.”

அவர்களுடைய அனைத்து விஷயங்களிலும் நேர்த்தி, தூய்மை நிச்சயம் இருக்கும். இதுவே இஸ்லாத்தையும் முஸ்லிம்களது வாழ்க்கை யையும் நான் அறிந்து கொள்வதற்கான காரணமாக அமைந்தது.

மற்றொரு விஷயமும் எனக்கு விளங்கியது அதாவது நிச்சயமாக இஸ்லாமிய மார்க்கம் உயர்வின் உச்சத்தில் உள்ளது. மடத்தன்மை ,அறிவின்மை ஆகிய அனைத்தையும் விட்டும் முற்றிலும் தூரமாக இருக்கக்கூடிய சிறந்த மார்க்கம். இந்த மார்க்கத்தில் அழகு, நேர்த்தி ,உயர்வு எவ்வாறு அது போதிக்கும் வழிபாடு களில், செயல்களில், ஒழுக்கங்களில் மிஷீர் கிறதோ அதேபோல அதன் நாகரீகத்திலும், உணவிலும், உடையிலும் மிளிர்கிறது. யார் இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்டாலும் அவர் வாழ்ந்து கொண்டிருந்த நிலையிலிருந்து அது இவரை நிச்சயம் உயர்த்தி விடும்.

இரண்டாவது நிகழ்வு ஆங்கிலேய அறிஞர் ஒருவர், இந்திய கிராமவியல் வாழ்வியலை நூலாக எழுதும் நோக்கில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். ஒரு முஸ்லிம் கிராமவாசி மற்றும் இந்து கிராமவாசியிடம் கண்ட வேறுப் பட்ட நடத்தை,பிற மனிதனை இவர்களிரு வரும் பார்க்கும் வேறுப்பட்ட கண்ணோட்டம் இவர்

இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் விரும்புவதற்கு வழிவகுத்தது. பிறகு இஸ்லாத்தையும் ஏற்றுக்கொண்டார்.

அப்படி என்ன நிகழ்வு இவருக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தியது என்று அவருடைய வார்தையிலேயே கேட்போம்:

“நாங்கள் காலையும், மாலையும் கிராம வயல்வெளிகளுக்கு செல்வோம். எங்களது தங்கும் இடங்களிலிருந்து காலையில் வெளியே தொலை தூரம் சென்றோம். அந்த நேரம் அறுவடையின் நேரம். ஆண்களும் பெண்களும் வயல் வழிகளில் அறுவடை செய்து கொண்டிருந்தனர். எனக்கு தாகம் ஏற்பட்டது. நான் தண்ணீரை தேடத் துவங்கினேன். பிறகு ஒரேயொரு விவசாயிடம் மற்றும் சிறிய குவளையில்

தண்ணீர் இருந்தது. அவரை நான் நெருங்கியதும் என்னிடம் இரு கைகளையும் இணைத்து நீட்டுமாறு கூறினார், நானும் நீட்டினேன்."

"உடனே அந்த விவசாயி குவளையிலிருந்த தண்ணீரை என் இரு கரங்களில் ஊற்றினார். கால்நடைகள் உறிஞ்சு குடிப்பது போல என் உள்ளங்கைகளில் ஊற்றப்பட்ட தண்ணீரை நான் உறிஞ்சு குடித்தேன். என் தாகம் தீர்ந்ததும் நகரத் துவங்கினேன். நான் சிறிது நேரம் நடப்பதற்குள் ஒரு சப்தத்தை கேட்டேன். நான் திரும்பிப் பார்த்தேன் அந்த விவசாயியின் மனைவி சிறிய குவலையை தூக்கி எறிந்ததன் சப்தமே அது. குவலையை தீட்டாக்கி விட்டார் என்று தனது கணவரை கோபமாக திட்டத் துவங்கினார், மிகவும் கடுமையாக திட்டினார். சக மனிதன் மற்றொரு மனிதனை இவ்வாறு இழிவுபடுத்தியது, தன் இனத்தைச் சேர்ந்தவனை ஒரு நாயைப் போல நடத்தியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது."

"மற்றொரு தருணம் எனக்கு இதுபோலவே தாகம் ஏற்பட்டது. ஆனால் எனக்கு இப்போது கிடைத்த அனுபவம் இதற்கு முன்னால் கிடைத்த அனுபவத்தை விட வித்தியாசமாக இருந்தது. எனது நண்பர் எனக்காக ஒரு விவசாயிடம் தண்ணீர் கேட்டார். உடனே மலர்ந்த முகத்தோடு வரவேற்று மண் பாண்டத்தை நீட்டினார். முன்பு செய்தது போல எனது இரு உள்ளங்கைகளையும் நீட்டினேன். கால்நடையை போல குடிக்க தயாராகும் போது, அந்த விவசாயி சிளீத்துக் கொண்டே கூறினார், "இப்படி குடிக்க வேண்டாம் குவளையை நன்றாக கையில் பிடித்து நீங்கள் விரும்பிய முறையில் குடியுங்கள்", நான் விரும்பிய முறையில் நீர் அருந்தினேன்."

"பிறகு சிறிது தூரம் மெதுவாக நடந்தேன் முதல் நிகழ்வில் ஏற்பட்டது போல ஏதோ பாத்திரம் தூக்கி எறியப்படுமோ அல்லது மனைவி அவரது கணவரை ஏசுவாரா என்பதை எதிர்பார்த்து

**"இன்றும் உலகில் எங்கு இஸ்லாமியர்களுக்கு பிரச்சினை என்றாலும் உடனே அதனை எதிர்த்து ஆதரவாளர்களாக மாறிவிடுகின்றனர். எங்கோ இஸ்லாமியர் களுக்கு நடக்கும் பிரச்சனைகளை தங்களுக்கு நிகழ்ந்த பிரச்சினையைப் போல வருத்தப் படுவார்கள். இந்த உணர்ச்சிகளே கிலாபத் இயக்கத்தின் சமயத்தில் அற்புதமான முறையில் பிரதிபலித்தது."**

கொண்டிருந்தேன். ஆனால் அப்படி ஒரு நிகழ்வும் நிகழவில்லை. ஒரே வர்க்கம், ஒரே நாட்டைச் சார்ந்த இருவேறு நபர்களிடத்தில் கண்ட வித்தியாசமான நடத்தை எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது."

"இதற்கான காரணம் என்னவென்று வினவினேன்! எனக்கு கூறப்பட்டது. இரண்டாவது விவசாயி அவர் ஒரு முஸ்லிம் அவர் மனிதர்களை தீட்டாக கருதுவதில்லை. மாறாக அவனது உயர்வை, மேன்மையை நம்பிக்கை கொண்டவர். அதேபோல மனிதர்கள் அனைவரும் ஆதாம்(அலை) அவர்களது வழித்தோன்றல்கள். ஆதம்(அலை) அவர்கள் மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். இவ்வாறே குர்ஆன் அவனுக்கு போதித்தது. இவ்வாறே அவனது தூதர் மனிதநேயத்தை கற்பித்தார். இதனாலேயே இஸ்லாம் இந்திய தீபகற்பத்தில் எங்கும் பரவியது. இந்த அனுபவமே இஸ்லாத்தை, அதன் நாகரீகத்தை ஆழமாக படிக்க வேண்டும் என்று எண்ணத்தை எனக்கு

ஏற்படுத்தியது. இதுவே நான் இஸ்லாத்தை ஏற்றதற்கு காரணம்."

இந்திய இஸ்லாமிய சமூகத்தின் மற்றொரு சிறப்பியல்பு, தங்களது உத்தம தூதர் மீது அவர்கள் கொண்டுள்ள நேசம். இந்த நேசமே அவர்களது அடையாளமாக மாறியது. இந்த நேசமானது இந்த சமூகத்தின் வாழ்வியலில், இலக்கியத்தில், கவிதைகளில் வெளிப்பட்டது. உலக புகழ் வாய்ந்த கவிஞர் ஜாமி, குத்ஸி இன்னும் ஈரானின் சில கவிஞர்களது புகழ் மிகுந்த கவிதை படைப்புகளுக்கு பிறகு "அந்நபவிய்யாத்" மதாஹிந் நபவிய்யா என்ற அற்புதமான கவிதை தொகுப்புகள் இந்தியாவில் உருவாகின. நபி(ஸல்) அவர்களது புகழை எடுத்தியம்பும் மிகச் சிறந்த புகழ் பாக்கள், கவிதைகள், கவிதை தொகுப்புகள் அனைத்தும் இந்திய இஸ்லாமிய சமூகத்தில் பிறந்தன.

**"இந்திய இஸ்லாமிய சமூகத்தின் சிறப்பியல்புகளில் மற்றொன்று இஸ்லாம் வந்துதித்த இடத்தின் மீதும் நபி(ஸல்) அவர் களது மதீனா நகரின் மீதும் அவர்களது உள்ளங்கள் கொண்டிருந்த தீராத காதல். இந்த காதலை எடுத்துக் கூறும் நிறைய கவிதைகளை பழைய மற்றும் புதிய கவிஞர்கள் தொகுத்துள்ளனர்."**

பாரசீகம், உருது மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட நபி(ஸல்) அவர்களது புகழ்மாலைகள் ஒரு மகத்தான இலக்கிய கலைக்களஞ்சியத்தை உள்ளடக்கிய மிகப்பெரிய நூலகமாக எழுந்தது.

நபி(ஸல்) அவர்களது தோற்றம், நற்குணங்கள், வாழ்க்கை, பங்கேற்ற போர்கள் என அனைத்தையும் அந்த கவிதைகள் வர்ணித்தன. இந்த கவிதைகள் முஸ்லிம்களது உள்ளங்களில் நேசத்தை தூண்டியது, ஈமானை பலப்படுத்தியது. இந்த கவிதைகள் மார்க்கத்தின் மீது முஸ்லிம்கள் கொண்டுள்ள வலுவான பற்றையும் கவியின் மீது அவர்கள் கொண்டுள்ள களப்பற்ற ஆழமான அன்பையும் பிரதிபலித்தது. இந்த தலைப்பில் மட்டும் புகழ் பாடக் கூடிய மிகப்பெரும் கவிஞர்கள் உருவாகினர். அவர்களில் சிலர் இதற்காகவே தங்களது வாழ்வை அர்ப்பணித்தனர்.

விசாலமான சிந்தனை, அறிவு சார்ந்த தொடர்பை ஏற்படுத்துவதில் பேரார்வம் கொண்டிருப்பது, இந்திய இஸ்லாமிய சமூகத்தின் மற்றொரு சிறப்பியல்பு. இனவெறி, தேசியவாதம், தேசபக்தி இவை அனைத்திற்கும் எதிரானவர்களாக திகழ்ந்தார்கள். அவர்களது பார்வை என்றுமே உலகளாவிய விசாலமான பார்வையாக இருந்தது. மனித குல ஒற்றுமை இஸ்லாமியர்களின் ஒற்றுமை என்ற லட்சியத்தை கொண்ட எந்த அமைப்பானாலும் உடனே அதனை நோக்கி அவர்கள் விரைவதன் ரகசியமும் இதுவே.

இதனாலேயே இன்றும் உலகில் எங்கு இஸ்லாமியர்களுக்கு பிரச்சினை என்றாலும் உடனே அதனை எதிர்த்து ஆதரவாளர்களாக மாறிவிடுகின்றனர். எங்கோ இஸ்லாமியர் களுக்கு நடக்கும் பிரச்சனைகளை தங்களுக்கு நிகழ்ந்த பிரச்சினையைப் போல வருத்தப் படுவார்கள். இந்த உணர்ச்சிகளே கிலாபத் இயக்கத்தின் சமயத்தில் அற்புதமான முறையில் பிரதிபலித்தது. வேறு எந்த பிரச்சனைக்கும் வழங்காத மகத்தான பேராதரவை இந்த பிரச்சினைக்காக வழங்கினர். இதே உணர்வுகள்தான் முஸ்லிம் களுக்கு ஆதரவாக திரிப்பொலி மற்றும் பால்கான் நாடுகளது போர்க்காலங்களிலும் வெளிப்பட்டது.

இஸ்லாமியர்களது ஒற்றுமையின் மீது இந்திய முஸ்லிம்கள் கொண்டிருந்த ஆணித் தரமான நம்பிக்கையை இது எடுத்துக் காட்டுகிறது. இதேபோல ஃபாலஸ்தீன பிரச்சனைக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளித்து அதற்கு ஆதரவாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பல கருத்தரங்குகளை நடத்தியது. இந்திய பத்திரிகைகளுக்கும் இதில் மிகப்பெரிய பங்கு உண்டு.

இந்திய இஸ்லாமிய சிறுபான்மை சமூகம்

பெரும்பான்மை சமூகத்தோடு இணைந்து தனித்துவத்தை இழக்காததும், இஸ்லாமிய உலகத்தோடு தனது உறவை துண்டிக்காததுமே இவ்வனைத்திற்குமான உலகறிந்த இரகசியம்.

இந்திய இஸ்லாமிய சமூகத்தின் சிறப்பியல்புகளில் மற்றொன்று இஸ்லாம் வந்துதித்த இடத்தின் மீதும் நபி(ஸல்) அவர்களது மதீனா நகரின் மீதும் அவர்களது உள்ளங்கள் கொண்டிருந்த தீராத காதல். இந்த காதலை எடுத்துக் கூறும் நிறைய கவிதைகளை பழைய மற்றும் புதிய கவிஞர்கள் தொகுத்துள்ளனர்.

இதனால் தேசியவாதம் பேசக்கூடியவர்கள், முஸ்லிம்கள் தங்களின் மார்க்கத்தின் மூலமாக வெளியுலகோடு கொண்டுள்ள இந்த ஆத்மார்த்த உறவை குறையாக காண்கின்றனர். ஏனென்றால் வெளியுலகோடு அவர்கள் கொண்டிருக்கும் பற்று அவர்களது தேசப் பற்றுக்கு முரணானது என்று கருதுகிறார்கள். எதார்த்தத்தில் இதில் எந்த ஒரு முரண்பாடும் இல்லை. ஒரு மனிதனால் இரண்டையும் ஒரே சமயத்தில் நேசிக்க இயலும்.

அரபு தீபகற்பம் என்பது அங்கிருந்தே இஸ்லாமிய அருள்ஜோதி சுடர்விட்டது. முஸ்லிம்களை அறியாமை காலத்து பழக்க வழக்கங்களிலிருந்தும், சிலை வழிபாட்டிலிருந்தும் காப்பாற்றியது. இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி வெளியேற்றியது. இதனால் இந்திய இஸ்லாமிய சமூகம் இவ்வனைத்திலிருந்து தங்களையும் காப்பாற்றிய புனித பூமியாக, இஸ்லாத்தின் பிறப்பிடமாக, இஸ்லாமிய கலாச்சாரத்தின் தலைமை கேந்திரமாக இந்நகரங்களை கருதுகிறார்கள்.


இத்தகைய பரிசுத்த நகரத்திற்கு ஆண்டு தோறும் மிகப்பெரும் எண்ணிக்கையில் ஹஜ்ஜிற்கு சென்று வருகிறார்கள்.

அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றில் இந்திய இஸ்லாமிய சமூகம் பின்னடைவை சந்தித்திருந்தாலும் இன்றும் இந்த சமூகத்திடத்தில் பல்வேறு நல்லொழுக்கங்களிலும், பழக்க வழக்கங்களிலும் சிறந்து விளங்குகிறார்கள். நாகரிகத்திலும், பண்பாட்டிலும் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்திருந்தும் கூட இன்றும் நிர்வாகத் திறன், விவேகமான முடிவு, ஆக்கபூர்வமான செயல்பாடு ஆகியவற்றில் இந்திய இஸ்லாமிய சமூகம் சிறந்த விளங்குகிறது.

இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர்களே இந்தியாவில் பிரச்சினைகள் நிறைந்த பல பொறுப்புகளில் அமர்த்தப்படுகிறார்கள். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்களில் பணி புரிகிறார்கள். அமானிதம், கீழ்த்தரமான ஒழுக்கங்களை விட்டு தூரமாக இருக்கும் நல்ல பண்புகளை கொண்டிருப்பதனால், அரசாங்கத்தின் நம்பிக்கையை வென்றவர்களாக இருப்பதனால் பொறுப்புணர்வு, நிலைத்தன்மை, புத்திகூர்மை ஆகியவை தேவைப்படும் அனைத்து அரசாங்க பொறுப்புகளுமே அவர்களிடையே ஒப்படைக்கப்படுகிறது.

தொடரும்.....

தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி


வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

விலை 120/-

போன் : 7401213394 / 7358278146
8148129887

# தூத்துக்குடி மாவட்டம் வெள்ள நிவாரணம் பணிகள் 22/12/2023



பொள்ளாச்சி நண்பர் குழு சார்பாக 3.1/2 (மூன்றரை) இலட்சம் மதிப்பிலான வெள்ள நிவாரண பொருட்கள், 1000 நபர்களுக்கு பொள்ளாச்சியிலிருந்து தூத்துக்குடிக்கு சென்றது. இதில் அத்தியாவசிய தேவையான பெட்சீட், டவல், நாப்கின், பிஸ்கட், தண்ணீர் பாட்டில், பல்பொடி, மெழுகுவத்தி, லுங்கி, பனியன், சட்டை, பால், மாவு போன்ற பொருட்களுடன் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளுக்கு புத்தன் தருவை மண்ணின் மைந்தர்கள் S.A.முஹம்மது யாஸர், S.A.ரியாஸ், ஃபாரிஸ் கான், ஜாகீர் ஹூஸைன் அவர்களின் வழிகாட்டுதலின் படி தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகர், தெற்கு தெரு மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களுக்கும், ஆத்தூர், சேதுவாய்கால் பகுதியை சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மாற்றுமத சகோதரர்கள் 600 நபர்கள் உட்பட 1000 பேருக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் குறிப்பாக ஆழ்வார் திருநகர் ஜமாஅத்தை சேர்ந்த இளைஞர்கள் பெரும் உதவியை செய்தார்கள். நாம் யாரையும் வரவைத்து ஓர் இடத்தில் வைத்து நிவாரண பொருட்களை கொடுக்கவில்லை. வீடு வீடாக சென்று பொருட்களை வழங்கினோம். அல்ஹம்துலில்லாஹ்

மதியம் புரையூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களை கொடுக்க சென்றோம். அங்குள்ள முஸ்லிம்கள் எங்களுக்கு வேண்டாம் மாற்று மதத்தை சார்ந்தவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் அவர்களுக்கு இந்த பொருட்களை கொடுக்குமாறு சொல்லிவிட்டார்கள். அதன்பின் அங்குள்ள ஜமாஅத் இளைஞர்கள் பெருவாரியாக பொருட்கள் எளிதாக கொண்டு சேர்க்க நமக்கு உதவி செய்தார்கள். எங்களுக்கு உணவு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். எங்களுடன் மாலை 7மணி வரை இருந்து எங்களுடன் நிவாரணம் பொருட்கள் வழங்கிட உறுதுணையாக இருந்தார்கள்.



சேது வாய்க்கால் முஸ்லிம் தெருக்களுக்குள் உள்ள 98 வீடுகளுக்கு நிவாரண பொருட்கள் எடுத்துச் சென்றோம். அங்குள்ள முஸ்லிம் ஜமாஅத்தார்கள் எங்களைவிட மாற்றுமதத்தை சார்ந்தவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் அவர்களுக்கு இதை கொடுக்க சொல்லி அந்த கிராமங்களுக்கு வழிகாட்டினார்கள். சேது வாய்க்கால் இளைஞர்களும் நமக்கு உதவி செய்தார்கள். கடந்த 22-12-2023 அன்று இந்த பகுதிகளுக்கு அல்லாஹ்வின் பெரும் உதவியால் நிவாரண பொருட்கள் நல்ல முறையில் கொடுக்கப்பட்டது.

பொள்ளாச்சி நண்பர்கள் குழு சார்பாக M.S.சிராஜுதீன் அவர்கள் தலைமையில் 10 நபர்களும், புத்தன் தருவை மண்ணின் மைந்தர்கள் சார்பாக 4 நபர்களும் கலந்துக் கொண்டு இந்த நிவாரண பணியை செய்துள்ளோம். இதற்கு உறுதுனையாக ஆழ்வார் திருநகர் ஜமாஅத்தை சார்ந்த இளைஞர்களும், சேது வாய்கால் ஜமாஅத்தை சார்ந்த இளைஞர்களும், புரையூர் ஜமாஅத்தை சார்ந்த இளைஞர்களும் பெருவாரியாக நமக்கு உறுதுணையாக இருந்தார்கள். இந்த நிவாரண பணிகள் ஒரே நாளில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.அல்ஹம்துலில்லாஹ்!

- S.A.**முஹம்மது யாஸர் (புத்தன் தருவை)**

# தூத்துக்குடி மாவட்டம் - இரண்டாம் கட்ட வெள்ள நிவாரண பணிகள் - 30/12/2023









மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பகுதியில் சிருதண்டநல்லூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களுக்கு பொள்ளாச்சி நண்பர்கள் குழு மற்றும் புத்தன் தருவை மண்ணின் மைந்தர்கள் இணைந்து ஏற்பாடு செய்து M.S.சிராஜுதீன் அவர்களின் தலைமையில் கடந்த **30-12-2023** அன்று வீடு வீடாக சென்று, சுமார் **3** இலட்சம் மதிப்பிலான **5** கிலோ அரிசி, சீனி, ஆயில், மளிகை பொருட்கள் **520** குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறுதண்டநல்லூரை சேர்ந்த ஜமாஅத் இளைஞர்கள் பொருட்களை கொண்டு வழங்குவதற்ககு இறுதிவரையில் ஒத்துழைப்பு கொடுத்தார்கள்.

மூன்றாம் கட்ட வெள்ள நிவாரணமாக புத்தன் தருவை மண்ணின் மைந்தர் S.M.அமீனுத்தீன் அவர்களின் ஏற்பாட்டில் கொடாளி தயிலம் **12**ஆயிரம் பாட்டில்கள் புத்தன் தருவை மற்றும் சுற்றுவட்டார ஊர்களான மேட்டுவிலை, திசையன்விலை, செல்வமருதூர் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் வெள்ளம் அதிகமாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, ஆத்தூர் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது.












# டெல்லி கலவரம்
# வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்

**அன்பார்ந்த வாசகர்களே! இந்த தொடர் கடைசியாக மே 2023 வைகறை வெளிச்சத்தில் வெளிவந்தது. அதன் பிறகு 7 மாதங்கள் கழித்து இப்போதுதான் வெளிவருகின்றது. காரணம், இந்த ஆய்வறிக்கையில் ஆதாரங்களாக கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு செய்திகளின் லிங்குகளில் சென்று பார்த்தால் அந்த தகவல்கள் அந்த பக்கங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. ஆதாலால் சொல்லப்பட்டுள்ள தகவல்களுக்கு வேறு செய்தி நிறுவனங்களில் வெளிவந்த செய்திகளை தேடி சரிபார்த்து வெளியிடக்கூடிய ஒரு சூழல் உருவாகியதால் இந்த காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இனி வரக்கூடிய காலங்களில் இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து வெளிவரும். எனவே வாசகர்கள் மே 2023 இதழில் வெளிவந்த முந்தைய தொடரை பார்த்துவிட்டு இந்த தொடரை படிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மொ-ர்**

**வகுப்புவாத வன்முறையின் ஆரம்பம்**

*பிப்ரவரி 23 - பிற்பகலில் முஸ்லிம்களுக்கு எதிரான வகுப்புவாத வன்முறைகள் தொடங்கின. CAA போராட்ட களத்திற்கு சிறிதும் சம்மந்தமில்லாத வகையில் வன்முறைகள் வெடித்தன.*

*கள நிலவர ஆய்வறிக்கைகளின் படி, கபில் மிஷ்ரா மவுஜ்பூர் சவுக்கில் பேசிய ஒரு மணி நேரத்திற்கு பின்னர், CAA ஆதரவாளர்களும், CAA எதிர்ப்பு போராட்டக் காரர்களும் ஒருவரை ஒருவர் கற்களை கொண்டு தாக்கிக் கொண்டனர். ஜாஃப்ரா பாத்திலும் இதேபோன்று தாக்குதல்கள் தொடங்கின. பின்னர் இந்த வன்முறை வெறியாட்டங்கள் அப்படியே பாபர்பூரை நோக்கி பரவியது.*

*விஜய் பார்க்-ஐ சேர்ந்த ஒரு கும்பல், பாபர்பூர் சந்திப்பில் குழுமி, அந்த வழியாக கடந்து செல்லும் அனைவரையும் நிறுத்தி, “நீ முஸ்லிமா? இந்துவா?” என்று கேட்க தொடங்கினர். சிலரை வற்புருத்தி தங்களது மத அடையாளங்களை வெளிப்படுத்துமாறு நிர்பந்தித்தனர்.*

**2020 டெல்லி கலவரம் குறித்த “குடிமக்கள் குழுமத்தின்” அறிக்கை**

அதே நாள் இரவில் மவுஜ்பூர் காலனியிலும் வன்முறை வெடித்தது. மவுஜ்பூர் காலனி அனைத்து மதத்தினரும் வாழும் பகுதியாகும். அந்த காலனியை சார்ந்த ஒருவர் கூறும்போது,

"இத்தனை ஆண்டுகள் எங்களுக்கு அண்டை வீட்டுக்காரராக இருந்தவர்களெல்லாம் எங்கள் வீடுகள் மீதும், எங்கள் மீதும் கற்களை வீசினர்." என்கிறார்.

மேலும் ஆட்டோக்களில் இந்து குடும்பங்களை சேர்ந்த ஆண்களை அழைத்து சென்று கற்களையும் சேகரித்துள்ளனர்.

இப்படி படிப்படியாக வன்முறையாளர்கள், கராவல் நகர், சாந்த்பாக் போன்ற பகுதிகளில் கலவரங்களை ஏற்படுத்தினர். காவல்துறையும் இவர்களை அடக்குவதற்காக, கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் லத்தி சார்ச்களை பயன் படுத்தினர்.

**டெல்லி காவல்துறையின் எச்சரிக்கைகள்**

கபில் மிஸ்ரா மவுஜ்பூர் சவூக்-இல் பேசும் போது வன்முறைக்கான அழைப்பு விடுத்த பிறகு, டெல்லி காவல்துறையின் சிறப்பு பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவு அமைப்பினர் டெல்லியின் வடகிழக்கு மாவட்ட காவல்துறை தலைமையகத்திற்கு ஆறு எச்சரிக்கை பதிவுகளை பிப்ரவரி 23 அன்றே அனுப்பியுள்ளது.

முதல் எச்சரிக்கை பதிவானது, கபில் மிஸ்ரா தனது ஆதரவாளர்களை மவுஜ்பூர் சவூக் பகுதியில் ஒன்று கூடுமாறு தனது டிவிட்டர் பதிவின் மூலம் அறிவிப்பு செய்தபின் அந்த பகுதியில் காவல் துறையினரை பாதுகாப்புக்கு அதிகப்படுத்துமாறு வலியுறுத்தி அனுப்பப்பட்டதாகும். மீதமுள்ள ஐந்து பதிவுகளும், வன்முறையாளர்கள் கூடிய பின் அனுப்பப்பட்டதாகும்.

**பிப்ரவரி 24 - 2020, வடகிழக்கு டெல்லி முழுவதும் வகுப்புவாத வன்முறை பரவியது**

மவுஜ்பூர் சவூக் மற்றும் ஜாஃப்ராபாத்தில் தொடங்கிய வன்முறை பிப்ரவரி 24 அன்று வடகிழக்கு டெல்லி முழுவதும் பரவ தொடங்கியது.

ஜாஃப்ராபாத் மெட்ரோ ரயில் நிலையத்தில் CAA எதிர்ப்பாளர்கள் 100க்கும் மேற்பட்டோர் கூடினர். அவர்கள் காவல்துறையின் தடுப்புகளை பயன்படுத்தி தங்களிடம் உள்ள இளம் ஆண்கள் மற்றும் பெண்களை கொண்டு பாதுகாத்து கொண்டனர். தங்களது போராட்ட களம் தாக்கப் படலாம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அதனால் அவர்கள் முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டனர்.

அங்கிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் மவுஜ்பூர் சவூக்கில் CAA ஆதரவு வன்முறை யாளர்கள் கூடினர். பிப்ரவரி 23 அன்றைய இரவு முழுவதும், ராகினி திவாரி, அஞ்சலி வர்மா போன்ற நபர்கள் தங்களது ஆதவரவாளர்களை திரட்டினர். 24 - பிபரவரி அன்று காலை 5.35 மணி வரை அஞ்சலி வர்மா தனது முகநூல் பக்கத்தில் நேரலையில் ஆட்களை திரட்டிக் கொண்டிருந்தார்.

ரோகினி திவாரி வெளியிட்ட ஒரு வீடியோ பதிவில், அவர் சில ஆண்களை அழைத்து கோஷங்களை எழுப்பி கத்த சொல்கிறார். அவர்களும்,

"மோடிஜி லாம்பே லாத் பஜாவ்! ஹும் தும்ஹரே சாத் ஹைன்! ஜரூரத் படி தோ ஹும்மே புலா லோ! ஹும் தும்ஹரே சாத் ஹைன்!" என்று முழக்கங்களை இட்டனர். அதாவது, "மோடிஜி, பெரிய கம்புகளை வைத்து அடித்து அவர்களை விரட்டி யடியுங்கள். நாங்கள் உங்களோடு இருக்கின்றோம். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எங்களை அழைக்கலாம். நாங்கள் உங்களோடுதான் இருக்கின்றோம்." என்று கோஷங்களை எழுப்பினர்.

அதே வீடியோ பதிவில் ரோகினி திவாரி இப்படி கூறுகின்றார்,

"பாரத் மெயின் யாதி ரெஹ்னா ஹைதூ ஜெய் ஸ்ரிராம் ரெஹ்னா ஹோகா". அதாவது, "இந்தியாவில் நீங்கள் வாழ வேண்டும் என்றால், ஜெய் ஸ்ரிராம் என்ற முழக்கத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்." என்று கூறிகின்றார்.

இதற்கு பிறகு அஞ்சலி வர்மா தனது பார்வையாளர்களிடம் பேசுகிறார். அதில்,

"நாங்கள் அனைவரும் மவுஜ்பூர் சவூக்கில் கூடியுள்ளோம். நேற்றைய இரவிலிருந்து இங்கே இருக்கின்றோம். நாங்கள் விடப்போதில்லை. அனைத்து இந்துக்களும் இங்கே வருமாறு அழைக்கின்றேன். (ஆஜ் பஹூத் படா தண்டவ் கர்னா ஹே!) நாங்கள் இங்கே ஒரு பெரிய கொந்தளிப்பை உருவாக்க போகின்றோம். இந்துக்கள் விழித்துக் கொண்டார்கள். இங்கே ஒரு பாகிஸ்தான் உருவாக விடமாட்டோம்."

என்று கூறி தனது பதிவை முடித்தார்.

அவரது இந்த பதிவு ஒரு மணி நேரத்தில் 49000 பார்வையாளர்களை பெற்றிருந்தது.

**மவுஜ்பூர் சவுக் மற்றும் ஜாஃப்ராபாதில் நடந்த வன்முறை**

களத்தில் செய்தி சேகரித்து கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் சொன்ன தகவலின் படி, "மவுஜ்பூர் சவுக்கில் பிப்ரவரி 24 அன்று மக்கள் வெளிப்படையாகவே ஆயுதங்களை திரட்டிக் கொண்டிருந்தனர். உருட்டு கட்டைகள், இரும்பு ராடுகள், கிரிக்கெட் ஸ்டம்புகள், ஹாக்கி ஸ்டிக்கு கள், போன்றவற்றை சேகரித்து கொண்டிருந்தனர்."

மேலும், "தேஷ்கே கடாரன் கோ, கோலி மாரோ சாலன் கோ(தீவிரவாதிகளை சுடுங்கள்), கிஷ்கோ சாஹியே ஆஸாதி, ஹும்தே தெங்கே ஆஸாதி(யாருக்கெல்லாம் சுதந்திரம் வேண்டுமோ, அவர்களுக்கு நாங்கள் தருகின்றோம் சுதந்திரம்) போன்ற வார்த்தைகளை தாங்கிய பதாகைகளையும் ஏந்தி கொண்டு மக்கள் கூடிக் கொண்டிருந்தனர்.

ஜாஃப்ராபாத் போராட்டக்காரர்களும், மவுஜ்பூர் வன்முறையாளர்களும் பகல் முழுவதும் சாலைகளில் கற்களை வீசி தாக்கிக் கொண்டனர். இதில் மவுஜ்பூரில் உள்ள கடைகளும், வாகனங்களும் தீ வைத்து கொளுத்தப்பட்டன. கலவரத்தை கட்டுப்படுத்த காவல்துறையினரும் அதிகளவில் இருந்தனர். ஆனால் அவர்கள் கண்ணீர் புகை குண்டுகளை மட்டுமே வீசி அவர்களை கலைக்க முற்பட்டனர்.

அன்று மதியம் ஒரு பத்திரிகையாளர் CAA ஆதரவு போராட்டக்காரர்கள் இருக்கும் இடத்திலிருந்து நூறு மீட்டர் தொலைவில் ஒரு மெத்தை கடை முழுவதுமாக எரிவதை பார்த்தார். எரியும் அந்த கடை முன் நின்று கொண்டு ஒரு வன்முறை குழு, "ஜெய் ஸ்ரி ராம், பாரத் மாதாகி ஜெய்" என்று முழக்கங்களை இட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்கள் பத்திரிகையாளர்களிடம், வீடியோக்களோ, புகைப்படங்களோ எடுக்கக் கூடாது என்று மிரட்டினர். காவல்துறையினர் அருகில் இருந்தும் எந்த நடவடிக்கையும் அவர்கள் மேல் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த சம்பவம் நடந்து கொண்டிருக்கும் போதே அடுத்த அரை மணி நேரத்தில், வன்முறை குழுவை சேர்ந்த ஒருவர், எரிந்து கொண்டிருக்கும் மெத்தை கடைக்கு அடுத்து இருக்கும் கடையை கொளுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இந்த முறை காவல்துறை அந்த நபரை தடுத்து விட்டது. அவர் மவுஜ்பூர் சவுக் கும்பலிடம் ஓடி ஒலிந்து கொண்டார்.

அந்த மனிதன் தான் மவுஜ்பூர் 66 அடி சாலையில் காவல்துறையை நோக்கி துப்பாக்கியால் சுடுகிறார். அவர் துப்பாக்கியால் சுடும் வீடியோ வைரல் ஆகியது. பின்னர் காவல்துறை அவனை அடையாளம் கண்டு கைது செய்தனர்.

இன்னொரு கள அறிக்கையின் படி, மவுஜ்பூரில் இருந்த 80 சதவிகிதம் கடைகள் நாசமாக்கப் பட்டுவிட்டன.

**பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள்**

இந்த வன்முறை வெறியாட்டத்தில் செய்தி சேகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களும் தாக்கப் பட்டுள்ளனர். மேலும் அந்த வன்முறையாளர்கள் பத்திரிகையாளர்களின் மதங்களை தெரிந்து கொள்ள அவர்களை துன்புறுத்தியுள்ளனர். அவர்களது செல்போன்கள், கேமாராக்கள் போன்றவற்றை அழித்துள்ளனர். அதுகுறித்து பின்வரும் பத்திரிகையாளர்கள் விவரிக்கின்றனர்;

**பர்வீனா புர்கயாஸ்தா**

டைஸ்ம் நவ் ஊடகத்தின் செய்தி ஒருங்கினைப்பாளரான இவர், தனது டிவிட்டர் பக்கத்தில் ஒரு வீடியோ பதிவை வெளியிட்டார். அதில்.




"மவுஜ்பூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் தன்னை ஆறு பேர் கொண்ட வன்முறையாளர்கள் குழு சூழ்ந்து கொண்டதாகவும், அவர்கள் தன்னை மரக்கட்டைகளால் அடிக்க முன் வருகிறார்கள் என்றும், தன்னை போக விடுமாறு கெஞ்சிக் கொண்டிருக்கின்றேன்." என்று பதிவிட்டிருந்தார்.

**ஸ்ரேயா சட்டர்ஜி**

நியூஸ் எக்ஸ் ஊடகத்தின் முன்னாள் பத்திரிகையாளரான இவர் தனது டிவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டிருந்தார். அதில்,



Sreya
@Sreya_Chattrjee

@KapilMishra_IND should be arrested. Pro-CAA protestors came to me and said, "Yeh Hindu o ki ladai hai, aaj ar ya par".

They didn't allow us record by threatening us. They attacked each every Muslim who was not even a part of protest.

Didn't wanna right this, but had to!

7:05 PM · Feb 24, 2020

245 Reposts 4 Quotes 596 Likes 5 Bookmarks

“மவூஜ்பூரில் உள்ள CAA ஆதரவு வன்முறையாளர்கள் தன்னையும், தன்னுடன் இருந்த பத்திரிகையாளர்கள் குழுவையும் சூழ்ந்து கொண்டனர் என்றும், இங்கே வீடியோக்கள், புகைப்படங்கள் எடுக்க கூடாது என்று மிரட்டு கின்றனர் என்றும் கூறுகின்றார். மேலும் அந்த வன்முறை யாளர்கள், “ஹிந்துன் கீ லடாயி ஹே! ஹுமாரா சாத் டிஜியே, ரெகார்ட் மேட் கிஜியே, ஹும் பாஸ் ஜயேன்கே (இது இந்துக்களுக்காக நடக்கின்ற யுத்தம். இங்கு நீங்கள் எங்களுக்கு ஆதரவுதான் அளிக்க வேண்டும். இதையெல்லாம் பதிவு செய்ய கூடாது. இதனால் நாங்கள் பாதிக்கப்பட கூடும்)” என்று முழங்கியதாக பதிவு செய்துள்ளார்.

**அநிந்த்யா சட்டோபாத்யாய்**

டைம்ஸ் ஆப் இந்தியாவின் புகைப்பட பத்திரிகையாளரான இவர் தனக்கு நேர்ந்த மோசமான அனுபவத்தை பகிர்கிறார்.



EDITION IN

THE TIMES OF INDIA

City Delhi Mumbai Bengaluru Hyderabad Kolkata Chennai Agra Agartala Ahmedabad Ajmer Allahabad

CIVIC ISSUES DELHI MCD ELECTIONS CRIME POLITICS SCHOOL AND COLLEGES CITIZEN REPORTER VIDEOS PHOTOS WEATHER

NEWS / CITY NEWS / DELHI NEWS / 'Are You Hindu Or Muslim?': TOI Photojournalist Re...

TRENDING Covid Cases in India Agra Gang Rape News Noida News Goa Covid News

THIS STORY IS FROM FEBRUARY 24, 2020

'Are you Hindu or Muslim?': TOI photojournalist recounts Maujpur horror

Anindya Chattopadhyay / TNN / Updated: Feb 25, 2020, 12:11 IST

SHARE FOLLOW US

“நான் மவுஜ்பூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் காலடி எடுத்து வைத்தவுடன், ஹிந்து சேனா அமைப்பை சார்ந்த சிலர் என்னருகில் வந்து, என் நெற்றியில் ஒரு திலகத்தை வைத்தனர். “இது இங்கு உங்கள் வேலையை சுலபமாக்கும்” என்று கூறி சென்றனர். பின்னர் நான் அங்கு எரிந்து கொண்டிருக்கும் ஒரு கடையை புகைப்படம் எடுத்தேன். உடனே என்னை ஒரு கும்பல் சூழ்ந்து கொண்டது. அவர்கள் கைகளில், இரும்பு ராடு, உருட்டு கட்டைகள் இருந்தன. அவர்கள் என்னுடைய கேமிராவை உடைக்க முற்பட்டனர். பின் என் நண்பர் சாக்ஸி சாந்த் உள்ளே நுழைந்து என்னை காப்பாற்றினார். பின்னர் சிறிது நேரம் கழித்து ஒரு வன்முறை குழு என்னை பின் தொடர்ந்து வந்தும், அடாவடியாக என்னுடைய பேண்டை (கால்சட்டையை) கழட்ட சொன்னார்கள். நான், இந்துவா, முஸ்லிமா என்று அவர்கள் தெரிந்துகொள்ள நினைத்தனர். பின்னர் நான் அவர்களிடம் என்னை விட்டு விடுமாறு பிச்சையெடுக்காத குறையாக கெஞ்சினேன்.”

**சிவ நாராயனன் ராஜ் புரோஹித்**

இவர் இந்தியன் எக்ஸ்பிரஸில் தனக்கு நடந்த அனுபவத்தை சொல்கிறார்,



News / Cities / Delhi / 'Hindu ho? Bach gaye' Express journalist's account from Karawal Nagar

Premium

'Hindu ho? Bach gaye' Express journalist's account from Karawal Nagar

Delhi violence: The Indian Express journalist Shivnarayan Rajpurohit on being confronted by a mob that assaulted him, snatched his phone and smashed his spectacles.

“கராவல் நகரில் சிகிகி ஆதரவு வன்முறை யாளர்கள் என்னை பலமுறை தாக்கினர். என்னுடைய செல்போனை பிடிங்கிக் கொண்டனர். என்னுடைய நோட்டுபுக்குகளை கொளுத்தினர். உன்னால் இங்கே செய்திகளை சேகரிக்க முடியாது. உனக்கு உயிர் முக்கியமா? அல்லது உன்னுடைய போன் முக்கியமா என்று கேட்டு என்னை இரும்பு ராடுகளால் தாக்கினர். நான் எனது செல்போனை கொடுத்துவிட்ட பிறகும் என்னை பின் தொடர்ந்தனர். மீண்டும் என்னிடம் வந்து சரமாறியாக அறைந்தனர். என்னுடைய கண்ணாடியை உடைத்தனர். பின்னர் என்னுடைய அடையாள அட்டையை பார்த்து நான் இந்து என்பதை தெரிந்து கொண்ட பின், “உயிரை காப்பாற்றி கொள்ள இங்கிருந்து ஓடி விடு” என்று

விரட்டியடித்தனர். நான் அங்கிருந்து தப்பித்து இன்னொரு கும்பலிடம் மாட்டிக் கொண்டேன். பின்னர் அவர்களிடம் சமாளித்து தப்பித்து வந்தேன்."

**தானுஷ்ரி பாண்டே**

இந்தியா டுடே பத்திரிகையாளரான இவர் தனது டிவிட்டர் பக்கத்தில்,



Tanushree Pandey
@TanushreePande

This is a riot! Protesters from both sides heckling & thrashing media persons. I was told "Camera band karle warna gaad denge yahin pe". All this while 10 men were holding me tightly from my waist & shoulders. Have never felt so scared! Camera person was pushed badly with lathis

5:48 PM · Feb 24, 2020 from New Delhi, India

527 Reposts 41 Quotes 1,021 Likes 15 Bookmarks

"மவூஜ்பூரில் பத்து வன்முறையாளர்கள் எனது தோள்பட்டையை பிடித்து இழுத்தனர். நான் மிகவும் பயந்துவிட்டேன். அவர்கள் என்னிடம், "கேமிரா பாண்ட் கர்லே, வார்னா காட் டாங்கே யஹின்பே". (கேமிராவை அனைத்து விடு. இல்லையென்றால் கொளுத்தி விடுவோம்.) என்று கூறினர்.

**விஜய்தா லால்வானி**

ஸ்க்ரோல் ஊடகத்தை சார்ந்த இவர் சொல்லும் போது,



THE TIMES OF INDIA

City Delhi Mumbai Bengaluru Hyderabad Kolkata Chennai Agra Agartala Ahmedabad Ajmer

POLITICS DELHI MCD ELECTIONS CIVIC ISSUES CRIME SCHOOL AND COLLEGES CITIZEN REPORTER VIDEOS PHOTOS

NEWS / CITY NEWS / DELHI NEWS / Anti-CAA Protest In Delhi: Nobody Speaks For Us, ...

THIS STORY IS FROM FEBRUARY 24, 2020

Anti-CAA protest in Delhi: Nobody speaks for us, say women at Jafrabad sit-in

Anam Ajmal / TNN / Updated: Feb 25, 2020, 06:21 IST

"நான் அங்கே ஒரு நடுத்தர வயதுடைய நபரை கண்டேன். அவர் காவி திலகம் வைத்திருந்தார். அவர் பத்திரிகையாளர்களை நோக்கி இப்படி கத்தி கொண்டிருந்தார், "மவூஜ்பூர் எரிவதை படம் பிடிப்பதை நிறுத்துங்கள். "படே தினான் கே பாட் ஹிந்து ஜாகா ஹே". (நீண்ட நாட்கள் கழித்து இப்போதுதான் ஹிந்துக்கள் விழித்திருக்கிறார்கள்)" என்று! அவர் தன்னை CAA ஆதரவாளராக காட்டிக் கொண்டார்.

**கேரவான் பத்திரிகையாளர்**



HINDI THE CARAVAN

NEWS / CONFLICT

Media barred, police attacked protesters: Two photojournalists recount the Delhi violence

THE CARAVAN

25 February 2020

கேரவான் பத்திரிகையின் ஒரு புகைப்பட பத்திரிகையாளர் தனது அனுபவத்தை சொல்கிறார்,

"இரண்டு தரப்பு குழுவினரும் மீடியாவை சந்திக்க விரும்பவில்லை. மவூஜ்பூர் சவும் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் முஸ்லிம்கள் தாக்கப்படப் போகிறார்கள் என்பதை அறிந்தவுடன் நாங்கள் கேமிராக்களுடன் களத்திற்கு சென்றோம். ஆனால் எங்களிடம் கேமிராக்கள் இருப்பதை வன்முறையாளர்கள் பார்த்துவிட்டனர். மேலும் என்னுடன் வந்த ஒரு முஸ்லிம் பத்திரிகையாளரையும் அவர்கள் அடையாளம் கண்டுவிட்டனர். அதனால் நாங்கள் அங்கிருந்து தப்பி வந்துவிட்டோம்."

இன்னும் இந்த வகுப்புவாத வன்முறையை மிக நேர்த்தியாக டெல்லியின் மற்ற பகுதிகளில் எப்படி இவர்கள் செயல்படுத்தினார்கள் என்பதை அடுத்த இதழில் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்.....!

**- Jasmine Fathima** B.Sc, B.Ed, LLB.,

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002